விலை ரூபா: 20.00

# தமிழ்நாதம்
Thamil Naatham

டெங்கு ஒழிப்புப் பணியில் அணி திரள்வோம்

இராகம் 01 | தாளம் 110 | வள்ளுவர் ஆண்டு 2043 கார்த்திகை 05 செவ்வாய்க்கிழமை (20.11.2012) | பக்கங்கள்: பதினாறு


# ஒன்பது மாகாணங்களை 4, 5 பிராந்தியங்கள் ஆக்குக

## புதிய அதிகாரப் பகிர்வு அலகுக்கு சம்பந்தன் ஆலோசனை

(கொழும்பு)

“அதிகாரப் பகிர்வு அலகினை மையமாக வைத்து அதிகாரப் பகிர்வு சம்பந்தமான பல்வேறு பகிர்வு யோசனைகளை ஆராய் வதற்கு விசேடமானதொரு பாராளுமன்றத் தெரிவுக் கமிட்டியை அல்லது வேறு ஏதாவது ஒரு முறைமையினை நியமிப்ப தற்கு சுதந்திரக் கட்சி தலைமையிலான கூட்டணி அரசாங்கம் முன்வர வேண்டும்” இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் ஆர்.சம்பந்தன் தெரிவித்தார்.

ஆகக் கூடிய சாத்தியமான அதிகாரப் பகிர்வினை வழங்குவதற்கும் நிர்வாகக் கட்டமைப்புகளை மாற்றக் கூடிய வலுவான செயற்றிட்டம் ஒன்றுக்கு 02



## தடுப்புக் காவல், சிறையிலிருக்கும் புலிகள் பற்றிய விபரங்கள்

### கோருகிறார் அமைச்சர் வாசுதேவ

(கொழும்பு)

தடுத்து வைக்கப்பட்டிருக்கும் புலி இயக்க உறுப்பினர்கள் மற்றும் சிறைத்தண்டனை அனுபவிக்கும் முன்னாள் புலிகள் பற்றிய விரிவான அறிக்கை யொன்றினை தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருங் கிணைப்பு அமைச்சர் வாசுதேவ நாணயக்கார கோரி யுள்ளார். இவை குறித்து விரிவான அறிக்கை ஒன்றி னைச் சமர்ப்பிக்குமாறு புனர்வாழ்வு மற்றும் சிறைச் சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சுக் காரியதரிசியிடம் இருந்து அமைச்சர் வாசுதேவ கோரியுள்ளார்.

தடுப்புக்காவலில் அல்லது சிறையில் வைக்கப்பட் டிருக்கும் முன்னாள் புலி இயக்க உறுப்பினர்கள் தொடர்பான தகவல்களைச் சட்ட மாஅதிபர் திணைக் களத்திலிருந்து பெற்றுக் கொள்ளுமாறும் அமைச் சர் வாசுதேவ நாணயக்கார கேட்டுள்ளார். 02

## புதுக்குடியிருப்பில் வெடிபொருட்கள் மீட்கப்பட்டன

(முல்லைத்தீவு)

புதுக்குடியிருப்பு இரணைப்பாலம் பகுதியில் புதைத்து வைக் கப்பட்டிருந்த ஒரு தொகுதி வெடிபொருட்கள் மீட்கப்பட்டுள் ளன. பொலிஸாருக்குக் கிடைத்த தகவலையடுத்தே இவை மீட்க பட்டுள்ளன.

இதன் போது ரி-56 ரக துப் பாக்கி ரவைகள் - 370, 12.7 மி.மீற்றர் குண்டுகள் 217, 15 மி.மீற்றர் குண்டுகள் 18, எம்.பி, எம்.ஜீ குண்டுகள்- 02


## சிறைச்சாலை ஆயுதங்கள் பாதுகாப்பு அமைச்சிடம்

(கொழும்பு)

சிறைச்சாலையின் ஆயுதங்களை பாதுகாப்பு அமைச்சிடம் ஒப்படைக்குமாறு அரசாங்கம் உத்தரவிட்டுள்ளது. இதன்படி சிறைச்சாலை திணைக்களத்திற்கு சொந்தமாகக் காணப் பட்ட ஆயுதங்கள் அனைத்தும், பாதுகாப்பு அமைச்சிடம் ஒப்படைக்கப்படவுள்ளது.

ரி 56 ரகத் துப்பாக்கிகள் அனைத்தும் பாதுகாப்பு அமைச்சிடம் ஒப்படைக்கப்பட வேண்டுமென கடந்த 16ஆம் திகதி உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

கடந்த 9ஆம் திகதி இடம்பெற்ற வெலிக்கடைச் சிறைச்சாலை கலவரத்தின் போது ரி56 தானியங்கி துப்பாக் கிகளை கைதிகள் பெற்றுக் கொண்டதனால் பாரிய அழிவுகள் ஏற்பட்டன. 02



நல்லூர் கந்தசுவாமி கோவிலில் நேற்று மாலை நடைபெற்ற சூரசங்கார உற்சவத்தின் போது இடம்பெற்ற காட்சியைப் படத்தில் காணலாம்.

## பிரான்சில் விநாயகம் கைது செய்யப்படவில்லை

(பாரிஸ்)

புலிகளின் மூத்த உறுப்பினர் பரிதி படுகொலை தொடர்பில் விநாயகம் கைது செய்யப்பட்டுள் ளதாக வெளியான செய்திகள் எதுவித உண்மையும் இல்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

பரிதி படுகொலை தொடர்பில் இரண்டு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டு விசாரிக்கப்பட்டு வருகின்ற நிலையில், இவ்விருவ ரைத் தவிர இப்படுகொலைச் சம்பவம் தொடர்பில் எவரும் கைது செய்யப்படவில்லை எனவும் அவ்வட்டாரங்கள் 02

## சிங்களவர், தமிழர், முஸ்லிம் என அடையாளப்படுத்த வேண்டாம்

### அமைச்சர் டலஸ் அழகப்பெரும

(கொழும்பு)

சிங்களவர், தமிழர் மற்றும் முஸ்லிம் என அடையாளப்படுத் தும் நடைமுறைகள் ஒழிக்கப்பட வேண்டுமென இளைஞர் விவகார அமைச்சர் டலஸ் அழப்பெரும தெரிவித்துள்ளார். நுவரெலியாவில் வாழும் மக்களை இந்திய வம் சாவளித் தமிழர்கள் என அடை யாளப்படுத்தக் கூடாது.

சிங்கள மக்களும் 02

## பொலிஸ் இன்ஸ்பெக்டரை சுட்டு கொன்றவர் தற்கொலை முயற்சி

(கொழும்பு)

சப்ரகமுவ பொலிஸ் பயிற்சி நிலையத்தின் பிரதம பொறுப்ப திகாரி இன்ரசோம ரத்நாயக்கவின் கொலையுடன் தொடர்பு டைய சந்தேக நபரை 02

## காஸாவில் 90 பேர் பலி

(காஸா)

காஸா பகுதியில் கடந்த 6 நாட்களாக இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் இதுவரை 90 பேர் பலியாகியுள்ளனர். பலியானோரில் பெரும்பாலானோர் பொதுமக்கள். கிட்டத்தட்ட 80இற்கும் மேற்பட்ட இலக்குகள் மீது தாக்குதல் நடத்தியதாக இஸ்ரேலியப் 02

## இந்திய அகதி முகாமில் தங்கியிருந்த 15 இலங்கை அகதிகளைக் காணவில்லை

(சென்னை)

இந்திய அகதி முகாமில் தங்கி யிருந்த 15 இலங்கை அகதிக- ளைக் காணவில்லை எனத் தெரி விக்கப்படுகிறது. கடயனல்லூர் மாவட்டம் போகநல்லூர் பிரதேச முகாமில் தங்கியிருந்த இலங்கை அகதிகளே இவ்வாறு காணாமல் போயுள்ளனர்.

குறித்த முகாமில் 139 பேர் தங்கியிருந்ததாகவும், பரிசோத னைகளின் போது 15 பேர் காண வில்லை என்பது புலனானதாக வும் தெரிவிக்கப்படுகிறது. அகதி கள் காணாமல்போன விவ காரம் தொடர்பில் 02

## குற்றப் பிரேரணையை தெரிவுக் குழு விசாரிக்கத் தடை

### விதிக்கக் கோரி நீதிமன்றில் மனு

(கொழும்பு)

பிரதம நீதியரசருக்கு எதிரான குற்றப் பிரேரணையை பாராளு மன்ற குழுநிலை விவாதத்தில் விவாதிக்கத் தடைவிதித்து கட் டளை பிறப்பிக்குமாறு மேன்முறை யீட்டு நீதிமன்றத்தில் நேற்று மனுத்தாக்கல் செய்யப்பட்டுள் ளது. சந்திரா ஜயரத்ன என்பவர் இந்த மனுவைத் தாக்கல் செய் துள்ளார்.

மனுவின் பிரதிவாதியாக அரசியல் குற்றப் 02

# சீனத் தலைவர் வென் ஜியாபோவை சந்தித்து மன்மோகன் பேச்சு!

கம்போடியாவில் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள பாரதப் பிரதமர் மன்மோகன் சிங், சீனத் தலைவர் வென் ஜியாபோவை சந்தித்துப் பேசினார். இந்திய-சீன இருதரப்பு உறவுகள் குறித்தும் அவர்கள் பேச்சு நடத்தினர்.

தென்கிழக்கு ஆசிய நாடுகள் கூட்டமைப்பு ஏசியான் மாநாட்டின் கலந்துகொள்ள வந்திருக்கும் பாரதப் பிரதமர் மன்மோகன் சிங் மற்றும் சீன அதிபர் வென் ஜியாபோ இருவரும் சந்தித்துப் பேசினர். வரும் மார்ச் மாதம் மீண்டும் இருவரும் சந்தித்துப் பேசுவர் என்று தெரிகிறது.

முன்னதாக, நேற்று காலை இது குறித்துப் பேசிய வென் ஜியாபோ, கடந்த 8 வருடங்களில் 14 முறை மன்மோகன் சிங்குடன் நட்புறவில் சந்தித்துள்ளதாகவும், இரு தரப்புக்கும் இடையில் நல்ல சூழலும் நட்புறவும் திகழ்வதாகவும், இது இரு பெரிய நாடுகளின் மக்களிடமும் பிரதிபலிப்பதாகவும் வென் கூறினார்.

அநேகமாக என் பதவிக் காலத்தில் நான் சந்திககும் கடைசி சந்திப்பாகக் கூட இது இருக்கலாம் என்று குறிப்பிட்ட வென், வரும் மார்ச் மாதம் வரையில் சீன அரசுக்கு அடுத்த தலைவர் தேர்ந்தெ டுக்கப்பட்டாலும் இது நீடிக்கும் என்றார். மன்மோகன் சிங்கும், வென்னின் நடவடிக்கைக ளையும் அணுகு முறையையும் புகழந்தார்.

அவரது உறுதியான ஆழமான விசாலமான நட்புறவு இரு தரப்பு உறவுகளையும் மேம்படுத்த உதவின என்று கூறினார். குறிப்பாக, 2005ம் 2010 ஆண்டுகளில் வென்னின் இந்தியப் பயணங்களைக் குறிப்பிட்ட மன்மோகன் சிங், இந்தப் பயணங்கள் சீன இந்திய உறவை வலுப்படுத்த உதவின என்றார். 2005ல் முதல் முறை வந்தபோது, இரு நாடுகளுக்கும் பிணைப்பு வலுவானது, 2010ல் வந்தபோது, இருதரப்பு பிணைப்பின் 60ஆம் ஆண்டு விழாவாக அது அமைந்தது என்று குறிப்பிட்டார்.

நான் தனிப்பட்ட வகையில் அவருடன் இணைந்து பணி செய்வதை பாக்கியமாகக் கருதுகிறேன் என்று வென்னிடம் கூறினார் மன்மோகன் சிங்.

# "பரமேஸ்வரா வித்தியாலயம்" பெயர் சூட்டல் விழா



திருநெல்வேலி இந்து தமிழ் கலவன் பாடசாலை பரமேஸ்வரா வித்தியாலயமாக பெயர் மாற்றும் செய்யப்பட்டுள்ளது.

இதனை முன் னிட்டு ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ் வொன்று நேற்று பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது.

பாடாசலையின் அதிபர் விஜய சுந்தரம் தலைமையில் நடை-பெற்ற இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலன் கலந்துகொண்டார்.

இந்நிகழ்வில் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தனர் சண்முக லிங்கன், நல்லை ஆதின குரு முதல்வர் மற்றும் வடமாகாண கல்விப் பணிப்பாளர் செல்வராசா ஆகியோர் கலந்துகொண்டனர்.

# உலகவங்கிப் பணிப்பாளர் இந்திரவதி தெல்லிப்பழைக்கு நேற்று விஜயம்

நான்கு நாள் விஜயத்தை மேற்கொண்டு இலங்கைக்கு வருகை தந்துள்ள உலக வங்கியின் முகாமைத்துவ பணிப்பாளர் சிறி.முலியானி இந்திராவதி தலைமையிலான குழுவினர் தெல்லிப்பளைக்கு விஜயம் மேற்கொண்டார்.

நேற்றையதினம் தெல்லிப்பளைக்கு விஜயம் மேற்கொண்ட உலகவங்கியின் முகாமைத்துவ பணிப்பாளர் சிறி.முலியானி இந்திராவதி குழுவினர் தெல்லிப்பளை பிரதேச செயலகத்தின் வடக்கின் துரித மீள் எழுச்சித் திட்ட அபிவிருத்தி வேலைகளைப் பார்வையிட்டனர்.

இதன்போது யாழ்.அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் ,தெல்லிப்பளை பதில் பிரதேச செயலர் முரளிதரன் ,ஈ.பி.டி.பியின் வலிகாமம் தெற்கு உதவி இணைப்பாளர் வேலுப்பிள்ளை மகேந்திரன் உட்பட துறை சார்ந்த பலரும் உடனிருந்தனர்.

# ஐந்து பத்திரிகைகளின் ஆசிரியர்களுடன் சபாநாயகர் பேசுவார்

கொழும்பு)

பிரதம நீதியரசர் ஷிரானி பண்டாரநாயக்காவுக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் பற்றி விசாரணை நடத்தும் பாராளுமன்றத் தெரிவுக் கமிட்டியின் கூட்டங்கள் தொடர்பாக செய்திகள் வெளியிட்ட ஐந்து செய்திப் பத்திரிகைகளின் ஆசிரியர்கள், சபாநாயகர் சமல் ராஜபக்ஷவினால் கூட்டம் ஒன்றிற்கு அழைக்கப்படவுள்ளனர். பாராளுமன்றத் தெரிவுக் கமிட்டியின் செயற்பாடுகள் முடிவுக்கு வரும் வரை இவ்வாறான செய்திகளை வெளியிட வேண்டாம் என்று சபாநாயகர் பத்திரிகை ஆசிரியர்களுக்கு தெளிவுபடுத்துவார் என்று தெரிவிக்கப்படுகிறது.

## காஸாவில் 90 பேர்...(தொடர்)

படையினர் கூறினர்.

காஸாவில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு வீடொன்றின் மீது இஸ்ரேல் நடத்திய விமானத் தாக்குதலில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 10 பேர் கொல்லப்பட்டுள்ளனர். அமாசின் மூத்த அதிகாரியொருவர் அந்த வீட்டில் வைத்து தங்கியிருப்பதாகக் கிடைத்த தகவலையடுத்தே அந்த வீட்டினை இலக்கு வைத்துத் தாக்கியதாக இஸ்ரேலிய இராணுவ அதிகாரியொருவர் பி.பி.சி.க்குத் தெரிவித்தார்.

## குற்றப் பிரேரணையை...(தொடர்)

பிரேரணையை விசாரிக்க குறிப்பிடப்பட்ட தெரிவுக் குழு பெயரிடப்பட்டுள்ளது. குறித்த குற்றப் பிரேரணையை விசாரணை செய்வதற்கு பாராளுமன்ற தெரிவுக் குழுவிற்கு இடைக்கால தடை விதிக்கப்பட வேண்டும் எனவும் மனுவில் கோரப்பட்டுள்ளது.

குறித்த மனு மேன்முறையீட்டு நீதிமன்ற தலைவர் சிறிஸ்கந்தராஜா உள்ளிட்ட மூன்று நீதியரசர் குழுவால் ஏற்கப்பட்டு இன்று பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது.

## இந்திய அகதி முகாமில்...(தொடர்)

சொக்கம்பட்டி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. அகதிகள் சட்டவிரோதமான முறையில் அவுஸ்திரேலியாவிற்குள் பிரவேசிக்க முயற்சித்திருக்கலாம் என்று சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது.

எனினும், குறித்த அகதிகள் கூலி வேலை செய்வதற்காக முகாமை விட்டு வெளியேறிதாகவும், ஓரிரு தினங்களில் திரும்பி விடுவார்கள் எனவும் அகதி முகாமில் தங்கியிருக்கும் ஏனையோர் தெரிவித்துள்ளனர்.

## ஒன்பது மாகாணங்களை...(தொடர்)

வழி சமைக்கும் நிகழ்ச்சி நிரல் குறித்து இணக்கத்துக்கு வரத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தயாரா விருக்கிறது என்றும் சம்பந்தன் சொன்னார்.

நாட்டில் ஒன்பது மாகாணங்கள் இருப்பதிலும் பார்க்க நான்கு அல்லது ஐந்து பிராந்தியங்கள் இருப்பது நல்லது.

அப்போதுதான் வடக்கு, கிழக்கு மாகாணங்களின் நிலமை உட்பட சகல பிரச்சினைகள் குறித்தும் ஆராய முடியும் என்றும் அவர் சொன்னார்.

காலனித்துவ எஜமானார்களின் வழிகாட்டுதல்கள் இல்லாமல் புதிய நிர்வாகக் கட்டமைப்புக் குறித்து எமது நாட்டினால் ஆராய முடியும் என்றும் சம்பந்தன் எம்.பி.சொன்னார்.

பதின்மூன்றாவது அரசியல் அமைப்புத் திருத்தத்தை நீக்கிவிட்டு 19 ஆவது அரசியல் அமைப்புத் திருத்தத்தை ஏற்படுத்த அரசாங்கம் கவனம் செலுத்தும் இந்த வேளையில், சம்பந்தன் எம்.பி. இந்த யோசனைகளை முன்வைத்துள்ளார்.

## புதுக்குடியிருப்பில்...(தொடர்)

640, 18 மி.மீற்றர் எச்.இ.ஏ.ரி குண்டுகள் -2 கைக்குண்டு -01 ஆகியவை மீட்கப்பட்டுள்ளன.

குறித்த ஆயுதங்கள் செயலிழக்கும் நோக்கில் இலங்கை இராணுவத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக மன்னார் பொலிஸ் விசேட புலனாய்வு பிரிவு தெரிவித்துள்ளது.

## தடுப்புக் காவல்...(தொடர்)

அண்மையில் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளவர்களை அமைச்சர் வாசுதேவ சென்று பார்வையிட்டுள்ளார். தம்மை விடுவிப்பதற்கு அல்லது தம்மீது சட்ட நடவடிக்கை எடுப்பதற்கான வேலைகள் உடன-டியாக மேற்கொள்ள வேண்டும் என்று தடுப்புக் காவல் கைதிகள் அமைச்சரை கோரியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## பிரான்சில் விநாயகம்...(தொடர்)

தெரிவித்துள்ளன.

அண்மையில் பிரான்சில் தமிழ்த் தேசியச் செயற்பாட்டாளர் பரிதி படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தோடு எமது அமைப்பைத் தொடர்புபடுத்தி சில விசமிகளால் செய்திகள் பரப்பப்பட்டு வருகின்றன. புலிகள் அமைப்பைச் சார்ந்த எவருமே இக்கொலையோடு தொடர்புபடவில்லை என்பதையும் எமது அமைப்பைச் சேர்ந்த எவருமே பிரான்சில் கைது செய்யப்படவில்லை. புலிகளாகிய நாம் தெளிவுபடுத்துகின்றோம் என தலைமைச் செயலக அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டும் உள்ளது.

இதேவேளை, பிரான்ஸ் தமிழர் ஒருங்கிணைப்பு குழுவினைச் சேர்ந்த முக்கிய பிரதிநிதிகள் உட்பட இப்படுகொலை தொடர்பில் பல்வேறு தரப்பினரிடம் விசாரணைகளையே காவல்துறை மேற்கொண்டு வருகின்றது.

## சிறைச்சாலை ஆயுதங்கள்...(தொடர்)

சில ஆண்டுகளுக்கு முன்னர் கம்பஹாவில் சிறைச்சாலை அதிகாரிகள் மீது துப்பாக்கிச் சூடு நடத்திப் பாதாள உலகக் குழுத் தலைவர் தப்பிச் சென்றதனைத் தொடர்ந்து, சிறைச்சாலை உத்தியோகத்தர்களுக்கு ரி 56 ரக துப்பாக்கிகள் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## பொலிஸ் இன்ஸ்பெக்டரை...(தொடர்)

எதிர்வரும் 3ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு இரத்தினபுரி நீதவான் உத்தரவிட்டுள்ளார். கொலைச் சம்பவத்திற்கு பின்னர் கைது செய்யப்பட்ட சந்தேகநபர் நேற்றுமுன்தினம் தற்கொலைக்கு முயற்சித்தார்.

இந்நிலையில் இரத்தினபுரி வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவரும் சந்தேகநபரை இரத்தினபுரி நீதவான் நேற்று நேரில் சென்று பார்த்தவேளை எதிர்வரும் 3ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளார்.

பொலிஸ் பாது காப்பின் கீழ் இவர் வைத்தியசாலையில் தொடர்ந் தும் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

இரத்தினபுரி, அலபான பிரதேசத்தில் உள்ள அவரது வீட்டில் வைத்து சப்ரகமுவ பொலிஸ் பயிற்சி நிலையத்தின் பிரதம பொறுப்பதிகாரி நேற்றுமுன்தினம் காலை சுட்டுக் கொல்லப்பட்டார்.

இக்கொலைச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர் நேற்றுமுன்தினம் ஆயுதத்துடன் கைது செய்யப்பட்டிருந்தார்.

## சிங்களவர், தமிழர்...(தொடர்)

இந்தியாவிலிருந்து வந்தவர்கள். எனினும் அவர்களை இந்திய சிங்களவர் எனக் குறிப்பிடுவதில்லை. இலங்கையில் தமிழ் மக்கள் செறிந்து வாழும் பகுதிகளில் தொழில்நுட்ப பயிற்சி நிலையங்கள் உருவாக்கப்படும்.

இந்திய அரசாங்கம் இந்தத் திட்டங்களுக்கு உதவிகளை வழங்கி வருகின்றது என அவர் குறிப்பிட்டுள்ளார். நுவரெலியாவில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்ட போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

# முஸ்லிம் தனியார் திருத்த சட்டமூலம் விரைவில் அமுல்

முஸ்லிம் தனியார் திருத்தச் சட்டமூலம் விரைவில் அமுல்படுத்தப்படும் என நீதி அமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார். இலங்கையில் முஸ்லிம்கள் சிறுபான்மையினராக வாழ்கின்றனர். எனினும் இந்தத் திருத்தச் சட்டமூலத்தை அமுல்படுத்துவதற்கான பூரண அனுமதியை அரசாங்கம் வழங்கியுள்ளது என அவர் குறிப்பிட்டார்.

எமது மூதாதையர்களினால் இந்தச் சட்டம் பல தசாப்தங்களுக்கு முன்னர் எமது நாட்டில் அறிமுகப்படுத்தப்பட்டது. இது எமக்கு கிடைத்த ஒரு வரப்பிரசாதமாகும் எனவும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஹக்கீம் தெரிவித்தார்.

எனினும் இந்த சட்டமூலத்தில் சில குறைபாடுகள் காணப்படுகின்றன. இதனை தற்காலத்திற்கு ஏற்ற வகையில் மாற்றி அமைக்க வேண்டிய தேவை உள்ளது எனவும் அவர் குறிப்பிட்டார்.

எனவே இந்தச் சட்டத்தில் மேற்கொள்ள வேண்டி திருத்தங்கள் தொடர்பில் ஆராய்வதற்கு உயர் நீதிமன்ற நீதியரசர் சலீம் மர்சூப் தலைமையில் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது என அமைச்சர் ஹக்கீம் தெரிவித்தார்.

ஸர்மிளா ஸெய்யத்தின் சிறகு முளைத்த பெண் எனும் கவிதை நூல் அறிமுக விழாவில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

**ரவூப் ஹக்கீம்**



# ஈரானுக்கான தேயிலை ஏற்றுமதி குறித்துக் கலந்துரையாடல்

ஈரானுக்கான தேயிலை ஏற்றுமதி குறித்து இரு தரப்புக் கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதும், ஈரான் தரப்பினர் ஆர்வத்துடன் செயற்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை மத்திய வங்கி மற்றும் தெஹ்ரான் அதிகாரிகளுக்கு இடையில் கடந்த 16ஆம் திகதி இந்தக் கலந்துரையாடல் இடம்பெற்றிருந்தது. தேயிலை முகவர் சங்கத்தின் அதிகாரிகளும் இதற்கு அழைக்கப்பட்டிருந்தனர்.

அத்துடன், தேயிலை சபை, இலங்கை வங்கி மற்றும் தேயிலை வர்த்தக தரப்பினரும் இதில் கலந்து கொண்டிருந்தனர்.



ஈரான் மீதான பொருளாதார தடை காரணமாக ஏற்பட்டுள்ள வர்த்தக பின்னடைவை கருத்தில் கொண்டு அதனை மீளமைக்கும் நோக்கில் இந்த விடயம் குறித்து கவனம் செலுத்தப்பட்டிருந்தது. இதன் போது 11 சதவீத ஏற்றுமதியை யேனும் மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பொய்ப் பிரசாரம் செய்கின்றது

**அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா**

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பொய்ப் பிரசாரம் செய்து வருவதாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.


பாராளுமன்றிற்கும், உலக சமூகத்திற்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பொய்யுரைத்து வருகின்றது.

13ஆம் திருத்தச் சட்டத்தை வேண்டுமெனக் கோரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முதலில் இதனைக் கடுமையாக எதிர்த்து வந்தது.

நாட்டின் தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணக் கூடிய ஒரே தலைவர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவே. அனைவருக்கும் ஜனாதிபதி சந்தர்ப்பம் வழங்கியுள்ளார்.

13ஆம் திருத்தச் சட்டத்தை அமுல்படுத்துவதன் மூலம் வடக்கு கிழக்கு மக்களுக்கு நன்மைகளை அளிக்க முடியும். புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த பகுதிகளில் துரித அபிவிருத்தி ஏற்பட்டுள்ளது.

வடக்கு கிழக்கு அபிவிருத்திக்காக அரசாங்கம் பாரியளவில் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது என அமைச்சர் தேவானந்தா மேலும் தெரிவித்துள்ளார்.



# விஷ வாயுக் கசிவினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நட்டஈடு வழங்க வேண்டும்

**ஆனந்த பாலித்த**

சபுகஸ்கந்த மசகு எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தில் ஏற்பட்ட விஷ வாயுக் கசிவு காரணமாக பலியானவர்களதும் பாதிக்கப்பட்டவர்களதும் குடும்பங்களுக்கு நட்டஈடு வழங்கப்பட வேண்டும் எனக் கோரப்பட்டுள்ளது.

தேசிய சேவையாளர் சங்கத்தின் செயலாளர் ஆனந்த பாலித்த, கனிய வளக் கூட்டுத்தாபனத்திடம் இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளார்.

இருந்த போதும் அனர்த்தம் தொடர்பில் விசாரணை செய்வதற்கான குழுவை நியமித்து, இந்த நட்ட ஈட்டை வழங்காது தவிர்க்க அரசாங்கம் முனைவதாக, சங்கத்தின் செயலாளர் ஆனந்த பாலித்த குற்றம் சுமத்தியுள்ளார்.

அதுகுறித்து கனிய வளத்துறை பிரதி அமைச்சர் சரண குணவர்தன கூறுகையில், விசாரணைக்காக நியமிக்கப்பட்ட குழு தமது பணிகளை நிறைவு செய்ய பின்னர் பாதிக்கப்பட்டவர்களுக்கான நட்ட ஈடு வழங்கப்படும் என்றார்.

# பால் தக்ரேயின் மரணம் ஈடுசெய்ய முடியாத இழப்பு: யோகேஸ்வரன் எம்.பி. இரங்கல்


இந்திய சிவசேனா கட்சியின் அகில இந்தியத் தலைவர் பால் தக்கரேயின் இறப்பு மக்களால் ஜீரணிக்க முடியாத அதிர்ச்சி இதனை ஈடு செய்யும் அளவுக்கு யாரிடமும் இருக்குமா என்பது சிந்தனைக்கு அப்பாற்பட்டது என பாராளுமன்ற உறுப்பினர் சீனித்தம்பி யோகேஸ்வரன் விடுத்துள்ள அனுதாபச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

தனது அனுதாபச் செய்தியில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

சனிக்கிழமை இயற்கை மரணம் அடைந்த இந்திய சிவசேனா கட்சியின் அகில இந்தியத் தலைவர் பால் தாக்கரேயின் இழப்பு முழு இந்துக்களுக்கும் ஈடு செய்ய முடியாத இழப்பு முதிர்ந்த வயதில் இறந்தாலும் அவரது செயற்பாட்டின் வீரியம் இருந்தது.

வாழ்ந்த நாட்களில் ஒடுக்கப்பட்டவர்களுக்காக ஓங்கி ஒலித்த குரல் இன்று மௌனமாகி விட்டது என்றால் யாராலும் ஏற்க முடியாத ஒரு விடயம் இன்று உலகில் இந்துக்களுக்கு அநீதி இழைக்கப்படுகிறது என்றால் உடன் அவற்றைக் கண்டிக்கும் திறானி உடையவர் என்றால் மிகையாகாது.





ஒரு மனிதன் வாழும் போதும் இறந்த பின்பும் மக்கள் மனங்களில் இடம் பிடிப்பது என்பது எளிதான விடயமல்ல. ஆனால் வாழும் போதும் இறந்த பின்பும் பல இலட்சம் மக்கள் நேசித்ததை மும்பை நகரக் காட்சிகள் நன்கு எடுத்தியம்புகின்றன.

இவரின் மறைவால் இந்திய அரசியலில் பாரிய வெற்றிடம் ஏற்பட்டிருப்பதை எதிர்வரும் காலம் உணர்த்தும் அந்த அளவுக்கு தனக்கு என தனியான திறமைகளை அரசியலில் தன்னகத்தே கொண்டிருந்த புலமையாளனை பாரத தேசம் இழந்துள்ளது என்பதுடன் இவரது இழப்பால் வேதனையில் உள்ள குடும்பத்தார், கட்சி தொண்டர்கள், இந்திய மக்கள் அனைவருக்கும் எனது இரங்கலை தெரிவிப்பதுடன், இவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிராத்திப்பதாகவும் அவ் இரங்கல் செய்திக் குறிப்பில் சுட்டிக் காட்டியுள்ளார்.

இதேவேளை, பால் தாக்கரே இந்தியாவின் சிவசேனா அமைப்பின் தலைவராக இருந்து இந்தியாவை மட்டுமல்லாது உலகளாவிய ரீதியில் இந்து மக்களின் உரிமைகளுக்காக குரல் கொடுத்து வந்தவர். இதனால் அவர் பல்வேறு நெருக்கடிகளுக்கும் விமர்சனங்களுக்கும் ஆளாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# காஸ் விலையை அதிகரிக்கக் கோரிக்கை

எரிவாயுவின் (காஸ்) விலையை அதிகரிப்பது தொடர்பில் நுகர்வோர் விவகார அதிகாரசபையிடம் லாப் கேஸ் கம்பனி அனுமதி கோரியுள்ளது என்று அவ்வதிகாரசபையின் தலைவர் ரூமி மர்சூக் தெரிவித்தார்.

இதற்கமைய, சர்வதேச சந்தையில் காஸ் விலை தொடர்பில் அண்மைக்காலமாக நிலவிய ஏற்றத்தாழ்வுகள் குறித்து அவதானித்து வருவதாகவும் அதன் பின்னரே மேற்படி நிறுவனத்தின் கோரிக்கை தொடர்பில் கவனம் செலுத்துவதாகவும் அவர் குறிப்பிட்டார்.



எவ்வாறாயினும், குறித்த கம்பனிக்கு காஸ் விலையை அதிகரிப்பதற்கான அனுமதி வழங்குவதா இல்லையா என்பது தொடர்பில் நுகர்வோர் விவகார அதிகாரசபை இன்னமும் தீர்மானிக்கவில்லை என்று அவர் மேலும் கூறினார்.

## இன்றைய இராசி பலன் (20.11.2012)

**நந்தன வருடம் கார்த்திகைத் திங்கள் 5ஆம் நாள்**
**செவ்வாய்க்கிழமை**

**நட்சத்திரம்** : அவிட்டம் பி.இ. 5.38 வரை அதன் பின் சதயம்
**திதி** : சப்தமி பி.ப. 2.29 வரை. அதன் பின் அட்டமி
**சுபநேரம்** : 10.40 - 12.10 **இராகுகாலம்** : 3.10 - 4.40
(இந்த நேரங்கள் இரவுக்கும் பகலுக்கும் பொருந்தும்)

**மேடம்** : கடன்நிவர்த்தி, நினைத்தது நிறைவேறும், பெரியோர் பாராட்டு
**இடபம்** : தொழில்முயற்சி வெற்றி, உற்சாகம் அதிகரிப்பு, உறவினர் உதவி
**மிதுனம்** : காரியசித்தி, குடும்பத்தில் ஒத்துழைப்பு, வேலையாட்களால் பிரச்சினை
**கடகம்** : வாக்குசாதுரியம், எதிரிகள் ஏமாற்றம், தொழிற்போட்டி வெற்றி
**சிங்கம்** : தொழில் முன்னேற்றம், புதிய திட்டங்கள் நிறைவேறும், சகோதர உதவி
**கன்னி** : குடும்ப மகிழ்ச்சி, உறவினர் வருகை, வேலையாட்கள் ஒத்துழைப்பு
**துலாம்** : தொழிற் தடை, குறைகேட்டல், பொறுமை தேவை
**விருச்சிகம்** : வியாபார விருத்தி, புத்திசாதுரியம், இல்லத்தில் சந்தோசம்
**தனுசு** : பொருள் வரவு, எளிதான செயல், அதிகாரிகள் பாராட்டு
**மகரம்** : தொழில் இலாபம், புதிய சிந்தனை, அலைச்சல்
**கும்பம்** : வேலைச் சுமை, அதிக யோசனை, நண்பர்கள் உதவி
**மீனம்** : காரிய சித்தி, பேச்சு சாதுரியம், அந்நியர் ஆதரவு

- ஜோதிடர் பால.இரத்தினசேகர்

# அரசுக்கு அழுத்தம் கொடுக்கவே அமெரிக்க அதிகாரி இலங்கை வருகிறார்

இலங்கையில் 13 ஆவது திருத்தத்தை ஒழிப்பதற்கான முயற்சிகள் பெரும் சர்ச்சையைக் கிளப்பியுள்ள நிலையில், இலங்கையின் தற்போதைய நிலைவரம் குறித்து ஆராய அமெரிக்காவின் விசேட பிரதிநிதி ஒருவர் இந்த வாரம் இலங்கை வரவுள்ளார்.

அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் பிரதி உதவிச் செயலர் அலிஸ்ஸா ஐரிஸ் என்ற அதிகாரியே இந்த வாரம் கொழும்புச் வரவுள்ளதாக எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 19ஆவது கூட்டத்தொடரில் இலங்கைக்கு எதிராக அமெரிக்கா கொண்டுவந்து நிறைவேற்றிய பிரேரணையின் பரிந்துரைகளை நிறைவேற்ற அரசு, இதுவரை ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதா என்பது தொடர்பில் அவர் முக்கியமாக அரசுத் தலைவர்களுடன் பேசுவார், இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண அர்ப்பணிப்புடன் செயற்படுகின்றதா என்பது குறித்தும் ஆய்வுகளை நடத்துவார்.

அமெரிக்க ஜனாதிபதியாக ஒபாமா மீண்டும் தெரிவுசெய்யப்பட்டுள்ள நிலையில், வெளிவிவகார அமைச்சின் உயர் அதிகாரி ஒருவர் முதன்முறையாக இலங்கை செல்லவுள்ளமை முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகிறது.

ஐரிஸ் அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் உதவிச்செயலர் றொபேட் ஓ பிளேக்கிற்கு அடுத்த நிலையில் உள்ளவர். ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 19ஆவது கூட்டத்தொடரில் அமெரிக்கா இலங்கைக்கு எதிராக தீர்மானம் நிறைவேற்றியது.

# பாணந்துறைக் கடலில் மலேசியக் கப்பல் இலங்கைப் பணியாளர்கள் நிர்க்கதி

கொழும்பின் புறநகர் பகுதியான பாணந்துறை கடற்பரப்பில் நங்கூரமிட்டுள்ள மலேசியாவுக்கு சொந்தமான கப்பலில் பணிபுரியும் இலங்கையர்கள் உணவின்றி நிர்க்கதிக்குள்ளாகியிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

மலேசியாவுக்கு சொந்தமான 'சாக் சிரிசஸ்' என்றழைக்கப்படும் இந்தக் கப்பல் கடந்த நான்கு மாதங்களாக பாணந்துறைக் கடற்பரப்பில் நங்கூரமிட்டுள்ளது.

இக்கப்பலில் இலங்கையைச் சேர்ந்த ஐந்து பேரும் மியன்மாரைச் சேர்ந்த 10 பேரும் பணிபுரிவதாக தெரிவிக்கப்படுகிறது. நடுக்கடலில் உணவு மற்றும் குடிநீர் வசதியின்றி பெரும் சிரமப்படுவதாக பணியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

குறித்த கப்பலுக்கு எதிராக சிங்கப்பூர் நிறுவனமொன்று வழக்குத் தாக்கல் செய்துள்ளமையால் இலங்கையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

# ஒரு இலட்சம் ரூபா இலஞ்சம் இரு பொலிஸ் அதிகாரிகள் கைது

ஒரு இலட்சம் ரூபா லஞ்சம் பெற முயற்சித்த புறக்கோட்டை பொலிஸ் நிலைய குற்றத்தடுப்புப் பிரிவு பொறுப்பதிகாரி மற்றும் சார்ஜன்ட் ஆகியோர் லஞ்சம் மற்றும் ஊழல் ஒழிப்பு திணைக்கள அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கிருலப்பனை பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவரிடம் குறித்த இலஞ்ச பணத்தை கோட்டை பொலிஸ் நிலையத்தில் வைத்து பெற்ற போது இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நகைக் கடையொன்றில் கொள்ளையிட்ட நபர் மீது சட்ட நடவடிக்கை எடுக்காதிருக்கவென இந்த லஞ்சம் பெறப்பட்டுள்ளது. புறக்கோட்டை பொலிஸ் நிலைய குற்றத்தடுப்பு பிரிவுப் பொறுப்பதிகாரி, பொலிஸ் பரிசோதகர் அலுத்கெதர டிக்கிரி பண்டார விஜேரத்னவும் உபுல் வசந்த குமார என்ற சார்ஜன்டுமே கைது செய யப்பட்டவர்களாவர்.

சந்தேகநபர்கள் இருவரும் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டனர். அவர்களை எதிர்வரும் 30ம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க நீதிவான் உத்தரவிட்டார்

# ஜனாதிபதி கசகஸ்தான் பயணமானார்!

கசகஸ்தானுக்கான உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ புறப்பட்டுச் சென்றுள்ளார்.

அவர் நேற்று அதிகாலை விசேட வானூர்தி மூலம் கசகஸ்தானுக்கு புறப்பட்டுச் சென்றார்.

ஜனாதிபதி, கசகஸ்தானின் மூன்று நாட்கள் தங்கியிருந்து முக்கிய கலந்துரையாடல்களை மேற்கொள்ளவுள்ளார். அத்துடன் கசகஸ்தான் ஜனாதிபதி நுசல்டன் நசர்பயேவ்வையும் சந்தித்து ராஜதந்திர பேச்சுவார்த்தைகளையும் நடத்தவுள்ளார்.

இரு நாடுகளுக்கும் அவசியமான பொருளாதார, சமூக மற்றும் கலாசார துறைகள் தொடர்பில் சில உடன்படிக்கைகளும் கைச்சாத்தாகவுள்ளன.

மத்திய ஆசியாவில் அமைந்துள்ள கசகஸ்தான் கனிய வளங்களை அதிகம் கொண்ட நாடாகக் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# நாட்டுக்காக, கட்சிக்காக ரணில் என்ன செய்தார்?

## - டிரான் அலஸ் எம்.பி.கேள்வி

1994ம் ஆண்டு தொடக்கம் 16 வருடங்கள் எதிர்கட்சியில் இருக்கும் ரணில் விக்ரமசிங்க நாட்டுக்காக, கட்சிக்காக செய்தது என்ன என ஜனநாயக தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் டிரான் அலஸ் கேள்வி எழுப்பியுள்ளார்.

பாராளுமன்றில் தான் அமைதி காப்பதாக அண்மையில் எதிர்கட்சித் தலைவர் முன்வைத்த கருத்திற்கு பதிலளிக்கும்போதே டிரான் அலஸ் நேற்று பாராளுமன்றில் இவ்வாறு தெரிவித்தார்.

பாராளுமன்றில் பேசாமல் இருந்து கின்னஸ் சாதனை படைத்தது தான் அல்லவெனவும் பல தேர்தல்களில் தோல்வியுற்று ரணில் விக்ரமசிங்கவே கின்னஸ் சாதனை படைத்துள்ளதர்கவும் டிரான் குறிப்பிட்டுள்ளார்.

வரவு - செலவுத் திட்டத்தில் எதிர்கட்சித் தலைவருக்கு அதிக பணம் ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் இவை நாட்டு மக்களின் வரிப்பணம் எனவும் டிரான் அலஸ் குறிப்பிட்டுள்ளார்.

இதற்கு பதிலளித்த எதிர்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க, எதிர்கட்சித் தலைவர் என்ற ரீதியில் கட்சிக்காக தனது பொறுப்புக்களை செயற்படுத்தியுள்ளதாகவும் 3 வருடங்கள் பாராளுமன்றில் பேசாமல் இருந்த பாராளுமன்ற உறுப்பினரை பேச வைத்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

# வடக்கில் முஸ்லிம்கள் விரைவில் மீளக் குடியேற்றப்படுவர்

வடக்கிலிருந்து விரட்டியடிக்கப்பட்ட முஸ்லிம் மக்கள் விரைவில் மீள் குடியேற்றப்படுவார்கள் என்று பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபகஷ தெரிவித்துள்ளார்.

22 ஆண்டுகளுக்கு முன்னர் ஆயிரக் கணக்கான தமிழ் பேசும் முஸ்லிம்கள் வடக்கிலிருந்து வெளியேற்றப்பட்டனர்.

இவ்வாறு விரட்டியடிக்கப்பட்ட முஸ்லிம்கள் அவர்களின் சொந்த இடங்களில் உடனடியாக மீள்குடியேற்றப்படுவர் என்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

வட மாகாணத்திலிருந்து முஸ்லிம்கள் விரட் டியடிக்கப்பட்டு 22 ஆண்டுகள் பூர்த்தியாவதனை முன்னிட்டு நடைபெற்ற நிகழ்வில் கலந்து கொண்ட போது அமைச்சர் இந்த உறுதிமொழியை வழங்கியுள்ளார்.

# சொத்து விபரங்களை வெளியிட மறுக்கும் அரசியல்வாதிகள்

தேர்தல்கள் ஆணையாளருக்கு சொத்துக்கள், பொறுப்புக்கள் குறித்து தகவல் வழங்குவதில் அரசியல்வாதிகள் முறையாகத் செயற்படவில்லை என பெப்ரல் அமைப்பு தெரிவித்துள்ளது.

ஜூன் மாதத்திற்கு முன்னர் சொத்துக்கள், பொறுப்புக்கள் குறித்து விபரங்கள் தேர்தல்கள் ஆணையாளருக்கு அறிவிக்கப்பட்டிருக்க வேண்டும் என்று பெப்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார். சொத்துக்கள், பொறுப்புக்கள் குறித்து தகவல் வழங்காத அரசியல் வாதிகள் குறித்துப் பொதுமக்களுக்கு தெளிவுபடுத்துமாறு பெப்ரல் அமைப்பு தேர்தல்கள் ஆணையாளருக்குக் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளது.

# கலேவலயில் மர்ம மரணம், பெண்ணின் சடலம் மீட்பு

கலேவல - தேவஹுவ பிரதேச வீடொன்றில் இருந்து மர்மமான முறையில் மரணமான பெண்ணொருவரின் சடலத்தை பொலிஸார் நேற்று காலை மீட்டுள்ளனர்.

சடலமாக மீட்கப்பட்ட பெண்ணுடன் முன்னர் வசித்து வந்த ஆணொருவர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் கொலை செய்யப்பட்ட பெண்ணுடைய, கணவரின் இளைய சகோதரர் என்று தெரியவந்துள்ளது.

கணவர் இறந்த பின்னர் குறித்த பெண் கணவரின் இளைய சகோதரருடன் குறித்த வீட்டில் ஒன்றாக வசித்து வந்துள்ளார்.

சம்பவம் குறித்து கலேவல பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# தனியார் நிறுவனங்கள் திரிபோஷா இறக்குமதி செய்ய தடை விதிப்பு

திரிபோஷா தயாரிப்புக்குத் தேவையான சோயா போஞ்சி ஆகியவை இலங்கையில் போதியளவு கையிருப்பில் இருப்பதால் தனியார் நிறுவனங்கள் திரிபோஷ இறக்குமதி செய்வதை தடை செய்ய விவசாய அமைச்சர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன தீர்மானித்துள்ளார்.

இதன்படி சோயா அவரையை இறக்குமதி செய்வதற்காக தனியார் நிறுவனங்களுக்கு அனுமதி அளிக்க வேண்டாமென அமைச்சர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன திறைசேரிக்கு அறிவிக்க உள்ளார்.

சோயா அவரையை விவசாயிகளிடமிருந்து கிலோ 110 ரூபாவுக்கு பெற்றுக் கொள்ளலாம் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

வெளிநாடுகளில் இருந்து இதனை இறக்குமதி செய்யும் போது தீர்வையின்றி சோயா அவரை கிலோ 130 ரூபாவாகிறது. எனவே சோயா இறக்குமதியை தாம் தடை செய்யப் போவதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

மூவாயிரம் மெட்ரிக் தொன் சோயா அவரை கையிருப்பில் உண்டு. இது நாட்டில் தேவைக்குப் போதுமானது என்றும் அமைச்சர் கூறினார்.

அண்மையில் ஏற்பட்ட கடும் வரட்சி காரணமாக சோயா அவரை அறுவடைக்கு பாதிப்பு ஏற்பட்டது. 95 ரூபாவாக இருந்த சோயா அவரை 110 ரூபாவரை அதிகரித்துள்ளதாகவும் அமைச்சர் கூறினார்..

தகவல் திணைக்களத்தில் நடை பெற்ற ஊடக மாநாட்டில் அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

# நியூஸிலாந்து அமைச்சர் இலங்கைக்கு விஜயம்

உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு நியூஸிலாந்தின் கைத்தொழில் அமைச்சர் டேவிட் கார்ட்டர் செல்லவுள்ளார்.

இலங்கைக்கும் நியூஸிலாந்துக்கும் இடையிலான வர்த்தகம் மற்றும் விவசாய உறவுகளை மேம்படுத்தும் முகமாகவே அவரது விஜயம் அமையவுள்ளது.

"கார்ட்டரின் இலங்கை விஜயத்திற்கான நிகழ்ச்சி நிரலில் வர்த்தகம் மற்றும் விவசாய வாய்ப்புக்களும் முதன்மை பெறும" என ஊடக அறிக்கை தெரிவித்துள்ளது.

# 13 வது திருத்தச் சட்ட விவகாரத்தில் கூட்டமைப்பினர் இரட்டை வேடம்

**- சஜின் தவாஸ் குணவர்த்தன எம்.பி.**

13 சட்டத்திருத்தம் அர்த்தமற்றது என்பதனால் நாம் அதனை நிராகரிப்பதாக தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் கூறியமை, அவர்களின் இரட்டை தன்மை நிலைப்பாட்டை காட்டுவதாக பாராளுமன்ற உறுப்பினர் சஜின் த வாஸ் குணவர்தன கண்டனம் வெளியிட்டுள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினரான எம்.ஏ. சுமந்திரன் அரசியல் சாசனத்தின் 13ஆவது திருத்தம் அர்த்தமற்றது என்றும் அதனால் ஆரம்பம் முதலே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அதனை நிராகரித்தது என்ற கருத்தை பாராளுமன்றத்தில் வெளியிட்டிருந்தார். சுமந்திரனின் இந்தக் கருத்து ஊடகங்களில் முக்கியத்துவம் அளிக்கப்படவில்லை.

நாம் 13ஆவது திருத்தத்தை ஆரம்பம் முதலே அர்த்தமற்றதென்று நிராகரித்திருக்கிறோம் என்று சுமந்திரன் தெரிவித்த கருத்து தொடர்பாக தமது நிலைப்பாட்டை பகிரங்கப்படுத்திய ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் சஜின் த வாஸ் குணவர்தன, இது விடயத்தில் சுமந்திரன் இரட்டைத் தன்மை நிலைப்பாட்டை கொண்டிருக்கிறார் என்று தெரிவித்துள்ளார்.

இது பற்றி சஜின் த வாஸ் குணவர்தன, தாம் சுமந்திரனின் கருத்து குறித்து பாராளுமன்றத்தில் தனது நிலைப்பாட்டை 17ம் திகதியன்று அறிவிக்கப் போவதாக கூறியிருந்தார்.

எனினும் நவம்பர் 17ம் திகதியன்று சுமந்திரன் பாராளுமன்றத்திற்கு வருகை தந்திருந்த போதிலும், அவர் பாராளுமன்ற சபைக்குள் பிரவேசிக்காமல் சஜின் த வாஸ் குணவர்தனவை நேருக்கு நேர் சந்திப்பதை தவிர்த்துக் கொண்டதாக அறிவிக்கப்படுகின்றது.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பு தமிழ் மக்களின் அபிலாஷைகளுக்கு ஏற்புடைய வகையில் ஐக்கியமாக சமூக தீர்வொன்றை காண்பதில் அக்கறை கொண்டிருக்க வில்லை என்று கூறிய சஜின் த வாஸ் குணவர்தன, தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பலதரப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் வெவ்வேறான கருத்துக்களை அவ்வப்போது இது குறித்து வெளியிட்டு வருகிறார்கள் என்றும் கண்டனம் தெரிவித்தார்.

சுமந்திரன் எம்.பி. ஒரு கருத்தை கூறும் போது அவரது கட்சித் தலைவர் ஆர் சம்பந்தன் இன்னுமொரு கருத்தை தெரிவிக்கிறார். தமிழர் விடுதலை கூட்டணிக்குள் ஓர் உண்மையான ஐக்கியம் ஏற்படும் வரை வடக்கு, கிழக்கு மக்களின் பிரச்சினைகளுக்கு ஒரு தீர்வைக் காண்பது கஷ்டமாக இருக்குமென்றும் சஜின் த வாஸ் குணவர்தன எம்.பி. மேலும் சுட்டிக்காட்டினார்.

ஒரு தடவை சுமந்திரன் எம்.பி. 13வது திருத்தம் அர்த்தமற்றதாக இருப்பதனால் அதனை சட்டப்புத்தகத்தில் இருந்து நீக்கிவிட வேண்டுமென்று வலியுறுத்தியிருந்தார்.

13வது சட்டத்திருத்தம் இலங்கையின் சட்டப் புத்தகத்தில் இணைத்திருப்பது அநாவசியமான செயல் என்று அவர் வலியுறுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# யுத்த காலத்தில் ஐ.நா. தன் கடமைகளைச் செய்யத் தவறியது

**- வெளிவிவகார அமைச்சுச் செயலாளர்**

ஐ.நா.அமைப்பினால் வெளியிடப்பட்டுள்ள உள்ளக அறிக்கை குறித்து அரசாங்கம் உத்தியோகபூர்வமாக எந்த விளக்கத்தையும் அளிக்கப்போவதில்லை என்று வெளிவிவகார அமைச்சின் செயலாளர் கருணாதிலக்க அமுனுகம தெரிவித்துள்ளார்.

முள்ளிவாய்க்கால் போரின் போது தமிழீழ விடுதலைப் புலிகள் பொதுமக்களை மனித கேடயங்களாகப் பயன்படுத்திக் கொண்ட தருணத்தில் ஐக்கிய நாடுகள் அமைப்பு உரிய முறையில் தனது கடமையைச் செய்யவில்லை எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

யுத்தம் இடம்பெற்ற காலத்தில் ஐக்கிய நாடுகள் அமைப்பின் மீது இலங்கை அரசாங்கம் அழுத்தங்களை பிரயோகித்ததாக சுமத்தப்படும் குற்றச்சாட்டுக்களை ஏற்றுக் கொள்ள முடியாது.

வன்னி மீதான இறுதி யுத்தம் தொடர்பாக ஐ.நா.வினால் தயாரிக்கப்பட்ட உள்ளக இரகசிய அறிக்கை என்பது மிகச் சரியான முறையில் தயாரிக்கப்படவில்லை எனவும் அவர் மேலும் தெரிவித் துள்ளார்.

# பெண்களுக்கு எதிரான வன்முறைகள் முறைப்பாடு செய்யக் குழு நியமனம்

சுகாதார அமைச்சின் கீழ் செயற்படும் நிறுவனங்கள் மற்றும் மருத்துவமனைகளில் இடம்பெறுகின்ற பெண்களுக்கு எதிரான பாலியல் ரீதியான வன்புணர்வுகள் தொடர்பில் முறைபாடு செய்வதற்காக, ஒழுக்காற்று குழு ஒன்று நியமிக்கப்படவுள்ளது.

அமைச்சர் மைத்திரிபால சிறிசேன இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார். மருத்துமனைகள் உள்ளிட்ட சுகாதார அமைச்சின் கீழ் இயங்கும் அமைப்புகளில் அதிக பாலியல் வன்முறைகள் இடம் பெறுவதால் இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

வாராந்தம் 8 தொடக்கம் 10 வரையான துஷ்பிரயோக சம்பவங்கள் பதிவாகின்றதாக அறியக் கிடைத்துள்ளது.

ஒழுக்காற்று குழுவிடம் முன் வைக்கப்படுகின்ற முறைபாடுகளின் அடிப்படையில் இரக்சிய விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு, குற்றவாளிகளுக்கு தண்டனை வழங்கப்படும் என்றும் அமைச்சர் கூறினார்.

# பேச்சுவார்த்தைக்கு அரசு தயார்: தமிழ் கூட்டமைப்பே தடையாக உள்ளது

**- அமைச்சர் நிமல் சிறிபால டீ சில்வா**

இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணும் பேச்சுவார்த்தை விடயத்தில் அரசாங்கத்தின் கதவுகள் எப்பொழுதும் போலவே திறந்தே உள்ளன. எனினும், பேச்சுவார்த்தையில் பங்கெடுத்து ஆக்கபூர்வமானதொரு தீர்வினை எட்ட தமிழ்க் கூட்டமைப்பே தடையாக உள்ளது என்று அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.


தமிழ்க் கூட்டமைப்பு தமக்குத் தேவையானபோது பேச்சு நடத்த வருவதும், பின்னர் அதனை இடைநடுவில் தாமே முறித்துக் கொண்டு அரசாங்கத்தின் மீது பழியைப் போடுவதுமாகக் காலத்தைக் கடத்தி வருகிறது. இந்தியா, அமெரிக்கா, சீனா, ஜேர்மனி என அவர்கள் எந்த நாட்டிற்குச் சென்றாலும் தீர்வைக் காண இலங்கை அரசாங்கத்துடனேயே பேச்சு நடத்த வேண்டும் என்றும் அமைச்சர் தெரிவித்தார். பேச்சுக்கு நாங்கள் தயார். அரசுதான் பின்னடிக்கிறது என்று தமது மக்களைத் திருப்திப்படுத்த தமிழ்க் கூட்டமைப்பு அறிக்கைகளை விடுவதனாலோ அல்லது உரைகளை நிகழ்த்துவதனாலோ எவ்விதமான பலனுமில்லை. உண்மையான இதயசுத்தியுடன் அவர்கள் அரசாங்கத்துடன் பேச்சு நடத்த வரவேண்டும் எனவும் அமைச்சர் நிமல் சிறிபால தெரிவித்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் அரசாங்கம் நடத்திய எந்தவொரு பேச்சுவார்த்தையையும் அரசதரப்பு குழப்பவில்லை. கூட்டமைப்பினரே பொய்யான காரணங்களைக் கூறிக் குழப்பி வந்துள்ளனர். தாமே குழப்பிவிட்டு வெளிநாடுகளுக்குச் சென்று அரசாங்கத்தைக் குறை கூறிவருகின்றனர். இவர்கள் இவ்வாறு செய்தும் கூட அரசாங்கம் அவர்களுடன் பேச்சுநடத்த தயாராகவே உள்ளது. பேச்சு மூலமாக அனைவரும் ஏற்றுக்கொள்ளும் ஒரு தீர்வினைக் காண்பதில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உறுதியாக உள்ளார் எனவும் அமைச்சர் நிமல்சிறிபால தெரிவித்தார்.

பாராளுமன்றத் தெரிவுக்குழுவிற்கு வருமாறு அரசு விடுத்த அழைப்பையும் தமிழ்க் கூட்டமைப்பு நிராகரித்து வருகிறது. பேச்சுவார்த்தை நடத்தவும் தயாராக இல்லை. உண்மையில் அவர்களது எதிர்பார்ப்புத்தான் என்ன? என்பது புரியாத புதிராகவே உள்ளது. ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான இன்றைய அரசாங்கம், மிகவும் பலம் வாய்ந்த சகல அதிகாரங்களையும் கொண்ட சக்தி மிக்க அரசாங்கமாக இருக்கின்றபோதும் தமிழ், மக்களின் நீண்ட காலப் பிரச்சினைக்கு ஒரு சுமுகமான தீர்வு காணப்பட வேண்டும் என்ற ஒரே காரணத்திற்காகவே தமிழ்க்கூட்டமைப்பின் எரிச்சலூட்டும் செயற்பாடுகளுக்கு மத்தியிலும் இத்தனை தூரம் இறங்கிவந்து விட்டுக்கொடுப் புக்களுடன் பேச்சுவார்த்தைக்கு முன்னுரிமை அளிக்க முன்வந்துள்ளது. இதனை தமிழ்க் கூட்டமைப்பினரோ வேறு எத்தரப்புமோ அரசாங்கத்தின் பலவீனமாகக் கருதக்கூடாது. தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகளாக தமிழ்க் கூட்டமைப்பைக் கருத முடியாது. எனினும், தமிழ் மக்களின் குறிப்பிடத்தக்க ஆதரவைப் பெற்ற கட்சி என்பதனா லேயே தமிழ்க் கூட்டமைப்புடன் பேச அரசு விருப்பம் கொண்டு செயற்படுவதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

# ஊழல்களுக்கு விரைவில் பதில் கிடைக்கும்:

**- மேர்வின்**



"ஊழல் மோசடிகளை மேற்கொண்டு, மக்களின் சொத்துக்களை சூறையாடி குடிசைகளை மாளிகைகளாக நிர்மாணித்தக் கொண்டவர் களுக்கு விரைவில் பதில் கிடைக்கும்" என்று பொது மக்கள் தொடர் பாடல் அமைச்சர் மேர்வின் சில்வா தெரிவித்தார்.

ஜனாதிபதியின் 67ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு இரு பாலங்களுக்கான அடிக்கல் நாட்டும் நிகழ் வுகள் நேற்று முன் தினம் அமைச்சர் மேர்வின் சில்வா தலைமையில் இடம்பெற்றது.

இதில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

# பரிதி கொலையில் இலங்கைக்கு தொடர்பு இல்லை

புலிகள் இயக்கத்தின் மூத்த உறுப்பினரும் பிரான்ஸ் தமிழர் ஒருங்கிணைப்புக் குழு பொறுப்பாளருமான பரிதி என்றழைக்கப்படும் நடராஜா மதீந்திரனின் கொலைக்கும் இலங்கைக்கும் எவ்விதத் தொடர்பும் இல்லை என்று பிரான்ஸுக்கான இலங்கை உயர்ஸ்தானிகர் கலாநிதி தயான் ஜயதிலக்க தெரிவித்துள்ளார்.

அத்துடன், பரிதியின் கொலைக்கும் இலங்கைக்கும் தொடர்பிருப்பதாக பிரான்ஸின் பெரிஸியன் பத்திரிகை கடந்த 13ஆம் திகதி வெளியிட்டுள்ள செய்திக்கும் மறுப்பு தெரிவித்துள்ள உயர்ஸ்தானிகர், அச்செய்தியில் எவ்வித உண்மையும் இல்லை என்றும் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் பிரான்ஸ் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

பரிதியைக் கொலை செய்தால் 50ஆயிரம் யூரோவுடன் (86 இலட்சம் ரூபா) இலங்கைக்கான விமானச் சீட்டொன்றும் வழங்குவதாக பிரான்ஸிலுள்ள இலங்கை உயர்ஸ்தானிகராலயம், அதனுடன் நெருங்கிய தொடர்புகொண்டிருந்த ஒருவருக்கு தெரிவித்திருந்ததாக மேற்படி பெரிஸியன் பத்திரிகை செய்தி வெளியிட்டிருந்தது.

இந்தச் செய்தியை வெளியிட்ட ஊடகவியலாளர் ஸ்டெபன் செலாமியை சந்திக்கத் தான் பலமுறை முயற்சித்த போதும் அது பயனளிக்கவில்லை என்று உயர்ஸ்தானிகர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பிரான்ஸ் தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவின் உள்ளக பிரச்சினை காரணமாகவே பரிதி என்பவர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார் என்று பிரான்ஸ் பொலிஸார் அறிவித்திருந்தனர்.

இந்நிலையில், இந்த படுகொலையுடன் தொடர்புடையதான சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ள இரு சந்தேகநபர்களும், இலங்கை உயர்ஸ்தானிகராலயம் தொடர்பில் குறித்த பத்திரிகை வெளியிட்ட செய்தியைப் போன்றதொரு தகவலை பொலிஸாருக்கு தெரிவித்திருக்கவில்லை என்று உயர்ஸ்தானிகர் ஜயதிலக்க மேலும் குறிப்பிட்டுள்ளார்.

**கறுப்புப் பணம்:**

# சுவிஸ் வங்கியிடம் தகவல் பெற இந்திய அதிகாரிகயை முயற்சி

சுவிட்சர்லாந்தின், எச்.எஸ்.பி.சி., வங்கியில் கறுப்பு பணத்தை பதுக்கி வைத்துள்ள, இந்தியர் களின் விவரங்களை தெரிந்து கொள்வதற்காக, வருமான வரித் துறை அதிகாரிகள், சுவிஸ் வருவாய் துறை அதிகாரிகளை அணுகியுள்ளனர்.

கறுப்பு பணத்தை பதுக்கி வைத்துள்ளவர்களில் பலர், போலியான பெயர்களில், வங்கியில் கணக்கு வைத்திருப்பது, முதல் கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

வரி செலுத்துவதை தவிர்ப்பதற்காகவும், தங்களின் வருமானம் பற்றிய விவரங்கள், வெளியில் தெரியாமல் மறைப்பதற்காகவும், இந்தியாவைச் சேர்ந்த, பல வி.ஐ.பி.,க்கள், பெருமளவு கறுப்பு பணத்தை, சுவிட்சர்லாந்தில் உள்ள, வங்கிகளில் பதுக்கி வைக்கின்றனர்.

இந்த வங்கிகள், தங்களின் வாடிக்கையாளர் பற்றிய விவரங்களையும், அவர்களின் கணக்குகளில் உள்ள தொகைகளையும், ரகசியமாக வைத்திருக்கின்றன. இதனால், கறுப்பு பணத்தை பதுக்கி வைப்போரின் சொர்க்கமாக, சுவிட்சர்லாந்து வங்கிகள் விளங்குகின்றன.

சுவிட்சர்லாந்தின், எச்.எஸ்.பி.சி., வங்கியில், கறுப்பு பணத்தை பதுக்கி வைத்துள்ள, 700 இந்தியர்களை பற்றிய பட்டியலை, பிரான்சு அரசு, மத்திய அரசிடம் ஒப்படைத்தது. சமூக ஆர்வலரான, அரவிந்த் கெஜ்ரிவாலும், கறுப்பு பணத்தை பதுக்கி வைத்துள்ளவர்களின் பட்டியலை, சமீபத்தில் வெளியிட்டு, பரபரப்பை ஏற்படுத்தினார்.

இதையடுத்து, வருமான வரித் துறை அதிகாரிகள், இது தொடர்பான விசாரணையை தீவிரப் படுத்தியுள்ளனர். இதுகுறித்து, வருமான வரித் துறை வட்டாரங்கள் கூறியதாவது:எச்.எஸ்.பி.சி., வங்கியில் கணக்கு வைத்திருக்கும் இந்தியர்களை பற்றிய விவரங்களை தெரிந்து கொள்வதற்காக, மத்திய நேரடி வரி வாரியத்தின் அதிகாரிகள், சுவிட்சர்லாந்து நாட்டின், வருவாய் துறை அதிகாரிகளை அணுகியுள்ளனர்.

தமிழ்நாதம்
Thamil Naatham

நவம்பர் மாதம் 20ஆம் திகதி செவ்வாய்க்கிழமை

# யுத்தம், அப்பாவி மக்களை மன நோயாளிகளாகவும் ஆக்கியது

மூன்று தசாப்த காலமாக தொடர்ந்து இடம்பெற்ற யுத்தம் காரணமாக வடக்கு, கிழக்கு மாகாணங்களில் சுமார் 65,000 பேர் மனநலம் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்த அதிர்ச்சித் தகவலை சுகாதார அமைச்சு வெளியிட்டுள்ளது. இவர்களுள் 62,674 பேர் ஏற்கனவே சிகிச்சை பெற்றுள்ளார்கள். தற்போது 2556பேர் சிகிச்சை பெற்று வருகின்றனர் என்று பிரதி சுகாதார அமைச்சர் லலித் திஸாநாயக்கா பாராளுமன்றத்தில் தெரிவித்தார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பி. அ. விநாயகமூர்த்தி கடந்த வெள்ளிக்கிழமை எழுப்பிய வாய்மூல கேள்விக்கான விடையின்போது இதனைத் தெரிவித்தார்.

ஏற்கனவே யாழ். போதனா வைத்தியசாலையில் 25,926 பேர் மனநல நோய்ச் சிகிச்சை பெற்றுள்ளனர். தற்போது அங்கு 1227 பேர் சிகிச்சை பெற்று வருகின்றனர் என்றும் பிரதி அமைச்சர் தெரிவித்தார். ஏனைய பிரதேச வைத்தியசாலைகளில் 18,361 பேர் சிகிச்சை பெற்று வருகின்றனர் என்றும் பிரதியமைச்சர் தெரிவித்தார். வடமாகாணத்தின் ஏனைய மாவட்டங்களான மன்னார், வவுனியா, கிளி-நொச்சி, முல்லைத்தீவு ஆகிய பிரதேசங்களிலும் ஆயிரக்கணக்கானவர்கள் மனநலம் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். மூன்று தசாப்த கால யுத்தம் ஏற்படுத்திய கொடூரம் இது.

வடக்கிலும், கிழக்கிலும் 82,000 விதவைகள் இருக்கிறார்கள் என்று மகளீர் கல்வி மற்றும் ஆய்வு நிலையத்தின் தகவல் கூறுகிறது. வடக்கில் 40,000 பேரும், கிழக்கில் 42,000 பேரும் யுத்த விதவைகள் ஆக்கப்பட்டிருக்கிறார்கள். யாழ் மாவட்டத்தில் மட்டும் 26,000ம் விதவைகள் உள்ளனர் என்று யாழ்ப்பாண பிரதேச சபையின் மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர் தெரிவிக்கிறார். யுத்தம் ஆண்களையும், பெண்களையும், சிறுவர்களையும், சிறுமிகளையும், வயோதிபர்களையும் பாகுபாடின்றிக் காவு கொண்டாலும் மிக அதிக-ளவில் உயிரிழந்தவர்கள் ஆண்களே.

போராளிகளாகப் பிடித்துச் செல்லப்பட்டவர்,கள், இரு தரப்பு மோதல்களிலும் சிக்கிக் கொண்டவர்கள், யுத்தத்தில் சம்பந்தப்பட்ட ஆயுதத் தரப்புகளின் அட்டகாசத்திற்குப் பலியானவர்கள் என்று பல வகையானவர்களைப் பார்க்க முடியும். கண்ணுக்கு முன்னால் நெருங்கிய இரத்த உறவுகள் உடல் சிதறி மாண்டு போனதைப் பார்த்தவர்கள் மனம் குழம்பிப் போவார்கள். அவர்களின் மனநலம் பாதிக்கப்படுவது தவிர்க்க முடியாதது.

யுத்தகளத்தில் மனிதம் மௌனித்து விடும். ஆயுதங்கள் மட்டுமே அட்டகாசமாகப் பேசும். யுத்தத்தில் ஈடுபடும் எந்தத் தரப்பு என்றாலும் றோம் சமவாயத்தைக் கையில் வைத்துக் கொண்டு சண்டை பிடிப்பதில்லை. அப்பாவித் தமிழ் மக்களின் ஆபத்பாந்தவர்கள் என்று கூறிக் கொண்டவர்களாலும், தமிழ் மக்களின் உயிர்கள் காவு கொள்ளப்பட்டிருக்கின்றன. பயங்கரவாதத்தை எதிர்க்கிறோம் என்று சொல்லிக் கொண்டவர்களாலும் அப்பாவிகள் பலியெடுக்கப்பட்டிருக்கிறார்கள்.

மக்கள் வாழ்ந்த பகுதிகளுக்குள் யுத்தம் இழுத்துச் செல்லப்பட்டதால் யுத்த தேவனின் பலிபீடத்தில் காணிக்கைப் பொருட்களாக மக்கள் ஆக்கப்பட்டார்கள். வடக்கு, கிழக்கு வாழ் தமிழ் சமூகத்தின் கலாசார, பாரம்பரிய, பண்பாட்டு விழுமியங்களின்படி ஆண்களைத் தலைவர்களாகக் கொண்ட குடும்ப அமைப்புக்களே பெரும்பாலும் இருக்கின்றன. பெண்களைக் கட்டுப்பெட்டிகளாக, கட்டுப்படுத்தி வைத்திருக்கும் ஒரு பாரம்பரிய மரபும் தமிழ் சமூகத்தினர் மத்தியில் இன்னமும் நிலவத்தான் செய்கிறது. குடும்பத் தலைவன் மனநலம் அல்லது உடல் நலம் பாதிக்கப்பட்டால், குடும்பச் சுமை பெண்களின் தலைமேல் விழுகிறது. குடும்பத் தலைவனை யுத்தம் காவு கொண்டால் குடும்ப வண்டியை இழுத்துச் செல்ல வேண்டிய பொறுப்பு பெண்களின் தலையில் சுமத்தப்படுகிறது. தமிழ் சமூகத்தின் கட்டுமானங்களையெல்லாம் தகர்த்துக் கொண்டு, யுத்தக் கொடூரங்களுக்கு மத்தியில் குடும்பப் பாரத்தைச் சுமக்கும் பெண்களும், வயது குறைந்த பிள்ளைகளும் பாரிய மன அழுத்தங்களுக்கு உள்ளாவது தவிர்க்க முடியாதது.

யுத்தத்தின் ஞாபகச் சின்னங்களாக வெறுமனமே இடிந்துபோன கட்டிடங்கள் மட்டும் எழுந்தும், விழுந்தும் நிற்கவில்லை. யுத்தக் கொடூரத்தின் சின்னங்களாக அவயவங்களை இழந்து அல்லல்படும் மக்கள் இன்னமும் இருக்கிறார்கள். இரத்தத்தையும், கண்ணீரையும் அன்று சிந்திய அப்பாவி மக்கள், இன்னமும் இப்போதும் இரத்தக் கண்ணீர் வடித்துக் கொண்டிருக்கிறார்கள். மூன்று தசாப்தகால யுத்தம் முடிவடைந்து மூன்று வருடங்கள் கழிந்து விட்டன.

அழிவைச் சந்தித்த மக்களின் ஆற்றாமையைப் போக்கி, அவர்களின் வாழ்வுக்கு வளம் சேர்க்க வேண்டிய கடமை அரசாங்கத்திற்கு மட்டுமல்ல, சிவில் சமூகத்துக்கும் இருக்கிறது. மனித வாழ்வுக்குத் தேவையான பௌதீக வளங்களை மட்டும் அள்ளிக் கொடுப்பதால் பிரச்சினைகள் தீர்ந்துவிடப் போவதில்லை. அதற்காக கிள்ளிக் கொடுங்கள் என்று சொல்லவும் நாம் தயாரில்லை.

இந்த நாட்டில் யுத்தம் எழுந்தமானமாக ஏற்பட்ட ஒன்றல்ல. இரு தரப்புகளாலும் உசுப்பிவிடப்பட்ட இனமுறுகல், அப்பட்டமான பாராளுமன்ற சந்தர்ப்பவாதிகளின் இனவெறிக் கூக்குரல்கள், இனத்துவ மேலாண்மை, யதார்த்த நிலைமைகளை சரிவரப் புரிந்து கொள்ளாமல் சிறுபிள்ளைத்தனமாக ஆயுதங்களைத் தூக்க முனைந்தமை போன்ற பல்வேறு காரணிகள் தமிழ் சமூகத்தை மட்டுமல்ல, இந்த நாட்டையே துயர நிலைக்கு இட்டுச் சென்றிருக்கிறது.

இனக்குரோதம் ஏற்படுத்திய நாசங்களிலிருந்து நாம் பாடங்களைக் கற்றுக் கொள்ள வேண்டும். இன, மத, மொழி, சாதி, சமய கட்டுப்பாடுகளையெல்லாம் தகர்த்தெறிந்து கொண்டு மனித நேயத்தைக் கட்டியெழுப்புவதற்கு முன்னுரிமை கொடுக்க வேண்டும். வரலாறு கற்றுத்தந்த பாடங்களிலிருந்து நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கு அனைத்து மக்களும் கைகோர்த்து முன்செல்ல வேண்டும்.

இல. 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்
ஆசிரியர் பீட தொலைபேசி- 021-2219567 / பக்ஸ் 021-2219505,
விளம்பரம்/விநியோகம் : 021-2219506
e-mail: tnaatham@yahoo.com

# பிரபாகரன், பொட்டம்மான் போன்றவர்களே ராஜீவ் காந்தியைத் திட்டமிட்டுக் கொன்றனர்

## கிளிநொச்சியில் வழங்கிய பேட்டியில் கே.பி. தகவல்


கிளிநொச்சியில் உள்ள கே.பி.இ[illegible] இல்லத்தில் உள்ள பிள்ளைகளுடன் கே.பி. காணப்படுகிறார்.

“பிரபாகரன், பொட்டம்மான் போன்றவர்களே முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜிவ்காந்தியைத் திட்டமிட்டுக் கொலை செய்தார்கள். இக் கொலைக்கும் எனக்கும் எவ்வித சம்பந்தமுமில்லை” என்றார். கே.பி. என்றழைக்கப்படும் குமரன் பத்மநாதன் கிளிநொச்சியில் தங்கியிருக்கும் கே.பி.யை ஊடகவியலாளர் டி.பி.எஸ். ஜெயராஜ் தீபாவளித் தினத்தன்று நேரடியாகச் சந்தித்துக் கலந்துரையாடினார்.

கே.பி.என்கிற மாற்றுப் பெயருடைய செல்வராசா பத்மநாதன் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் மறைவுக்குப் பின்னர் புலிகளின் தலைமைத்துவம் என்கிற கவசத்தை ஏற்றுக் கொண்டார் என்பதுதான் இந்த நாட்களில் செய்திகளில் அதிகம் அடிபடும் ஒரு விடயமாகும்.

கொழும்பில் பாதுகாப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்த கே.பி. கிளிநொச்சிக்கு மாற்றப்பட்டுள்ளார்.கே.பி.யின் புதிய வதிவிடம் கிளிநொச்சி தெற்கில் உள்ள திருவையாறு பிரதேசத்தில், இரணைமடு சந்தியிலிருந்து ஏறக்குறைய ஒரு கிலோ மீற்றர் தூரத்தில் அமைந்துள்ளது.

அந்த வீடு ஏ - 9 என அழைக்கப்படும் யாழ்ப்பாணம் - கண்டி நெடுஞ்சாலையிலிருந்து சுமார் 100 - 150 மீற்றர் உட்புறமாக தொண்டமான் குறுக்கு வீதியில், சுமார் ஆறு ஏக்கர் நிலப்பரப்பை கொண்ட வளாகத்துள் அமைந்துள்ளது. முன்னாள் எல்.ரீ.ரீ.ஈ அரசியல் பொறுப்பாளர் சுப்பையா பரமு தமிழ்செல்வன் இந்த வளாகத்தைத்தான் தனது வதிவிடமாகப் பயன்படுத்தியது மட்டுமல்லாமல், வான்வெளி குண்டுத் தாக்குதல் மூலமாக தனது மரணத்தையும் அவர் இங்குதான் சந்தித்தார்.

கொழும்பிலிருந்து கிளிநொச்சிக்கு தனது இருப்பிடத்தை அவர் மாற்றியது ஏற்படுத்திய சலசலப்புக்கு அப்பால், முன்னாள் இந்திய பிரதமர் ராஜீவ் காந்தியின் கொலையில் அவர் வகித்த பாத்திரத்தை பற்றிய குற்றச்சாட்டின் மைய வெளிச்சமும் கே.பி. மீது பாய்ச்சப்பட்டுக் கொண்டிருக்கிறது.

ராஜீவ் காந்தியின் கொலையில் அவருக்குள்ள தொடர்புகள் பற்றி, இந்திய மத்திய புலனாய்வுத் துறையினர்(சி.பி.ஐ) அவரை விசாரணை செய்தார்கள் என்கிற செய்தி அறிக்கை, இந்திய ஊடகங்களில் வெளியானதிலிருந்து, ஸ்ரீலங்கா ஊடகங்கள் சிலவற்றிலும் அதேபோல வெளிநாட்டிலுள்ள பல செய்தி அமைப்புகளும் கே.பி. பற்றிய அநேக செய்தி அறிக்கைகளை வெளியிட்டவாறு உள்ளன. இவற்றில் அநேகமான செய்திகள் இந்திய அதிகாரிகளால் கே.பி. விசாரணை செய்யப்பட்டார் என்பதை பற்றியே உள்ளன.

யாழ்ப்பாணம், மயிலிட்டியை சேர்ந்த 57 வயதான கே.பி. இந்தியாவுடன் நேருக்கு நேரான அவரது நிலைப்பாடு தொடர்பான ஊகங்கள் நிறைந்த பல செய்தி அறிக்கைகளுக்கு இலக்காகியுள்ளார். ஸ்ரீலங்காவிலுள்ள சில எதிர்க்கட்சி அரசியல்வாதிகள் கூட கே.பி.யைப் பற்றிப் பேசியுள்ளார்கள். அரசாங்க அமைச்சர்கள் அந்தக் கேள்விகள் சிலவற்றுக்கு பதிலும் சொல்லியுள்ளார்கள். பல ஊடகப் பிரிவுகளில் கே.பி.யின் தற்போதைய அந்தஸ்து மற்றும் பங்குபற்றி பல ஊக அறிக்கைகள் வெளியாகியுள்ளன. எதிர்காலத்தில் பெரியதொரு அரசியல் பங்களிப்பை வழங்குவதற்கு அவர் தயாராகிறார் எனக் குற்றம் சாட்டியுள்ளன. வெளிநாட்டிலுள்ள எல்.ரீ.ரீ.ஈ சார்பு செயற்பாடுகளுடன் மோதலை ஏற்படுத்த அரசாங்கம் நடத்தும் நடவடிக்கைகளில் அவர் ஒரு இரகசிய பங்கை ஆற்றிவருகிறார் என மற்றும் சில அறிக்கைகள் குற்றம் சாட்டியுள்ளன.

தற்போது கிளிநொச்சியை தளமாக கொண்டியங்கும் கே.பி.யைப் பற்றிய சர்ச்சைகள் பெரிதாக எழுந்து கொண்டிருந்தாலும், அவர் தீவின் வடபகுதியில் தனது பணியை தொடர்ந்து கொண்டிருக்கிறார். இது தொடர்பான அநேக விடயங்களை தீபாவளிப் பண்டிகைக்கு அடுத்த நாள் கே.பி. என்கிற மாற்றுப் பெயருடைய செல்வராசா பத்மநாதனிடம் இந்த எழுத்தாளர் விரிவான பேச்சுக்களை நடத்தினார். வழக்கம் போல முன்னாள் எல்.ரீ.ரீ.ஈ தலைவர் புத்துணர்ச்சியுடன் மனம் திறந்து சுதந்திரமாகவும் மற்றும் வெளிப்படையாகவும் பேசினார்.

தமிழில் நடைபெற்ற அந்த கலந்துரையாடல் கேள்வி - பதில் வடிவத்தில் பிரத்தியேகமாக வழங்கப்படுகிறது.

**கேள்வி:** தீபாவளி வாழ்த்துக்கள்! உங்களது கடந்த மூன்று தீபாவளியும் தடுப்புக் காவலில் கொழும்பில்தான் இடம்பெற்றது. இந்த தீபாவளி வித்தியாசமான ஒன்று. இந்தமுறை தீபாவளியை நீங்கள் எப்படிக் கொண்டாடினீர்கள்?

**பதில்**: உங்களது தீபாவளி வாழ்த்துக்களுக்கு நன்றி. ஆம்! கடந்த மூன்று வருடங்களைப் போலில்லாமல், அதனுடன் ஒப்பிடும்போது நான் சுதந்திரமாக இருப்பதால் இந்த தீபாவளி வித்தியாசமான ஒன்றுதான். மிக நீண்ட காலங்களுக்குப் பின்னர் தீபாவளிக்கு வடக்கிலிருப்பது மிகவும் மகிழ்ச்சியாக உள்ளது. தீபாவளி சமயத்தில் நான் வடக்கில் இருக்கும் ஒரு சம்பவம் பலப் பல வருடங்களுக்கு பின்னர் இடம் பெறுகிறது. அநேக நினைவுகளை நான் மீண்டும் மீட்டிப் பார்க்கிறேன். வடக்கில் இருப்பதைக் காட்டிலும் இந்த வருட தீபாவளி மிக மிக மகிழ்ச்சிகரமான ஒன்று ஏனெனில் அந்த முழு நாளையும் நான், முல்லைத்தீவு மாவட்டத்தில் நேர்டோவினால் (வடக்கு - கிழக்கு மறுவாழ்வு மற்றும் அபிவிருத்தி நிறுவனம்) நடத்தப்படும் இரண்டு சிறுவர் விடுதிகளில் கழித்தேன்.

**கேள்வி:** அதைக் கேட்பதில் நான் மகிழ்ச்சியடைகிறேன். அந்த நாள் எப்படியிருந்தது?

**பதில்:** அது அற்புதமானதாகவும் மிகவும் உணர்ச்சி பூர்வமானதாகவும் இருந்தது. எனது குடும்பத்தினர் தாய்லாந்தில் இருக்கும் அதேவேளை இங்கே ஸ்ரீலங்காவில் நான் தனியாக இருக்கிறேன். இந்தச் சிறுவர்களும் கூட குடும்பங்களின் கவனிப்புகள் இன்றி தனியாக உள்ளனர். அவர்கள் எனது சொந்தப் பிள்ளைகளைப் போலவே மற்றும் அவர்களில் பலர் என்னை அப்பா என்றுதான் அழைக்கிறார்கள். எல்லாப் பிள்ளைகளுக்கும் தீபாவளிப் பரிசாக நான் புத்தாடைகளை வழங்கினேன். நாங்கள் அனைவரும் குளித்து புத்தாடைகளை அணிந்து கொண்டோம். அன்பு இல்லத்தில் இருந்த சிறுவர்களுடன் நான் மதிய போசனம் அருந்தினேன். அன்று எங்களுக்கு ஆட்டிறைச்சி கறி கிடைத்தது. அவர்கள் பட்டாசுகளை கொளுத்த விரும்பினார்கள். எனவே நாங்கள் அதற்கான ஏற்பாடுகளைச் செய்து கொடுத்தோம். பின்னர் நான் பாரதி இல்லத்திலிருந்த சிறுமிகளுடன் தீபாவளி பலகாரங்களும் தேனீரும் அருந்தினேன். அவர்கள் இசை, நடன. பாட்டு. மற்றும் நாடக நிகழ்ச்சிகளை நடத்தினார்கள். பின்னர் நான் அந்தச் சிறுமிகளுடன் கோழி இறைச்சிக் கறியுடன் கூடிய இராப்போசனத்தை சற்று நேரத்துடனேயே உட்கொண்டுவிட்டு கிளிநொச்சியிலுள்ள வீட்டுக்குத் திரும்பினேன்.

அந்த சிறுவர்களுக்கும் எனக்கும் அது ஒரு மறக்க முடியாத தீபாவளி.

**கேள்வி:** தீபாவளி சமயத்தில் இந்த பிள்ளைகளின் வாழ்வில் சிறிதளவு மகிழ்ச்சியையும் உற்சாகத்தையும் கொண்டுவர உங்களால் முடிந்ததையும் அதேசமயம் இந்த நடவடிக்கை மூலம் நீங்களும்கூட திருப்தியையும் மற்றும் மனநிறைவையும் பெற்றீர்கள் என்பதை அறிவது மகிழ்ச்சியாயுள்ளது. நேர்டோவின் பங்கினையும் மற்றும் நீங்கள் ஆற்றிவரும் பணிகளைப்பற்றியும் இன்னும் அதிகமாக அறிந்து கொள்வதில் வாசகர்கள் மிகவும் ஆவலாக இருப்பார்கள் ஆனால் அதற்கு முன்னால் உங்களைப் பற்றி சமீபத்தில் எழுந்துள்ள ஒரு விடயம்பற்றி நான் அதிக கவனம் செலுத்த விரும்புகிறேன். இது ராஜீவ் காந்தியின் கொலை தொடர்பானது, மற்றும் உங்களை கைது செய்வதற்காக இந்தியா இன்ரபோலின் உதவியை நாடுகிறது. இப்போது நீங்கள் அது பற்றி பேச விரும்புகிறீர்களா?

**பதில்:** நிச்சயமாக! மறைப்பதற்கு என்னிடம் எதுவும் இலலை. உய்களுக்கு என்ன தேவையோ அதை நீங்கள் என்னிடம் கேட்கலாம்.

*(நாளை தொடரும்)*

# செனட் சபை, தோல்வியுற்ற எம்.பி.க்களின் தங்குமடமாகவே விளங்கியது

## ஜனாதிபதிக்கு எழுதிய கடிதத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் ஆனந்தசங்கரி



“சிறுபான்மையினரின் பாதுகாப்புக்கென உருவாக்கப்பட்ட செனட் சபை, பாராளுமன்றத் தேர்தலில் தோற்கடிக்கப்பட்டவர்களின் தங்குமடமாகவே விளங்கியது” என்று தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் வீ.ஆனந்தசங்கரி கடந்த 9ஆம் திகதி ஜனாதிபதிக்கு அனுப்பிய நீண்ட கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த காலங்களிலெல்லாம் புலி இயக்கத் தலைவர் பிரபாகரனுக்குத் தொடர்ச்சியாகக் கடிதங்கள் எழுதி வந்த ஆனந்தசங்கரி அவர்கள், பிரபாகரனின் மறைவுக்குப் பின்னர் ஜனாதிபதிக்குக் கடிதங்கள் எழுதத் தொடங்கினார். அவர் எழுதிய கடிதங்களிலேயேமிகவும் நீண்டதொரு கடிதத்தை ஜனாதிபதிக்கு இந்தத் தடவை எழுதியுள்ளார். அவரது மிகவும் நீண்ட கடிதத்திலிருந்து முக்கியமான ஒரு தொடர் கடிதம் கீழே தரப்படுகிறது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளில் ஒன்றுதான் தமிழர் விடுதலைக் கூட்டணி. ஆனால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் ஏனைய நான்கு கட்சிகளின் ஒப்புதலைப் பெறாமலேயே இந்தக் கடிதம் ஜனாதிபதிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதென்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளில் ஒன்றான ஈ.பி.ஆர்.எல்.எப்.பின் முக்கியஸ்தரான சுரேஷ் பிரேமச்சந்திரன் எம்.பி.தெரிவித்தார்.

ஆனந்தசங்கரி அவர்கள் எழுதிய கடிதத்தின் ஒரு பகுதி வருமாறு:

இந்த நாடு சுதந்திரமடைவதற்கு முன்பு அக்டோபர் மாதம் 1946ம் ஆண்டு சோல்பரி பிரபுவால் தயாரிக்கப்பட்ட அரசியல் சாசனத்தை ஏற்பதா? இல்லையா என்பதை அன்றைய சட்டசபை விவாதித்தது. அன்றைய மந்திரிகள் அணிக்கு தலைமை தாங்கிய முதல் தடவையாக உருவாக்கிக் கொண்டிருக்கும் பாராளுமன்றத் திற்குப் பிரதம மந்திரியாக பதவியேற்கத் தயாராகிக் கொண்டிருந்த டொன் ஸ்ரீபன் சேனநாயக்கா அவர்கள் தமிழ் சட்டசபை உறுப்பினர்களை பார்த்து லண்டனில் இருந்து ஆளப்படுவதை விரும்புகிறீர்களா? அல்லது இலங்கையராக இருந்தே ஆட்சிக்கு உதவ விரும்புகிறீர்களா? என்ற கேள்வியை எழுப்பினார்.

தனது உரையின் முடிவில் “காங்கிரஸ் சார்பிலும் என் சார்பிலும் சுதந்திர இலங்கையில் நீங்கள் எவ்வித பாதிப்பையும் அடைவீர்கள் என்று பயப்படத் தேவையில்லை என்று சிறுபான்மைச் சமூகத்திற்கு விசுவாசமாக ஓர் உத்தரவாதத்தை தருகின்றேன். பெரும் கனவானும் நாட்டின் தேசபிதா என்று வர்ணிக்கப்பட்ட டி.எஸ். சேனநாயக்கா அவர்கள் கொடுத்த உறுதிமொழியால் சட்டசபை உறுப்பினர்கள் திருப்தி அடைந்தனர். 1948ம் ஆண்டு பெப்ரவரி 4ம் திகதி சுதந்திரத்தை பெற்றுத் தந்த சோல்பரி பிரபுவால் உருவாக்கப்பட்ட அரசியல் சாசனத்தை தமிழ்ப் பிரதிநிதிகள் அனைவரும் அமுல்படுத்துவதற்கு வாக்களித்தனர். எந்தவித வற்புறுத்தலுக்கும் கட்டுப்படாது ஏகமனதாக வாக்களித்த சட்டசபை உறுப்பினர்கள் தாம் பிரதிநித்துவப்படுத்திய தமிழ் மக்களின் மரண சாசனத்திற்கு ஒப்புக் கொடுத்ததாக கருதியிருக்கமாட்டார்கள் என்பது இன்று எனது பார்வைக்குத் தெரிகின்றது.

தமது மக்களைக் காப்பாற்றுவதற்காக கிடைத்த இறுதிச் சந்தர்ப்பத்தை இழக்கின்றோம் என்றோ அல்லது பிரதிநிதிகள் அனைவரும் ஒற்றுமையாக இருப்பதால் நியாயபூர்வமான கோரிக்கைகளை வென்றெடுக்க முடியுமென்பதையும் உணரத் தவறிவிட்டார்கள். அந்த நேரத்தில் சிங்களத் தலைமை நியாயமான எதனைக் கேட்டிருந்தாலும் விட்டுக்கொடுக்கத் தயாராக இருந்தது. சிறுபான்மைச் சமூகத்தவர்களின் எதிர்ப்பு இருந்திருக்குமாயின் நமது நாட்டிற்கு சுதந்திரம் கிடைப்பது காலதாமதமாகிவிடும் என்பதனையும் அவர்கள் அறிந்திருந்தார்கள். மேலும் அந்த நேரத்தில் டி.எஸ். சேனநாயக்கா மீது முழு நம்பிக்கை வைத்திருந்தார்கள். அவர் பெரிதாக மதிக்கப்பட்ட சுதந்திரப் போராளி மட்டுமல்ல அரசியல் சாசனத்திற்கு பல்வேறு தரப்பினரிடமிருந்து ஆதரவு தேடிய பெரியார்.தாராள மனப்பான்மை கொண்ட நியாயமாகவும், நீதியாகவும் செயற்படுகின்ற சிங்கள சமூகத்தின் எதிர்காலத் தலைவர்கள் தேசபிதா என்று ஏற்றுக் கொள்ளப்பட்ட பெரியார் கொடுத்த வாக்குகுறுதியை அவமதிப்பார்கள் என்பதை தமிழ் தலைவர்கள் கனவிலும் எதிர்பார்த்திருக்க மாட்டார்கள். மிகவும் பிரமாதமாக புகழப்பட்ட சோல்பரி பிரபுவின் அரசியல் சாசனத்தில் சிறுபான்மை மக்களை பாதுகாப்பதற்கு பெரிதாக விசேட அம்சங்கள் எதுவும் உள்ளடக்கப் பட்டிருக்கவில்லை. அதற்குப் பதிலாக அந்த அரசியல் சாசனத்தின் பிரிவு 29ல் குறிப்பிட்ட இனத்திற்கோ அல்லது மதத்தை சேர்ந்தவர்களுக்கோ விசேட சலுகைகள் பாதுகாப்புக்கள் கொடுப்பதற்கோ அல்லது அவைகள் வேறு குழுவினருக்கு கொடுப்பதனை மறுப்பதற்கோ எதுவித சட்டத்தையும் இணைக்க முடியாது என்பதை மட்டும் கொண்டிருந்தது. இந்த அம்சத்தை சேர்த்துக் கொண்ட போது சிறுபான்மை சமூகத்தின் பாதுகாப்பிற்கு, மனிதனுடைய சிந்தனைக்கு எட்டக்கூடிய அளவிற்கு சென்ற சில அம்சங்கள் உருவாக்கப்பட்டன என்று சோல்பரி பிரபு தம்பட்டம் அடித்தார்.

பாதுகாப்பெனக் கருதமுடியாத சில அம்சங்கள் சிறுபான்மை மக்களின் பாதுகாப்பிற்கென உள்ளடக்கப்பட்டிருந்தன. சிறுபான்மையினரின் பாதுகாப்பிற்கென உருவாக்கப்பட்ட செனட் என வர்ணிக்கப்பட்ட மேல்சபை எவ்வாறு பாராளுமன்றத் தேர்தலில் தோற்கடிக்கப்பட்டவர்களின் தங்கு மடமாக விளங்கியது, என்பதனையும் செனட்சபை ஒழிப்பதற்கு நாமிருவரும் வாக்களித்தமையும் நீங்கள் மறந்திருக்கமாட்டீர்கள்.

எல்லாவற்றிற்கு மேலாக சோல்பரி அரசியல் சாசனம் சிறுபான்மை மக்களுக்கு பாதகமாகச் செயற்பட பல வகையிலும் இயங்கியது. என்பது தெளிவாக இருந்தது. இறுதியாக சோல்பரி அரசியல் சாசனமும் அதன் சில அம்சங்களும் தமிழ் மக்கள், சிங்களத் தலைமையிலும் பிரித்தானிய அரசின்மீதும் கொண்டிருந்த விசுவாசத்திற்கும், நம்பிக்கைக்கும் துரோகமிழைத்தது. பிரித்தானிய அரசிற்கு ஒரு கடமை இருந்தது. பல்வேறு இனப்பிரிவினர்களும், ஏனையவர்களுடன் சமமாக உரிமையோடு சமாதானமாக வாழவைக்க வேண்டிய தார்மீக உரிமையும் பொது கடப்பாடும் பிரித்தானிய அரசுக்கு இருந்தது. தற்போது மிகவும் காலம் கடந்து விட்டாலும், சுதந்திரம் கிடைத்த குறிப்பிட்ட சில காலத்திற்குள் சில பிரச்சினைகளுக்குத் தீர்வு கண்டிருக்க முடியும். சுதந்திரம் கிடைத்த சில குறிப்பிட்ட காலத்திற்குள் தேசிய கொடிப் பிரச்சினை, பிரஜாவுரிமை பிரச்சினை, அரச மொழிப் பிரச்சினை, பிசிவிக் கவுன்சில் மேன்முறையீடு போன்றவற்றிற்கு பிரித்தானிய அரசின் நல்லெண்ணத்தோடு சமாதான முறையில் தீர்வு கண்டிருக்க முடியும். துரதிஷ்ட வசமாக பிரித்தானிய அரசோ, அரசியல் சாசனத்தை தயாரித்த சோல்பரி பிரபுவோ தலையிடாத காரணத்தினால் அதற்குரிய விளைவை நாடு இன்று அனுபவிக்கின்றது.

இப்போதுள்ள பிரச்சினை என்னவென்றால் கௌரவமிக்க அரச அப்புக்காத்து என்ற பட்டங்களைப் பெற்ற தமிழ் சட்டமன்ற உறுப்பினர்கள் தந்திரமாக ஏமாற்றப்பட்டார்களா அல்லது மனக்கிளர்ச்சியால் புறக்கணித்தார்களா? அல்லது புதிய அரசியல் சாசனத்தை சுதந்திர இலங்கையில் சிறுபான்மை மக்கள் எதுவித பயத்துடனும் வாழத் தேவையில்லை என்று கூறி ஆதரிக்க வைத்த நாடளாவிய எல்லோருக்கும் தேசபிதாவாகிய டி.எஸ் சேனநாயக்கா சிங்களத் தலைமையின் பலமிக்க ஒரு சாராரால் நாட்டின் தேசபிதா என்ற பெரும் அந்தஸ்திலிருந்து துரோக மிழைக்கப்பட்டு வெறும் சிங்கள தேசத்தின் பிதாவாக பதவி இறக்கப்பட்டாரா? நாட்டின் சரித்திரத்தையும் பூகோளத்தையும் சரியாக தெரியாத பல்வேறு இனத்தை சேர்ந்த பலர் இங்கு இருக்கின்றார்கள். எமது மக்களில் எத்தனை பேருக்கு இலங்கையையும் இந்தியாவையும் 22 மைல் நீளமுள்ள ஒரு தொடுவாய்தான் பிரிக்கின்றது என்பதை அறிந்திருக்கின்றார்கள். அதிகம் தெரியாத அதிகமாக பேசப்படாத இலங்கை சரித்திரத்தின் ஒரு முக்கிய சம்பவம் அரசகுமாரனாகிய விஜயனும் அவருடைய 700 தோழர்களும் இலங்கை வந்தடைந்தமையே. பாண்டிய மன்னன் தன் சொந்த மகளை விவாகம் செய்து வைத்து விஜயனின் தோழர்கள் 700 பேருக்கும் வாழ்க்கை துணை வியர்களையும் தெரிவு செய்து கொடுக்கும் அளவிற்கு பாண்டிய மன்னனின் நட்பை விஜயன் பெற்றிருந்தான். இதைவிடப் பல்வேறு பெறுமதிமிக்க பரிசுப் பொருட்களோடு விசேட தொழில் தெரிந்த தொழிலாளர்களையும் ஆயிரம் குடும்பத்தினரையும் பாண்டிய மன்னன் அனுப்பி வைத்தான். தன் சொந்த மகளை இரண்டாவது தாரமாக கொடுக்கச் சம்மதித்தமை அவர்கள் மத்தியில் நெருங்கிய நட்பு இருந்தது என்பது தெரிகிறது. இலங்கைத் தமிழர்களுக்கு தமிழ் நாட்டுடன் உள்ள தொப்புள்கொடி உறவு போன்று, சிங்கள மக்களுக்கும் தற்போது தமிழ் நாட்டுடன் இணைந்துள்ள பாண்டிய நாட்டிற்கும் உறவு உண்டு என்பதைத் தமிழ் மக்களும் சிங்கள மக்களும் உணர்ந்து செயற்பட்டிருந்தால் இலங்கைச் சரித்திரம் இன்று வேறுவிதமாக அமைந்திருக்கும். இவ்விரு சமூகத்தினரும் ஒரு தாய் மக்கள் என்றோ அல்லது சகோதரர்களாகவோ ஒற்றுமையாக ஏன் வாழ முடியாது?

சோல்பரி அரசியல் சாசனத்தில் இணைக்கப் பட்டிருந்த பலம் குன்றிய சிறுபான்மை மக்களின் பாதுகாப்பு போன்ற எதுவித சரத்தும், திருமதி பண்டாரநாயக்கா மற்றும் ஜே.ஆர். ஜயவர்த்தனா ஆகியோரால் உருவாக்கப்பட்ட புதிய அரசியல் சாசனத்தில் சிறுபான்மையினரை பாதுகாக்க ஒரு சிறிய சரத்தும் இல்லை. சுதந்திரம் கிடைத்த பின்னர் தமிழ் மக்களுக்கு தொடர்ச் சியாக துரோகமே இழைக்கப் பட்டது. 1956,1983களுக்கிடையில் பல்வேறு சிறிய,பெரிய இனக் கலவரங்கள் ஏற்பட்டன. அச்சம்பவங்களில் பலர் கொல்லப் பட்டதும், கொள்ளைகளும், தீ வைப்பும் நடந்து தமிழ் மக்கள் இடம் பெயர்ந்து வடக்கிற்கும் கிழக்கிற்கும் தப்பியோடினர். அரசும் அகதிகளை வட கிழக்கிற்கே அனுப்பி வைத்தது. தமிழ் மக்களின் பொருளாதாரம் மீண்டும் மீண்டும் அழிக்கப்பட் டது. இவற்றில் படுமோசமான கலவரம் 1983ம் ஆண்டு ஜுலை மாதம் நடைபெற்று கறுப்பு ஜுலை என பெயர் பெற்றது. கால் நூற்றாண்டுக்கு மேலாக நடந்த யுத்தத்தால் சகல சமூகத்தையும் சேர்ந்த ஆண், பெண் பிள்ளைகளென ஆயிரக்கணக்கில் கொல்லப்பட்டார்கள். யுத்தத்தின் கடைசிக் கட்டத்தில் இழந்த உயிரிழப்புக்கள் கணக்கீடு செய்யப்படவில்லை இழந்த, அழிக்கப்பட்ட சொத்துக்கள் கோடானு கோடி பெறுமதியாகும். இதுவரை உயிர் இழப்பிற்கோ சொத்தி ழப்பிற்கோ ஒரு சதமேனும் நட்ட ஈடாக வழங்கப்படவில்லை. ஏனைய பகுதியை தவிர வடகிழக்கில் மட்டும் ஏறக்குறைய ஒரு இலட்சம் விதவைகளும் ஆயிரக்கணக்கான அநாதைகளும் உருவாக்கப்பட்டுள்ளார்கள். ஆண், பெண் பிள்ளைகள் பலர் கண் பார்வை இழந்தும் அவர்களில் சிலர் இரு கண்களை இழந்தும் பலர் இரு கால்களையும், கைகளையும் இழந்துள்ளனர். ஆயிரக்கணக்கானோர் முதுகெலும்பு, தலை போன்ற பல்வேறு உறுப்புக்களில் செல் துண்டுகளைச் சுமக்கின்றனர். அவற்றில் பல அகற்ற முடியாத இடங்களிலும் புதைந்து கிடக்கின்றன. அத்தகையோர் நிரந்தர வேதனையோடு வாழ்கின்றனர். ஆயிரக்கணக்கான வீடுகள் தரை மட்டமாகவும், அநேகமான வீடுகள் கூரை இல்லாமலும் உள்ளன. பல்லாயிரக்கணக்கான டிராக்டர்கள், பெட்டிகள், இரண்டு சில்லு டிராக்டர்கள், சைக்கிள்கள், மோட்டார் சைக் கிள்கள், லொறி, கார் போன்ற பல தரப்பட்ட வாகனங்கள் மழையிலும், வெயிலிலும் உருக்குலைந்து உதிரிப் பாகங்கள் அகற்றப்பட்டும் காணப்படுகின்றன.

மக்கள் பலர் நேரடியாக கண்ட கொடூரமான சம்பவங்கள் அவர்களின் மனநிலைமையினை பாதித்துள்ளது. பல வீடுகளில் குறிப்பாக கிளிநொச்சி, முல்லைததீவு, வவுனியா, மன்னார் மாவட்டங்களில் மக்களின் அழுகுரல் தினமும் கேட்ட வண்ணம் இருக்கின்றது. செயலிழந்த பலர் பிறரின் உதவியின்றி இருந்த இடத்தை விட்டு அசைய முடியாதபடி வாழ்கின்றனர்.

அவர்கள் மீது அக்கறை காட்டும் சில உறவினர்கள் இல்லாத காலத்தில் இந்த இளைஞர்கள் யுவதிகள் கதி என்ன? வெளி உலகத்திற்கு கிராமங்களில் நடப்பது தெரிவதில்லை. சிலர் படும் வேதனை வார்த்தைகளால் விபரிக்க முடியாது. இவர்களின் எதிர்காலம் பற்றி எவரும் சிந்திப்பதாகத் தெரியவில்லை. செயல் இழந்த வர்கள் பலரை பொறுப்பேற்று பராமரிப்பதற்கு வெளிநாட்டு நிறவனங்களிடம் ஒப்படைக்க வேண்டும். இவர்கள் எல்லாம் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட அப்பாவிகள்.

சிலர் காணாமல்போன தம் உறவுகள் வருவார்கள் என்று நம்பியே வாழ்கின்றனர். அதே போன்று குற்றம் எதுவும் செய்யாது தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளவர்களும் விடுதலை. செய்யப்படுவார்கள் என்ற நம்பிக்கையுடன் மக்கள் வாழ்கின்றனர்.

சிங்கள மக்களுடைய குறிப்பாக பெண்களுடைய மனப்பாங்கையும் நான் அறிவேன் 2004ம் ஆண்டு ஏற்பட்ட சுனாமியின் போது ஒரு சிங்கள வயோதிப மாது தன் தலையில் உணவுப் பொட்டலங்களை சுமந்து கொண்டு பாதை சீரின்மையால் கால் நடையாக நீண்ட தூரம் பிரயாணம் செய்து தன் இனத்தையோ, மதத்தையோ சேராத முன்பின் தெரியாத அகதிகளுக்கு உணவளித்தமை போன்ற சம்பவங்கள் நிறைய உண்டு. இத்தகைய மனப்பான்மை படைத்தவர்கள் தான் எமது நாட்டுப் பெண்கள்.

இவை யாவற்றையும் தங்கள் கவனத்திற்கு கொண்டு வருவதன் நோக்கம் இவற்றை அறிந்து உரிய நடவடிக்கை எடுப்பதோடு தங்கள் மூலமாக அப்பாவி தமிழ் மக்கள் தாம் செய்யாத குற்றத்திற்காக இத்தகைய துன்பங்களை அனுபவிக்கின்றார்கள். என்பதை நாட்டுப்புற சிங்கள மக்களுக்கு தெரிய வைப்பதற்கே. இந்தச் சிங்களத் தாய்மார்கள் தாங்கள் பிள்ளைகளின் உள்ளத்தில் அனுதாப உணர்வை தூண்டி இந்த நாட்டில் தமிழ் சகோதரர்களுக்கு என்ன நடக்கின்றது என்ன நடந்தது என்பதை தெரியப்படுத்தது வதற்கே. ஒரு சிங்களப் பொது மகனேனும் தனக்கென விசேட சலுகைகள் எதனையும் எதிர்பார்க்கவில்லை. இந்த நாட்டில் பிறந்த ஒவ்வொரு மகனும் சம உரிமையுடன் வாழ வேண்டும் என்பதே நியாயமாகச் சிந்திக்கும் சிங்கள மக்களுடைய அபிப்பிராயமாகும்.

இவ்வாறு ஆனந்தசங்கரி அவர்களின் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆர்.சிவரூபன்

# மனிதனால் உருவாக்கப்படும் பூவுலகின் பெரிய குப்பைத் தொட்டி

இது மிகவும் விநோதமான ஒரு சூழ்நிலை தான். பெருங்கடலில்தான் முதல் உயிரினம் தோன்றியது. அதிலிருந்து கிளை விட்ட ஒரு உயிரினமான மனித இனத்தின் செயல்பாடுகள் காரணமாக கடல்கள் இன்று ஆபத்துக்குத் தள்ளப்பட்டுள்ளன. மிகக் கொடுமையான வகையில் மாற்றப்பட்டுவிட்ட நிலையில், பெருங்கடல்கள் முற்றிலும் அழிந்து போய்விடாது என்று தோன்றுகிறது. மாறாக, அந்த ஆபத்து ஒட்டுமொத்த உயிரினங்களுக்குமானது"

**- ரேச்சல் கார்சன், 1951ஆம் ஆண்டு வெளியிட்ட "தி சீ அரௌண்ட் அஸ்" புத்தகத்தில்.**


நாம் ஒவ்வொருவரும் கடைக்குச் சென்று எந்தப் பொருளை வாங்கிய பின்னரும் கடைசியில் கடைக்காரர் கொடுக்கும் அல்லது நாமே கேட்டு வாங்கும் பிளாஸ்டிக் பை, ஒவ்வொரு முறை பயணத்துக்குச் செல்லும்போதும் அல்லது நிகழ்ச்சி நடத்தும் போதும் வாங்கும் பிளாஸ்டிக் தண்ணீர் குடுவைகள், பெரிய கடைகளில் வாங்கும் அனைத்துப் பொருள்களையும் சுற்றி வரும் பிளாஸ்டிக் தாள், பெரும்பாலான மளிகை பொருள்கள் அடைக்கப்பட்டு வரும் பிளாஸ்டிக் பை, அன்றாட பயன்பாட்டுப் பொருள்களை பயன்படுத்திய பின்னர் நாம் தூக்கி எறியும் கழிவு பிளாஸ்டிக் பெட்டிகள் (சிறிய கண்டெய்னர்) என்று எங்கும், எப்பொழுதும் நம்மைச் சூழ்ந்து நிறைந்து கிடப்பது பிளாஸ்டிக், பிளாஸ்டிக், பிளாஸ்டிக்தான்.

இப்படி பல வகைகளில் நாம் பெறும் ஞெகிழி (பிளாஸ்டிக்) பொருள்களை குறைந்த கால பயன்பாட்டிலேயே விட்டெறிந்து விடுகிறோம். இப்படி நாம் ஒவ்வொருவரும் விட்டெறியும் ஞெகிழி என்ன ஆகிறது, எங்கே செல்கிறது, பிறகு என்ன நடக்கிறது என்று ஒரு கணம் சிந்தித்துப் பார்த்திருப்போமா?

நமது சுற்றுச்சூழலுக்கு என்ன நடந்து கொண்டிருக்கிறது. நமது சாதாரண செயல்பாடுகள் அதை எப்படி மோசமாக பாதிக்கின்றன, பின்னர் எப்படி நம்மை திரும்பத் தாக்குகின்றன என்பதை புரிந்து கொள்ளாமல் போவதால், பல பேராபத்துகள் நமக்கு புரியாமலே போகின்றன. அது சார்ந்த அக்கறைகளும் குறைவாக இருக்கின்றன. மேற்கத்திய நாடுகளில் 80களிலும் இந்தியாவில் 90களிலும் ஞெகிழிப் பைகள் பயன்பாடு அதிகரித்தது. இன்று அது எல்லை கடந்து சென்றுவிட்டது. உங்களைச் சுற்றிலும் சற்று கண்ணை ஓட்டுங்கள். புதர்களிலும் மரக்கிளைகளிலும் சிக்கிக் கொண்டும், காற்றடிக்கும் நேரங்களில் குப்பைகளோடு குப்பைகளாகவும், நதிகளிலும் அவை மிதந்து கொண்டிருப்பதைப் பார்க்கலாம்.

ஒரு தனி நபர் எத்தனை ஞெகிழிப் பொருள்களை பயன்படுத்தி விடப் போகிறார் என்று நினைப்பவர்களுக்காக ஒரு தகவல், உலகில் ஒவ்வொரு நிமிடமும் 10 லட்சம் பிளாஸ்டிக் பைகள் கைமாறிக் கொண்டிருக்கின்றன. இந்தியாவில் ஓராண்டில் 10,000 கோடி ஞெகிழிப் பைகள் உற்பத்தி செய்யப்படுகின்றன. இதில் ஒரு சதவீதம் மட்டுமே மறுசுழற்சி செய்யப்படுகிறது. ஒருவர் வாரத்துக்கு குறைந்தபட்சம் 6 ஞெகிழிப் பைகள் பயன்படுத்துவதாகக் கொண்டால் ஆண்டுக்கு கிட்டத்தட்ட 300 ஞெகிழிப் பைகள் ஆகிவிடும். அதுவே அவரது வாழ்நாளில் 25,000 பைகள் ஆகிவிடும். உலகெங்கும் ஓராண்டில் 500,000,000,000 ஞெகிழிப் பைகள் பயன்படுத்தப்படுகின்றன.

அப்படி பயன்படுத்திவிட்டு நாம் அன்றாடம் விட்டெறியும் ஞெகிழி பை உள்ளிட்ட ஞெகிழி கழிவுகள் குப்பை மூலமாகவும், சாக்கடைகள் வழியாகவும் ஆறுகள், நீர்நிலைகளைச் சென்றடைந்து அங்கிருந்து நேரடியாக கடலில் சென்று கலக்கின்றன. உலகம் தோன்றியது முதல் கடல்தான் மிகப் பெரிய உயிர் இயந்திரம். உலகின் முதல் உயிரினம் தோன்றக் காரணமாக இருந்த கடல்தான் உயிர்வளத்தை தொடர்ந்து உற்பத்தி செய்து வருகிறது. இன்றும் கடலில் வாழும் மீன்கள், இதர உயிரினங்களே உலகின் மற்ற உயிரினங்களுக்கு முக்கிய உணவு ஆதாரமாக இருக்கின்றன. ஆனால் மீன்களின் எண்ணிக்கை குறைந்து வருகிறது. கடந்த 50 ஆண்டுகளில் பல பெரிய வகை மீன்கள் 90 சதவீதம் அழிந்துவிட்டன. 2050ஆம் ஆண்டுக்குள் வணிக மீன்கள் அனைத்தும் குறைந்துபோய்விடும் என்கின்றன கணிப்புகள். இந்த மீன்களின் அழிவுக்கு ஒரு முக்கிய காரணம் ஞெகிழிக் கழிவு. 1960களில் இருந்ததைவிட கடலில் மிதக்கும் ஞெகிழிக் கழிவின் அளவு தற்போது மும்மடங்கு அதிகரித்துவிட்டதாகக் கூறப்படுகிறது. உலகக் கடல்களில் ஒவ்வோர் ஆண்டும் 640 கோடி கிலோ ஞெகிழிக் கழிவு கொட்டப்படுகிறது.



கடலில் மிதந்து கொண்டிருக்கும் ஞெகிழிக் கழிவுகளில் வெறும் 20 சதவீதம் மட்டுமே கப்பல்கள், கடல் சார்ந்த நடவடிக்கைகளில் இருந்து வெளியேற்றப்பட்டவை. 10 சதவீதம் ஞெகிழி உற்பத்தி நிறுவனங்களில் இருந்து வெளியாகும் பிளாஸ்டிக் பெல்லெட் எனப்படும் ஞெகிழி உருண்டைகள். எஞ்சிய 70 சதவீதம் நிலப்பகுதியில் இருந்து விட்டெறிந்தவைதான். இப்படி உலகெங்கும் வீசிய ஞெகிழிக் கழிவுகள் கலிபோர்னியாவுக்கு மேற்கேயும், ஹவாய் தீவுகளில் இருந்து வடக்கேயும் 1,000 மைல் தொலைவில் பசிபிக் பெருங்கடலில் மிகப் பெரிய கழிவுக் குவியலாக சுழன்று கொண்டிருக்கிறது. இதற்கு "பசிபிக் பெருங்கடல் கழிவுக் குவியல்" என்று பெயர். இதன் பரப்பு 1,392,400 சதுர கிலோமீட்டர், அதாவது அமெரிக்காவிலுள்ள டெக்சாஸ் மாகாணத்தைப் போல இரண்டு மடங்கு. 30 லட்சம் டன் எடை கொண்ட இது, கடல் மேற்பரப்பில் இருந்து 300 அடி ஆழத்துக்கு நீளமாக உள்ளது.

சார்லஸ் மூர் என்ற நீர் கண்காணிப்பாளர் மற்றும் ஆராய்ச்சியாளர் 1997ஆம் ஆண்டு கலிஃபோர்னியாவில் இருந்து ஹவாய் தீவுகளுக்கு பயணம் மேற்கொண்டிருந்தபோது இந்த பெருங்கடல் குழிவுக் குவியலை முதன்முதலில் பார்த்துள்ளார். "பெருங்கடலின் நடுவில் நிற்கும்போது உலகின் அனைத்து வகை ஞெகிழிக் கழிவுகளையும் நான் அங்கு கண்டதை







மானிப்பாய் பரிஷ் லியோக் கழகத்தின் விசேட செயற்திட்டத்தின் மூலம் முல்லைத்தீவு ஆனந்தபுரப் பகுதியில் யுத்தம் மற்றும் வெள்ளத்தினால்

நினைத்து" அவர் விக்கித்துப் போனார். 1994ஆம் ஆண்டு இவர் நிறுவிய அலகாலிதா கடல் ஆராய்ச்சி அறக்கட்டளை, இந்த கழிவுக் குவியல் பற்றி தொடர்ந்து ஆராய்ச்சி நடத்தி வருகிறது. கிட்டத்தட்ட ஐம்பது ஆண்டுகளாக கடல்களிலேயே சுற்றிக் கொண்டிருந்த ஞெகிழிக் கழிவுகள் கடல் நீரோட்டங்களின் காரணமாக உருவெடுத்த இந்தக் குவியல், கடல் கழிவுக் குவியல்களில் மிகப் பெரியது. இதைப் போல மேலும் எட்டு கழிவுக் குவியல்கள் கடலில் மிதந்து கொண்டிருக்கின்றன. வந்து இப்படி குவியலாக உருவெடுத்து இருக்கின்றன.


இப்படியாக உலகில் இதுவரை உற்பத்தி செய்யப்பட்ட பிளாஸ்டிக் அனைத்தும் ஏதோ ஒரு வகையில் நம்மைச் சுற்றி சுழன்று கொண்டே இருக்கிறது. எந்த ஒரு பயன்படுத்தப்படாத பொருளும், உயிரிழந்த பொருளும், கொஞ்சம் கொஞ்சமாகச் சிதைந்து மக்கிப் போய்விடும், வேறொன்றாக மாறிவிடும், அடிப்படை நிலையை அடைந்துவிடும். தாவரங்கள், விலங்குகள், அவற்றை மூலப்பொருள்களாகக் கொண்ட இயற்கையான பொருள்கள் இப்படி மக்கிச் சிதைகின்றன. வேதிப் பொருள்களின் கூட்டால் உருவாக்கப்படும் ஞெகிழி அப்படிச் சிதைவதில்லை.

நிலத்தில் கழிவாகக் கொட்டப்படும் ஞெகிழி துகள்களாகச் சிதற (மக்கிப் போவதற்கு அல்ல) 300 ஆண்டுகள் ஆகும். கடலில் இது விரைவாக நிகழ்ந்து விடுகிறது. கடலில் மிதந்து கொண்டிருக்கும் ஞெகிழிக் கழிவுகளின் மீது தொடர்ந்து சூரியஒளி படும்போது அது சிறுசிறு துகள்களாகச் சிதைகிறது (போட்டோ டீகிரேட்). இவை மீன் முட்டைகளைப் போல தோற்றமளிப்பதால், பல கடல் உயிரினங்கள் தவறாக இவற்றைச் சாப்பிட்டு விடுகின்றன.



ஒரு மில்லிமீட்டருக்கும் குறைவான சுற்றளவு கொண்ட ஞெகிழி நுண்ஞெகிழி எனப்படுகிறது. அப்படிப்பட்ட ஞெகிழி துகள்கள் மணல் துகள்களைப் போலவும், பிளாங்கடன் போலவும் தோற்றமளிப்பதால் பல மெல்லுடலிகள் இவற்றை உண்டு இறக்கின்றன. என்கிறார் சிட்னி பல்கலைக்கழக விஞ்ஞானி மார்க் பிரவுனி. இந்த பிளாஸ்டிக் துகள்கள் மற்ற உயிரினங்களின் திசுவுக்கும் கடத்தப்பட அதிக வாய்ப்புள்ளது.

கடலில் மிதக்கும் ஞெகிழிப் பைகள் இழுது மீன் (ஜெல்லி மீன்) போலவும், கணவாய் மீன்கள் போலவும் தோற்றமளிக்கும். கடல் மீன்கள், டொல்பின், கடலாமை-கள், கடல்பறவைகள் உள்ளிட்டவை ஏதோ ஒரு வகையில் இந்த ஞெகிழியை உட்கொள்கின்றன. அது அவற்றின் தொண்டை, வயிறு, குடல் என முக்கியமான ஜீரண உறுப்புகளில் சிக்கிக் கொள்ள, அவை பரிதாபமாய் செத்து மடிகின்றன. இது எவ்வளவு தூரம் உண்மை என்று கேட்பவர்களுக்கு, 2007ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் ஃபல்மார்ஸ் என்ற கடல்காக்கை வகை பறவையின் வயிற்றைக் கிழித்து சோதனை செய்து பார்த்ததில் என்ன கிடைத்தது என்று படத்தை ப்பார்க்கவும். அதன் குடலில் 30 வகை ஞெகிழிப் பொருள்கள் இருந்தன. அதேபோல உலகின் மிகப்பெரிய கடல்பறவையும், நீண்டதூரம் பறக்கும் திறன் படைத்ததுமான அல்பட்ராஸ் பறவைகளின் இறப்புக்குக் காரணமாகவும் ஞெகிழி இருக்கிறது.



கடல் ஞெகிழிக் கழிவால் ஓராண்டுக்கு 10 லட்சம் பறவைகள், ஒரு லட்சம் பாலூட்டிகள் - கடல் ஆமைகள் இறந்து போகின்றன என்று ஐ.நா. சபை தெரிவிக்கிறது. இது தவிர பிறந்த சிறிது காலத்தில் "சிக்ஸ் பேக்ஸ் ரிங்க்ஸ்" எனப்படும் பிளாஸ்டிக் ஓட்டைகளில் உயிரினங்கள் சிக்கிக் கொள்வதால், இயல்பாக வளர முடியாமல், வளரும்போதே அவை உடல்கோளாறுகளுடன் வளர ஆரம்பிக்கின்றன. ஏற்கெனவே அதிகரித்து வரும் கடல் வெப்பநிலை காரணமாக அவதிப்பட்டு வரும் உயிரினங்கள், மேற்கண்ட காரணங்களால் இனப்பெருக்கம் குறைந்து, அவற்றின் எண்ணிக்கை வேகமாகச் சரிந்து வருகிறது. வணிக முக்கியத்துவம் வாய்ந்த மீன்கள் அழிவுக்கும் இங்கே குறிப்பிடப்பட்ட அம்சங்களே காரணம்.

மீன்கள், கடல் உயிரினங்கள் அழிவதால், அல்லது பாதிக்கப்படுவதால் நமக்கு என்ன கேடு என்று நினைக்கலாம். சமீபத்தில் நடத்திய ஆராய்ச்சி ஒன்று கடல் உணவு சுழற்சியின் முக்கிய கண்ணியான பிளாங்க்டன் என்ற நுண்ணிய உயிரினத்தின் உடலிலும் நுணுக்கமான பிளாஸ்டிக் துகள்கள் கலந்திருப்பதை உறுதி செய்கிறது. இறால் போன்ற கடல் உயிரினமான கிரில், சூபிளாங்டன் மூலமாக கடல் உணவு சுழற்சியில் உட்புகும் ஞெகிழிக் கழிவுகள் நமது உணவு மேசைக்கும் வந்து கொண்டுதான் இருக்கின்றன. "தன் வினை தன்னைச் சுடும்" என்பது போல, அந்தக் கழிவுகளை உருவாக்கிய நம்மிடமே மீண்டும் அவை வந்த்டைந்து விடுகின்றன.

பல்வேறு கடல் உயிரினங்களின் அடிப்படை உணவு பிளாங்க்டன் என்று நுணுக்கமான உயிரிகள். பைட்டோபிளாங்கடன் போன்ற கடல் நுண்ணுயிர்களில் ஞெகிழி கழிவுத் துகள்களின் அளவு 2.85 ( கன அளவில் 100 கோடியில் ஒரு பங்கு). சூபிளாங்கடன் இதை உண்ணும்போது, அதன் உடல் 1.56 பி.பி.பி ஞெகிழி கழிவை கிரகித்துக் கொள்கிறது. ஆனால் மீன்கள் பல சூபிளாங்க்டன்களை உண்பதால், அவற்றின் உடலில் ஞெகிழிக் கழிவு 6 - 45 பி.பி.பியாக அதி-கரிக்கிறது. இந்த மீன்களை உண்ணும் கடல்பறவைக-ளின் முட்டையில் 3200-3560 பி.பி.பி ஞெகிழிக் கழிவும், ஓங்கில்கள் எனப்படும் டொல்பின்களின் உடலில் 11400-17300 பி.பி.பி ஞெகிழிக் கழிவும் இருக்கின்றன. ஞெகிழிக் கழிவின் அளவு இப்படி ஒவ்வொரு உயிரினத்தின் உடலிலும் படிப்படியாக அதிகரிப்பதை உயிர் உருப்பெருக்கம் (பயோ மேக்னிஃபிகே'ன்) என்பார்கள். இப்படி ஞெகிழிக் கழிவை உட்கொண்ட பல கடல் உயிரினங்களை நாம் சாப்பிட்டுக் கொண்டிருக்கிறோம். நாம் விட்டெறிந்த வி'ம் சுற்றிச் சுழன்று மீண்டும் நம்மையே வந்தடைந்து விடுகிறது.

"மேலும் கடலில் மிதக்கும் ஞெகிழிக் கழிவு டி.டி.டி, பி.சி.பி (பாலி குளோரினேடட் பைபினைல்) போன்ற வேதி வி'ங்களை கிரகித்துக் கொள்வதால் பெரும் ஆபத்து நேரிடுகிறது. இப்படியாக ஞெகிழிக் கழிவுகள் வேதிப் பொருள்களை கிரகித்துக் கொள்பவையாகவும், நிரந்தர வேதி மாசுபாடுகளாகவும் மாறுகின்றன. இவை புற்றுநோயை உருவாக்கும் தன்மை படைத்தவை" என்கிறார், இதைக் கண்டறிந்த டோக்கியோ பல்கலைக்கழகத்தின் சுற்றுச்சூழல் புவிவேதியியலாளர் ஹைடசிகே தகாடா.

ஞெகிழிக் கழிவுகள் உயிரினங்களின் ஹார்மோன் சுரப்பிலும் மாற்றங்களை ஏற்படுத்தக்கூடும். குழந்தைகளுக்கான பால்புட்டி, தண்ணீர் குடுவைகள், மருத்துவ கருவிகள் போன்றவற்றைத் தயாரிக்கப் பயன்படுத்தப்படும் பாலிகார்பனேட் பிளாஸ்டிக்கில் "பிஸ்பீனால் ஏ" என்ற வேதிப்பொருள் கலக்கப்படுகிறது. ஞெகிழியை மிருதுவாக்குவதற்காக இது கலக்கப்படுகிறது. ஆனால் இது எண்டோகிரைன் என்ற ஹார்மோனை தொந்தரவு செய்யும் தன்மை கொண்டது. இந்த "பிஸ்பீனால் ஏ" ஹார்மோன்களின் செயல்பாடுகளை பிரதி செய்யும் தன்மை படைத்தது. விலங்குகளின் இனப்பெருக்கத்தை பாதிக்கும் இந்த வேதிப்பொருள், மனிதர்களின் உடல்பெருக்கக் காரணமாக இருப்பதாக அமெரிக்க ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

இத்தனைக்குப் பிறகும் ஞெகிழி ஆபத்தானது என்பதை நி'ரூபிக்க புதிய ஆராய்ச்சிகள் தேவையில்லை. நல்ல ஞெகிழி என்ற ஒன்று கிடையவே கிடையாது.

ஞெகிழிக் கழிவை உருவாக்குவதில் நாம் பெரும் பங்காற்றுகிறோம். எனவே, இந்த சுற்றுச்சூழல் சீரழிவை நம்மால் தடுக்கவும் குறைக்கவும் முடியும். தீர்வு நம் கைகளில்தான் இருக்கிறது. ஞெகிழிக் கழிவை தூக்கி எறிவதற்கு முன் "அது எப்படி உருவாகிறது, என்ன பாதிப்புகளை ஏற்படுத்துகிறது" என்பதை ஒரு கணம் சிந்தித்துப் பார்ப்பதில்தான், அந்தக் கழிவை தடுப்பதற் கான தீர்வு அடங்கி இருக்கிறது. சிந்திப்போம், பயன் படுத்தும் ஒவ்வொரு முறையும்.



பாதிக்கப்பட்ட 250ற்கும் மேற்பட்ட குடும்பங்களிற்கான உதவிப்பொருட்கள் லியோக் கழக உறுப்பினர்களினால் வழங்கப்பட்ட போது எடுத்த படம்.

# அழிவிலிருந்து மீண்டெழ வேண்டும் என்ற உத்வேகம் மக்களிடம் உண்டு

## மு.சந்திரகுமார் எம்.பி.

மிகப்பெரும் அழிவுகளை சந்தித்த எமது மக்கள் இன்று மீண்டெழ வேண்டும் என்ற புதிய உத்வேகத்துடன் செயற்படுகின்றார்கள் என்று பாராளுமன்ற உறுப்பினரும் பாராளுமன்றக் குழுக்களின் பிரதித்தலைவருமான மு.சந்திரகுமார் தெரிவித்துள்ளார். கிளிசொச்சியில் மாவட்ட கல்வி, பண்பாட்டு அபிவிருத்தி மன்றத்தின் கட்டடத்தினை திறந்தவைத்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் பேசுகையில்,

எம் மண்ணிலே கொடிய யுத்தத்தின் காரணமாக அழிந்து போன கலை கலாச்சார விழுமியங்கள் இன்று மீளவும் கட்டியெழுப்பப்பட்டுள்ளன. இங்கு அரங்கேற்றப்பட்ட கலை நிகழ்வுகள் அதற்குச் சான்று பகர்கின்றன. அத்தோடு வன்னி மண்ணின் கலைப் பெருமையைத் தென் பகுதி மக்களும் கண்டு வியக்கும் அளவுக்கு எமது மாணவர்களின் கலைத்திறன் மேம்பட்டு நிற்கின்றது. அதற்கு உந்து சக்தியாக திகழும் ஆசிரியர்களும் மாணவர்களும் போற்றுதற்குரியவர்கள். எங்கெல்லாம் மக்கள் அழிவுகளையும் இழப்புக்களையும் சந்திக்கின்றார்களோ அங்கெல்லாம் ஆக்கத்ததை நோக்கிய உந்து சக்தி மக்களிடையே பன்மடங்கு மேலோங்கிக் காணப்படும் அந்த வகையில் மிகப்பெரும் அழிவுகளை சந்தித்த எமது மக்களும் மீண்டெழ வேண்டும் என்ற புதிய உத்வேகத்துடன் செயற்படுகின்றார்கள்.

அதன் வெளிப்பாடுகள் இன்று கண்கூடே தென்படுகின்றன. அந்த உத்வேகமும் மனோதிடமும் எம்மக்களிடயே நிலைத்திருக்கும் வரை அழிந்து போன அனைத்து வளங்களையும் விரைவாக மீளப்பெற முடியும். எனவே அழிவுகளை மட்டும் மீட்டுக் கொண்ருக்காது அதிலிருந்து மீண்டெழ முயற்சிக்கும் எம்மக்களுக்கு இரண்டாம் உலகப் போரின்போது அணுகுண்டு தாக்கத்தால் அழிந்து போன ஜப்பான் ஜேமன் போன்ற நாடுகளின் மீண்டெழுந்த வரலாறுகள் வழிகாட்டி நிற்கின்றன.எனவும் குறிப்பிட்டார்

அத்தோடு கிளிநொச்சி மாவட்டத்தின் கலாச்சார விழுமியங்களை பாதுகாப்பதற்கும் அது சார்ந்த கல்வியை வளர்ப்பதற்கும் ஏற்ற கலாச்சார மண்டபம் அமைக்கப்படவேண்டும். பிரதேச செயலர் ரீதியாகவும் அவை அமையப் பெற வேண்டும். அதற்கான செயற்பாடுகள் அடுத்து வரும் ஆண்டில் முன்னெடுக்கப்படும். மண்டபங்கள் அமையப் பெறும் வரை இப்போது திறந்து வைக்கப்பட்டுள்ள இம் மண்டபத்தின் உச்ச பயனைப் பெற துறைசார்ந்தவர்கள் முயற்சிக்க வேண்டும் எனவும் குறிப்பிட்டார். அத்தோடு எமது இளம் சமூகத்திடையே கணினி தொழிநுட்ப அறிவுசார் அறிவை மேம்படுத்தும் நோக்குடன் செயற்படும் லிட்டில் எய்ட் நிறுவனத்தினர் கிளிநொச்சி மாவட்டத்திலும் தமது பணியை முன்னெடுக்க முன் வந்தமைக்கு நன்றிகளையும் தெரிவித்தார்.

அத்தோடு கணினி பயிற்சிகளை முடித்து வெளியேறும் மாணவர்களுக்கு இலகுகடன் மூலம் கணினிகளை வழங்க குறித்த நிறுவனம் நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் எனவும் குறிப்பிட்டார்.

# கடலில் திமிங்கிலம், டொல்பின்களை பார்வையிடுவோருக்கான புதிய சட்டம்



இலங்கைக் கடற்பரப்பிலுள்ள திமிங்கிலம் மற்றும் டொல்பின்களை பார்வையிடுவதற்கு புதிய சட்டங்களை நடைமுறைப்படுத்த வனவிலங்குப் பாதுகாப்புத் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

கற்பிட்டி, திருகோணமலை மற்றும் மிரிஸ்ஸ ஆகிய கடற்பரப்புகளில் திமிங்கலம் மற்றும் டொல்பின்களைப் பார்வையிடுவதற்கு வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு சுற்றுலாப் பயணிகள் அதிகளவில் வருகை தருவதாக வனவிலங்குத் திணைக்களப் பணிப்பாளர் நாயகம் எச்.பி.ரத்நாயக்க குறிப்பிட்டார்.

திமிங்கிலம், டொல்பின்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகள் பாதுகாப்பை கருத்திற் கொண்டு இந்தப் புதிய சட்டங்களை நடைமுறைப்படுத்தவுள்ளதாகவும் அவர் கூறினார்.

இதேவேளை சுற்றுலாப் பயணிகள் பயணிக்கும் படகுகள் சிறந்த தரத்தில் இருக்க வேண்டியதுடன், அதனை உறுதிப்படுத்துவதற்கான சான்றிதழைப் பெற்றுக் கொண்டிருக்க வேண்டியது கட்டாயம் என அவர் குறிப்பிட்டார். அத்துடன் படகுகளில் பாதுகாப்பு அங்கிகள் இருக்க வேண்டியது கட்டாயமாக்கப்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

மேலும் திமிங்கிலம் மற்றும் டொல்பின்களின் உயிருக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தாத வகையில் அவற்றைப் பார்வையிட வேண்டும் என வனவிலங்குப் பணிப்பாளர் நாயகம் எச்.பி.ரத்நாயக்க குறிப்பிட்டார்.

100 மீற்றர் தொலைவில் படகை நிறுத்தி திமிங்கிலங்களை பார்வையிட முடியும் என்பதுடன் 50 மீற்றர் தொலைவில் படகை நிறுத்தி டொல்பின்களைப் பார்வையிட முடியும் எனவும் அவர் கூறினார்.

இவ்வாறு பார்வையிடச் செல்லும் சுற்றுலாப் பயணிகள் கடலில் இறங்கி உயிரினங்களுக்கு இடையூறு விளைவிக்கும் வகையில் செயற்பட கூடாது என வனவிலங்குப் பாதுகாப்புத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் எச்.பி.ரத்நாயக்க தெரிவித்தார்.

இதனைக் கண்காணிப்பதற்காக வனவிலங்கு அதிகாரிகளுடனான அலுவலகம் ஒன்றை அந்த இடங்களில் ஸ்தாபிக்கவுள்ளதாகவும் அவர் நம்பிக்கை தெரிவித்தார். இதேவேளை சுற்றுலாப் பயணிகளுக்காக அனுமதிச்சீட்டை விநியோகிக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதன் படி திமிங்கிலம் மற்றும் டொல்பின்களைப் பார்வையிடுவதற்கு வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணி ஒருவருக்கு கட்டணமாக 8 டொலர்களும் உள்நாட்டுச் சுற்றுலாப் பயணி ஒருவருக்கு 20 ரூபாவும் அறவிடப்படும் என அவர் மேலும் குறிப்பிட்டார்.

## வனப் பகுதிகள் வர்த்தமானியில்

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களிலுள்ள சூழலுக்கு ஏற்ற வனப் பகுதிகளை வர்த்தமானியில் பிரகடனப்படுத்துவதற்கு சுற்றாடல் அமைச்சு தீர்மானித்துள்ளது.

30 வருடங்கள் இடம்பெற்ற யுத்தத்தின் பின்னர் அந்த மாகாணங்களிலுள்ள வனங்கள் தொடர்பான ஆய்வொன்றை வனப் பாதுகாப்பு திணைக்களம் மேற்கொண்டதாக அமைச்சின் செயலாளர் பி.எம்.யூ.டி.பஸ்நாயக்க குறிப்பிட்டார்.

இதன்படி முல்லைத்தீவு, வவுனியா, கிளிநொச்சி உள்ளிட்ட மாவட்டங்களில் சூழலுக்கு ஏற்ற வனப் பகுதிகள் என அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும் அமைச்சின் செயலாளர் கூறினார்.

## காஸா மோதல்களை உடன் நிறுத்தவும் - பான் கீ மூன்

காஸாவில் கிளர்ச்சியாளர்களுக்கும் இஸ்ரேலியர்களுக்கும் இடையில் இடம்பெறும் மோதல்களை உடனடியாக முடிவுக்கு கொண்டுவந்து அங்கு யுத்த நிறுத்தமொன்றை மேற்கொள்ளுமாறு ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் பான் கீ மூன் வலியுறுத்தியுள்ளார்.

இரு தரப்பினருக்கும் இடையிலான மோதல் ஆறாவது நாளாக நீடித்து வருகின்ற நிலையிலேயே அவர் மேற்கண்டவாறு வலியுறுத்தியுள்ளார்.

இந்த வன்முறைகளை உடனடியாக முடிவுக்கு கொண்டுவர வேண்டும் என்பதுடன் இரு தரப்புகளுக்கும் இடையிலான போர் நிறுத்த உடன்படிக்கை தொடர்பில் எகிப்தில் நடைபெறவுள்ள பேச்சுவார்த்தையில் தான் கலந்துகொள்ளவுள்ளதாகவும் அறிவித்துள்ளார்.

## கஹவத்தை கொலை: 13 சட்சியங்கள்

கஹவத்தை, கொட்டகெத்தன பிரதேசத்தில் இறுதியாக இடம்பெற்ற இரட்டைக் கொலைக்கு எதிராக 13 சாட்சிகளடங்கிய விசாரணை அறிக்கையை பெல்மடுல்ல நீதவான் நீதிமன்றத்தில் இரகசிய பொலிஸார் நேற்றுச் சமர்ப்பித்தனர்.

இந்நிலையில், குறித்த கொலையுடன் சம்பந்தப்பட்டதாகக் கூறப்படும் சந்தேகநபர்கள் மூவரையும் எதிர்வரும் மூன்றாம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்தது.



ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் 2ஆவது பதவிக் காலத்தின் 2ஆவது ஆண்டு தினமும், பிறந்த நாளும் அனுஷ்டிக்கும் முகமாக யாழ்.ஒஸ்மானியாக் கல்லூரியில் மரம் நடுகை நிகழ்வு இடம்பெற்றது. இதில் அதிபர், ஜே-86, ஜே-87 கிராம அலுவலர்கள், பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் உத்தியோகத்தர்கள், ஆசிரியர்கள், மற்றும் மாணவர்களும் கலந்து கொண்டனர். (படம் - மீரான்)

# பாலர் பாடசாலை மாணவர்கள் பதினெட்டுப் பேருக்குச் சுகயீனம்


ஆயித்தமலை பாலர் பாடசாலையொன்றின் மாணவர்கள் எழுவர் திடீர் சுகயீனம் காரணமாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கு நேற்று பகல் அரிப்பு, குமட்டல், வாந்தி, தலைசுற்று என்பன ஏற்பட்டதால் ஆயித்தமலை கிராம வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

முதலில் இரு மாணவர்கள் திடீர் சுகயீனமுற்ற நிலையில் பின்னர் மேலும் ஐவர் பாதிக்கப்பட்டுள்ளனர். கடந்த வாரம் கம்பளை, பலாங்கொடை, கண்டி ஆகிய பகுதி பாடசாலை மாணவர்கள் திடீர் சுகயீனமுற்ற நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டமை பரபரப்பை ஏற்படுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# காஸா மக்களுக்காக அம்பாறையில் பிரார்த்தனை

பலஸ்தீன், காஸா பகுதியில் இஸ்ரேல் படையினரால் தாக்கப்படும் மக்களுக்காக அம்பாறை மாவட்டத்திலுள்ள பள்ளிவாசல்களில் துஆ பிரார்த்தனைகள் இடம்பெறுகின்றன.

அத்துடன் பிராந்திய சமாதானத்திற்குமாகவும் இதன்போது இறை அஞ்சி துஆ பிரார்த்தனைகள் இடம்பெற்றன. இந்த துஆ பிரார்த்தனைகள் நேற்று ஞாயிற்றுக்கிழமை இரவு முதல் ஐந்து நேர தொழுகைகளுக்கு பின்னர் பள்ளிவாசல்களில் இடம்பெற்று வருகின்றன.



# டெங்கு காய்ச்சல்

எமது நாட்டில் தற்போது அனைவரையும் பயமுறுத்துவது டெங்கு காய்ச்சல். அறுபதுகளின் துவக்கத்தில் **"டிங்கி"** ஜுரம் என அறிமுகமானது. அதுவே டெங்கு. இந்நோய் ஏற்படக் காரணமாக உள்ளது டெங்கு நுண்ணியே. இவை ஊன்நீர் வகைகளாகப் பிரித்தால் நான்கு வகைப்படும்.

இவற்றைப் பரப்பும் நுளம்புகளை "ஈடஸ் ஈஜிப்டை" என்கிறார்கள். இவை பகல் நேரத்தில் கடிப்பவை. அதனால் நமக்குத் தெரியும். மழை நீரில் அல்லது குளிர்சாதனப் பெட்டி, ஏ.சி ஆகியவற்றில் தேங்கும் சிறிதளவு நீரில்கூட கொசுக்கள் முட்டையிட்டுப் பெருகிவிடும்.

முதல் நாள் காய்ச்சலில் ஒரே ஒரு சோதனை போதும். (உச்சி முதல் பாதம் வரை மருத்துவர் சோதித்தாலே பல காரணம் புரியலாம்). குளிர் அல்லது கடுமையான தலைவலி ஏற்பட்டால் மலேரியா உள்ளதா எனச் சோதிக்கலாம்.

**நோய்க் குறிகள்:**

1) நோய்த் தடுப்பாற்றல் இல்லாதவர்களிடம் ஏற்படுவதை "முறையான டெங்கு" என்கிறார்கள். இந்நோய் வெளிநாட்டிலிருந்து நம் நாட்டுக்கு வந்து தங்கும் இளவயதினரையும் குழந்தைகளையும் தாக்குவது. உடலில் நுண்ணி புகுந்து 5-8 நாட்கள் சும்மா இருந்து, பிறகு கண்ணீர்க் கசிவு, தடிமன் என வேலை காட்டும். இதற்குச் சில மணி நேரங்கள் கழித்து திடீரென உடம்பை முறிக்கும் வலி, கண்களின் பின்புறத்தில் வலி, பொறுக்க முடியாத தலைவலி மற்றும் கால், கை மூட்டுகளில் வலி ஆகியன ஏற்படும்.

உடல் அசைவினால் தலை-வலி கூடும். சிலருக்கு வெளிச்சத்தையே பார்க்க முடியாத அளவு கண்கள் கூசலாம். உடல் நடுக்கமும் குளிரும் சற்று தாமதமாக வரலாம். இவை தவிர, தூக்கம் வராமலும், பசி இன்றி வாய் கசந்து போய், உடல் பலவீனம் அடைந்து அவதிப்படவும் நேரும். கால்வாசி பேருக்குத் தொண்டையிலும், மூக்கிலும் அழற்சி ஏற்படும்.

முக்கியமான விஷயம்: டெங்கு காய்ச்சலின்போது இருமல் மட்டும் வருவதே இல்லை. மருத்துவச் சோதனையின் போது, கண்கோளங்களைத் தொட்டால் வலி ஏற்படுவது தெரியும். உடலில் ஆங்காங்கே நிணநீர் முண்டுகள் வீக்கமுற்றுக் காணப்படும்.

பாதி பேருக்கு, நாக்கின் பின்புறம் சிறிய வேர்க்குரு போன்ற குமிழ்கள் ஏற்படும். நாக்கின் மேல் மாவு போன்ற கோழைப் படிந்திருக்கும். மார்பிலும், கரங்களின் உட்பகுதிகளிலும் தோல் சிவந்து காணப்பட்டாலும், இவை சில நாட்களில் மறைந்து விடும். அதன்பிறகு, தடித்த அல்லது சிறு கொப்பளங்களோடு தோல் சிவக்கலாம். இவை 3-5 நாட்களில் தோன்றி, உடல் முழுவதும் பரவலாம். 2-3 நாட்களில் காய்ச்சல் குறைந்து இயல்பு நிலைக்குத் திரும்பிடக் கூடும். மற்ற நோய்க்குறிகள் அனைத்தும் மறைந்து போய் விடும். ஆனால், அனைத்துமே 2-3 நாட்களில் மறுபடியும் வந்து விடும்.

இது டெங்கு காய்ச்சலின் தனிப்பட்ட குணநலன் ஆகும். நோய்க்குப் பிறகு, பல வாரங்களுக்கு உடல் சோர்வு நீடிக்கும். அதிர்ஷ்டவசமாக, இத்தகைய classic dengue அதிகம் காணப்படுவதில்லை

2) இரண்டாவது வகை, சற்றுக் கடுமை குறைந்த நோய் வகையாகும். இதில் காய்ச்சல், பசியின்மை தலைவலி மற்றும் உடல்வலி ஆகியன இருக்கும். லேசான தோல் சிவத்தல் காணப்படும். நிணநீர் முண்டுகள் பாதிப்படைவதில்லை. 3 நாட்களில் உடல் முழுவதும் தேறிவிடும்.

3) இவற்றையெல்லாம் விட அச்சுறுத்தும் ஒன்று "டெங்கு குருதிக் கசிவு காய்ச்சல்" எனப்படும் மூன்றாவது வகையாகும்.

இதைப்பார்த்துதான் நாம் மிரண்டு போகிறோம். இது பொதுவாக பிள்ளைகளைப் பாதிக்கிறது.

**நோய்க்குறிகள்:**

துவக்க நிலையில் காய்ச்சல், தொண்டை வலி, தலைவலி, பசியின்மை, குமட்டல், வாந்தி மற்றும் கடுமையான வயிற்றுவலி ஆகியன ஏற்படும். 2-4 நாட்கள் வரை இது நீடிக்கும். ஆனால், classic dengue போல், தசை வலி, மூட்டு வலி மற்றும் எலும்பு வலி ஆகியன இராது.

சோதித்துப் பார்க்கையில் 38.30 வழ 40.60 (1010F _ 1050F) காய்ச்சல், உள் நாக்கும் தொண்டையும் சிவந்த நிலை தவிர, நிணநீர் முண்டுகள் மற்றும் கல்லீரல் வீங்கியிருப்பது தெரிய வரும்.

துவக்க நிலையை அடுத்து, உடல் நிலை வெகு துரிதமாக மோசமடையும். உடல் சோர்வு மிகவும் அதிகரிக்கும். கை கால்கள் சில்லிட்ட போதும், உடல் மட்டும் வெப்பம் கொண்டிருக்கும். நெற்றியிலும், கைகால் விரல் முனைகளிலும் புள்ளி புள்ளியாக குருதிக் கசிவு ஏற்படும். சில சமயம், தோலில் தடிப்புகள் அல்லது சிறு கொப்புளங்கள் தோன்றும். கை கால்கள் நீலமாகக் கூடும். இதயத் துடிப்பு அதிகரித்து, இரத்த அழுத்தம் குறைந்துபோகும்.

4-5 ஆவது நாளில் உயிரிழப்பு கூட நேரலாம். இரத்த வாந்தி, கறுத்த நிறத்தில் மலப்போக்கு, ஆழ்மயக்கநிலை மற்றும் உடன் தேறாத அதிர்வு நிலை ஆகியன கவலையளிக்கும் அறிகுறிகள். மூச்சுத் திணறல், உடல் நீலம் ஆதல், வலிப்புகள் ஆகியன இறுதிக் கட்டத்தில் காணப்படும்.

**சிகிச்சை:**

டெங்குவுக்கென தனிப்பட்ட சிகிச்சை எதுவும் இல்லை. இரத்தச் சுழற்சி துவண்டு விடாமல் இருக்குமளவு நீரை உள்ளே செலுத்த வேண்டும். காய்ச்சலைக் குறைக்க போதிய அளவு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

குருதிக் கசிவு ஏற்பட வட்டணுக்கள் (platelets) குறைவதே காரணம் என்பதால், அவற்றை ஈடுசெய்ய ரத்தம் - குறிப்பாக, வட்டணுக்கள் மட்டும் - செலுத்த வேண்டியிருக்கும்.

வட்டணுக்கள் சாதாரணமாக 2.0 லட்சம் முதல் 2.5 லட்சம் மி.மீ3 என்ற அளவில் இருக்கும். அவை, இரத்தக் கசிவு உடலில் ஏற்படாமல் தடுப்பவை. அவற்றின் எண்ணிக்கை மிகவும் குறையும் போது குருதிக் கசிவு ஏற்படுகிறது. மருத்துவ ஆலோசனை கட்டாயம் தேவை.

**ஆய்வுக்கூட சோதனைகள்:**

டெங்குவுக்கென உடலில் தோன்றும் காப்பு மூலங்களின் அளவுகளைக் கொண்டு, டெங்குதானா என உறுதி செய்யலாம். இது வழக்கமாக எல்லா காய்ச்சல் வந்தவர்களுக்கும் செய்வது தேவை இல்லை. பணம்தான் வீணாகச் செலவாகும்.

வட்டணுக்களின் எண்ணிக்கை: இது குறையும் போது, இரத்தம் செலுத்த வேண்டி இருக்கலாம்.

**தடுப்பு முறைகள்:**


டெங்குவுக்கென தடுப்பூசிகள் கண்டுபிடிக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதுவரை வெற்றி கிட்டவில்லை.

நிச்சயமான ஒரே தடுப்புமுறை, கொசுக்களை ஒழிக்கும் முறையே. மழைநீரையும், வீடுகளில் தேங்கும் நீரையும் அவ்வப்போது ஒழிப்பது மட்டுமே.

**அவசியமான அச்சுறுத்தல்:**

ஒருமுறை டெங்குவினால் பாதிப்புற்ற பிறகு, தடுப்பாற்றல் அதிகரிக்கும். ஆனால், அடுத்த முறை 4 ஊன்நீர் வகைகளில் வேறொரு வகை, டெங்கு நுண்ணி தாக்கும்போது, உடற்காப்பு மூலம் விளைவிக்கும் செயல்களால் மட்டுமே பெரும் தீங்குகள் ஏற்படும்.

## 2001 - 2012 வரை இலங்கையில் டெங்கினால் பாதிக்கப்பட்டவர்களின் புள்ளி விபரப் பட்டியல்




# ஆரோக்கிய நாதம்

## நில வேம்பு குடிநீர்

**"டெங்கு"** காய்ச்சல் உள்ளிட்ட எந்த வைரஸ் காய்ச்சலுக்கும் தனியான சிகிச்சை கிடையாது. அவை தானாக சரியாகுபவை. "டெங்கு" காய்ச்சலை, நிலவேம்புக் குடிநீர் ஓரளவு குறைக்கும் ஆற்றல் கொண்டது. நோய் எதிர்ப்பு சக்தியுள்ள நிலவேம்பு, நம் உடலில் நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கக் கூடியது. எனவே நிலவேம்புக் குடிநீரை அருந்துவதன் மூலம்,"டெங்கு"வை தடுக்கலாம். இந்நீரை அருந்துவதால் பக்க விளைவுகள் கிடையாது, ஆங்கில மருந்துகளோடு, இதனை அருந்தலாம்.

நிலவேம்புக் குடிநீர் குறித்து, இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி துறை ஆணையர் இராமநாதன் மற்றும் இணை இயக்குனர் அப்துல்காதர் ஆகியோர் தெரிவித்ததாவது: நோய் கிருமியை எதிர்க்கும் குணம் மற்றும் உடலில் நோய் எதிர்ப்பு தன்மையை அதிகரிக்கும் நிலவேம்பு, காய்ச்சலின் போது ஏற்படும் தலைவலி, நீர் பாரத்தை அகற்றக் கூடிய மிளகு, செரி-மானப் பிரச்சினையை சரி செய்யக் கூடிய சுக்கு, சிறுநீர் பிரச்னை சரி செய்யும் சந்தனம், வாய் கசப்பை போக்கி, நீர்ச் சத்தை அளிக்கும் வெட்டி வேர், உடல் வெப்பத்தை அகற்றி, குளிர்ச்சியை அளிக்கும் பற்படாகம், பேய்ப்புடல், விளாமிச்சை வேர், வயிற்று வலியை போக்கும் கோரைக் கிழங்கு ஆகிய, ஒன்பது மூலிகைகளை கொண்டு உருவாக்கப்பட்டது தான், நிலவேம்புக் குடிநீர். காய்ச்சல் உள்ளவர்களும், காய்ச்சல் இல்லாதவர்கள் என, அனைவரும் நிலவேம்புக் குடிநீரை அருந்தலாம். இந்த குடிநீரை அருந்தினால், "டெங்கு" காய்ச்சல் நம்மை நெருங்காது. இவ்வாறு, அவர்கள் தெரிவித்தனர்.

# டெங்கு காய்ச்சல் நோய்க்கு மூலிகை மருந்து கண்டுபிடிப்பு

**பப்பாளி** இலையின் சாறு, உடலில் உள்ள இரத்த வட்டுக்களின் எண்ணிக்கையை அதிகரிக்கிறது என்று தற்போதைய ஆய்வில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

அதிலும் அந்த ஆய்வை வன இந்திய மேலாண்மை கல்வி நிறுவனம், டெங்கு காய்ச்சலால் பாதிக்கப்பட்டவர்கள் ஐந்து பேரைக் கொண்டு சோதனையை நடத்தியது. இதில் அவர்களுக்கு பப்பாளி இலையின் சாறு கொடுக்கப்பட்டது. இதனால் பப்பாளி இலையின் சாற்றில் உள்ள சத்துக்கள், அவர்களுக்கு இருந்த டெங்கு காய்ச்சலை முற்றிலும் சரிசெய்துவிட்டது.

எப்படியெனில் பப்பாளி இலையின் சாற்றை பருகினால், காய்ச்சல் உள்ளவர்களின் உடலில் உள்ள இரத்த வெள்ளை அணுக்கள் மற்றும் இரத்த வட்டுக்களின் எண்ணிக்கை 24 மணி நேரத்திற்குள் போதிய அளவு அதிகரித்துள்ளது. மேலும் டெங்குவால் பாதிக்கப்படும் கல்லீரல் பிரச்சினை நீங்கி, கல்லீரல் நன்கு செயல்படும் என்றும் அந்த ஆய்வில் கூறப்பட்டுள்ளது. அதுமட்டுமல்லாமல், பப்பாளியின் இலையில் ஆன்டி-மலேரியல் மற்றும் ஆன்டி-கேன்சர் பொருட்கள் உள்ளன என்றும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. ஆகவே இந்த இலையின் சாற்றை மலேரியா மற்றும் புற்றுநோயால் பாதிக்கப்பட்டவர்கள் சாப்பிட்டால், உடலில் இருக்கும் நோயை தடுக்கலாம் என்றும் கூறுகிறது.


**பப்பாளி இலையின் சாற்றை எப்படி சாப்பிடலாம்?**

- முதலில் பப்பாளியின் இலையை நன்கு சுத்தமான நீரால் அலசிட வேண்டும். பின் அதனை கைகளால் நசுக்கி, அதிலிருந்து சாற்றை எடுக்க வேண்டும்.



- ஒரு பப்பாளி இலையின் சாற்றில் ஒரு மேசைக்கரண்டி சாறு வரும்.
- இந்த சாற்றை ஒரு நாளைக்கு மூன்று முறை பருக வேண்டும். அதிலும் ஆறு மணி நேரத்திற்கு ஒரு முறை பருக வேண்டும்.

இவ்வாறு சில கண்டுபிடிப்புகள் மூலம் டெங்கு நோயை ஒழித்துக் கட்ட முயன்றாலும் நோய் கண்டவர்கள் மருத்துவர்களின் ஆலோசனையைப் பெற்று செயற்படுவதே சிறப்பானதாக இருக்கும்.




**வெளியிடங்களிலிருந்து** வாங்கிக் கொண்டுவரப்பட்ட சில மிருகங்களுக்கு புரட்சிச் செய்தியே மிகவும் புதுமையான ஒரு விஷயமாக இருந்தது. க்ளோவரைத் தவிர இன்னும் மூன்று குதிரைகள் பண்ணையில் இப்போது இருந்தன. நேர்த்தியாக நிமிர்ந்து நிற்கும் மிருகங்கள் அவை, வேலை செய்வதில் சளைப்பதில்லை. ஆனால் பரம முட்டாள்கள். இரண்டாவது எழுத்துக்கு மேல் அவற்றால் படிக்கக் கற்றுக்கொள்ளக்கூட இயலவில்லை. புரட்சியைப் பற்றியும் விலங்கு தத்துவம் பற்றியும் யார் சொன்னதையும் அவை நம்பத் தயாராக இருந்தன. க்ளோவர் எது சொன்னாலும் அவை அதை அங்கீகரித்தன. தகப்பனாரை நேசித்து, அவருக்கு மரியாதையாக நடந்துகொள்வதுபோல அவை க்ளோவரை நேசித்து மரியாதையாக நடந்துகொண்டன.


ஆனால் க்ளோவர் புரட்சியைப் பற்றிச் சொன்னதில் பெரும்பகுதி அவற்றிற்குப் புரியவில்லை என்றுதான் சொல்ல வேண்டும். பண்ணையிலே ஏராளமாக விளைந்தது. இப்போது அது பணக்காரப் பண்ணைதான். நேர்மையாகவும் நிர்வகிக்கப்பட்டு வந்தது. சரியான முறையைக் கையாண்டு நடந்த பண்ணை அது. பில்கிங்டனிடமிருந்து இரண்டு வயல்களை விலைக்கு வாங்கி, பண்ணை இப்போது விஸ்தரிக்கப்பட்டிருந்து.

கடைசியில் காற்றாடி யந்திரமும் ஒரு வழியாகக் கட்டி வெற்றிகரமாக முடிந்தது. தானியம் அடிக்கும் யந்திரமும் பண்ணைக்கே சொந்தமாக வாங்கப்பட்டு விட்டன. பண்ணையிலே புதுக் கட்டிடங்கள் பல தோன்றிவிட்டன. விம்பர் ஒரு ரேக்ளா வண்டி வாங்கிவிட்டான். ஆனால் காற்றாடி யந்திரம் மின்சார உற்பத்திக்கு உபயோகப்படவில்லை. தானியங்கள் அரைக்கும் யந்திரத்தை ஓட்டத்தான் உபயோகப்பட்டது காற்றாடி. ஆனால் மாவு அரைப்பதால் சற்று அதிகமாகவே பண்ணைக்குப் பணம் வந்தது. விலங்குகள் எல்லாம் சிரமப்பட்டு இப்போது இன்னொரு காற்றாடி யந்திரக் கட்டிடம் கட்டுவதில் முனைந்திருந்தன. அது கட்டி முடித்தவுடன் பண்ணையிலே மின்சார சக்தி உற்பத்தியாகிவிடும் என்று சொல்லிக்கொள்ளப்பட்டது.

லாயங்களில் மின்சார விளக்குகள், சுடுதண்ணீர், வாரத்தில் மூன்றுநாள் வேலை என்றெல்லாம் கனவுகாண மிருகங்களுக்குச் சொல்லித் தந்த ஸ்நோபாலுடன் அந்தப் பேச்சுகளும் ஒரு வழியாக மறைந்துவிட்டன. அவையெல்லாம் விலங்கு தத்துவத்துக்கு எதிரான கருத்துக் கள் என்று நெப்போலியன் ஐயந் திரிபற கூறிவிட்டது. மிருகங்களைப் பற்றிய மட்டில் உண்மையான இன்பம் என்பது, கடினமாக வேலை செய்து செட்டாக வாழ்வதில்தான் இருக்கிறது என்று நெப்போலியன் சொல்லிவிட்டது. எப்படியோ பண்ணை பணக்காரப் பண்ணையாகிவிடது. ஆனால், அதனால் விலங்குகள் எந்தவிதத்திலும் பணக்காரர்களாகிவிடவில்லை. அதாவது பன்றிகளையும் வேட்டை நாய்களையும் தவிர வேறு எந்த மிருகத்துக்கும் பணம் சேர்ந்துவிடவில்லை.


இதற்குக் காரணம், பன்றிகளும் நாய்களும் பண்ணையிலே அதிகமாக இருந்ததனால்தான் என்று வேண்டுமானல் சொல்லலாம். அந்தப் பன்றிகளும் நாய்களும் கூட அதனதன் சக்திக்கேற்றபடி உழைக்காமல் இல்லை. பண்ணையை மேற்பார்வை பார்ப்பதும், நிர்வகிப்பதும் மிகவும் சிரமமான காரியங்கள் அல்லவா என்று ஸ்க்வீலர் அடிக்கடி சொல்லும். மற்ற மிருகங்கள் புரிந்துகொள்ள முடியாத உழைப்பு அது என்பதுதான் அதில் விசேஷம். உதாரணமாக ஸ்க்வீலர் பன்றி. **(நாளை)**

## வரைவோம் வாருங்கள்



# வேளான் கருவியிலிருந்து ரோபோ வரை

சீனாவில் பெய்சிங் மாநகரின் கிழக்கு பகுதியில், டோங்ஷூ மாவட்டத்திலுள்ள மாவூ என்ற கிராமத்தில் இருக்கும் வூ யூலூ, ரிக்ஷா இழுக்கும் ரோபோ ஒன்றை அவர் உருவாக்கியிருக் கிறார். ஆமாம் ஆளை அமர்த்தி கைவண்டியை இழுத்துச் செல்லும் வாகனத்தை இவர் உருவாக்கிய எந்திர மனிதன் இழுத்துச் செல்கிறது. அதாவது கோடிக் கணக்கில், லட்சக்கணக்கில் செலவு செய்து இயற்பியல், கணிப்பொறியியல் இவற்றில் பட்டம் பெற்றவர் களை வைத்து பெரிய நிறுவனங்கள் உருவாக்கிக்கொண்டிருக்கும் ரோபோக்களை ஆரம்பக்கல்வியோடு படிப்பை தொடரமுடியாமல் குடும்பத்தின் சுமையைக் குறைக்க வேலைக்குச் சென்ற சாதரண ஒரு தொழிற்சாலை பணியாளரான வூ யூலூ உருவாக்கியிருக்கிறார்.



70களின் இறுதியில் வேளான் கருவிகளை தயாரிக்கும் ஆலையில் வேலை கிடைத்தபின் தனது வருமானத்தில் ஒரு சிறிய பங்கை பழைய தையல் எந்திரங்களின் உதிரி பாகங்களையும், எஃகு

## சிறுவர் அமுதம்

கம்பிகளையும் வாங்கி மனித அசைவுகளை செய்யக்கூடிய இயந்திர மனிதனை உருவாக்கும் முயற்சியில் ஈடுபடத் தொடங்கினார். மனிதர்களின் அங்க அசைவுகளை செய்யக்கூடிய இயந்திரம் ஆம் அப்போதைக்கு இந்த சாதாரண இரு வேளான் கருவி தொழிற்சாலை பணியாளருக்கு ரோபோ, எந்திர மனிதன் என்பதெல்லாம் தெரிந்திருக்க வாய்ப்பில்லை. அவருக்கு இயற்பியலோ, பொறியியலோ எதுவும் முறைப்படி தெரியாது, அதன் சூத்திரங்களும், கோட்பாடுகளும் அவர் அறிந்திருக்கவில்லை.

தொடர்ந்து தனது முயற்சிகளை தீவிரமாக்கி 1982ல் தன்னுடைய முதல் அசையும் இயந்திரத்தை அல்லது இயந்திர மனிதனை தயாரித்தார் வூ யூலூ. வூ லாவோடா என்று அதற்கு பெயரும் வைத்தார். வூ லாவோடா என்றால் வூவின் முதல் மகன் என்று பொருள். இப்படி அவர் ஆர்வமுடன் தனக்கு கிடைத்த சொற்ப வருமானத்தை வைத்து பழைய உதிரி பாகங்களைக் கொண்டு ரோபோவை உருவாக்கத் தொடங்கிய வூ யூலூ, இன்று வரை அதாவது கடந்த 25 ஆண்டு காலத்தில் 26 ரோபோக்களை உருவாக்கியுள்ளார்.

## பூனைக்குட்டி



மியாவ் மியாவ் பூனைக்குட்டி
மீசை வச்ச பூனைக்குட்டி
பையப் பையப் பதுங்கி வந்து
பாலைக் குடிக்கும் பூனைக்குட்டி

பளபளக்கும் பளிங்குக் குண்டு
பளிச் சென்று முகத்தில் இரண்டு
வெளிச்சம் போடும் விழி கண்டு
விரைந்தோடும் எலியும் மிரண்டு

விரித்த பூவைக் கவிழ்த்ததுபோல
விளங்கும் பூனைக் காலடிகள்
இருந்து தவ்வ ஏற்றபடி
இயங்கும் சவ்வுத் தசைப்பிடிகள்

அழகு வண்ணக் கம்பளி யால்
ஆடை உடுத்தி வந்தது போல்
வளர்ந்து முடியும் பலநிறத்தில்
வந்து தாவும் பூனைக்குட்டி

விரட்டி விலங்கினைக் காட்டிலே
வீரங் காட்டும் புலியினமே
துரத்தி எலியை வீட்டினிலே
தொல்லை தீர்க்கும் பூனை தினமே

## முல்லாவின் தந்திரம்

ஒரு நாள் முல்லா குளத்தில் நீந்திக்கொண்டிருந்த வாத்துக்களில் ஒன்றைப் பிடிக்க முயற்சி செய்தார். வாத்துக்கள் கரை ஒரமாக வரும்போது முல்லா அதனை எட்டிப் பிடிக்க முயற்சி செய்தார். வாத்துக்களோ அவர் கையில் அகப்படுவதுபோல பாவனை செய்து நழுவி கொண்டிருந்தன. அந்தச் சமயத்தில் முல்லாவின் நண்பர் ஒருவர் அந்தப் பக்கமாக வந்தார்.

வாத்தைப் பிடிக்க முல்லா எடுக்கும் பிரயாசையையும், அதில் அவர் அடிக்கடி தோல்வியடைவதையும் கண்ட நண்பருக்குச் சிரிப்பு வந்தது. "என்ன முல்லா அவர்களே வாத்து வேட்டை நடக்கிறது போலிருக் கிறது" என்று சிரித்துக் கொண்டே கேட்டார். முல்லா உடனே தமது பையிலிருந்த ரொட்டித் துண்டை எடுத்து குளத்து நீரில் நனைத்துச் சாப்பிடத் தொடங்கினார். "என்ன செய்கி றீர்கள் முல்லா அவர்களே" என நண்பர் கேட்டர். " வாத்து சூப்பில் ரொட்டியை நனைத்துச் சாப்பிடுகிறேன்" என்று தனது ஏமாற்றத்தை மறைத்துக் கொண்டு கூறிச் சமாளித்தார் முல்லா.

# யாழ்ப்பாணத்தின் அழிவுகளைப் பார்த்தபோது என் உடலெல்லாம் நடுங்கத் தொடங்கியது

## யாழ். நகரில் வேர்களைக் கொண்ட சிங்கள இளைஞன் பாரிசில் ஆற்றிய உரையில் வெளியிட்ட கருத்து இது

"நான் கடந்த வருடம் பிரான்சிலிருந்து இலங்கைக்கு வந்திருந்தபோது யாழ்ப்பாணத்துக்கும் சென்றேன். யாழ்ப்பாணத்தைச் சூறையாடிய குழப்பங்களை நேரில் பார்த்தபோது ஏதோ சரியில்லையென்ற உணர்வு என் மனதில் வளரத் தொடங்கியது. அந்த அழிவுகளை நான் முதற் தடவையாகப் பார்த்தபோது எனது உடலெல்லாம் நடுங்கத் தொடங்கியது" - இவ்வாறு பாரிஸில் கடந்த 27ஆம் திகதி இடம்பெற்ற கலந்துரையாடலில் கூறினார் திஷார தேவசுரேந்திரா என்ற இளைஞர்.

"அடுத்தது என்ன?"' என்ற சுயாதீன அமைப்பொன்று நடத்திய கலந்துரையாடலில் வளவாளர்களில் ஒருவராகக் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார். இலங்கையைச் சேர்ந்த பட்டப் பின்படிப்பு மாணவர்களையும் இளம் துறைசார் நிபுணர்களையும் உள்ளடக்கிய அமைப்பே, "அடுத்தது என்ன?"' என்பதாகும். "இலங்கையில் சமாதானத்தைக் கட்டியெழுப்பும் வழிமுறையில், இலங்கையைச் சேர்ந்த புலம்பெயர் இளைஞர்களின் பங்களிப்பு" என்ற தொனிப்பொருளில் இந்தக் கலந்துரையாடல் நடைபெற்றது. புத்திஜீவிகள் மற்றும் பல்லினத்தைச் சார்ந்தவர்களின் கருத்துப் பரிமாறல்களுக்கூடாக இலங்கையில் நீடித்த சமாதானத்தை ஏற்படுத்துவதை நோக்காகக் கொண்டு செயற்பட்டு வருவதே" அடுத்தது என்ன?" என்ற அழைப்பாகும்.

பிரிட்டனிலுள்ள பௌர்னெமௌத் பல்கலைக்கழகத்தில் எம்.பி.ஏ.பட்டம் பெற்ற திஷார தேவசுரேந்திரா, தற்போது பிரான்ஸில் மார்செய்ல் என்ற பகுதியில் இயங்கும் தன்னார்வத் தொண்டு நிறுவனமொன்றில் பொருளாதாரத் திட்ட முகாமையாளராகப் பணியாற்றி வருகிறார்.

அவர் 27ஆம் திகதிய கலந்துரையாடலில் மேலும் தெரிவித்த கருத்துகள் வருமாறு:


நான் யாழ்ப்பாணத்தைப் பார்த்து அதிர்ந்துபோன அந்த விஜயத்தின்போது எனது குடும்பத்தவர்களுடன் விடுமுறையைக் கழிக்கச் சென்றிருந்தேன். எனது பெற்றோர் மாமாமார், மாமிமார், அறுபதாம் ஆண்டுகளின் மத்தி யாழ்ப்பாணத்தில் வசித்த எனது பாட்டி ஆகியோருடன்தான் நான் யாழ்ப்பாணத்துக்குச் சென்றிருந்தேன். ஏனையவர்களைப்போல எனது பாட்டியும் எழுபதுகளில் யாழ்ப்பாணத்தை விட்டு வெளியேறயிருந்தார். பிறகு நான் எனக்குள் நானே யோசித்துக் கொண்டேன். அரசியல் ரீதியாகப் பேசுவதானால் யுத்தம் நிச்சயமாக முடிவுக்கு வந்துவிட்டது. ஆனால் எனது குடும்பப் பின்னணி யாழ்ப்பாணத்தையே பின்புலமாகக் கொண்டிருந்தது, எனது பாட்டியாரைப் பார்க்க என்னால் யாழ்ப்பாணத்துக்கு முதல் தடவையாகச் செல்ல முடிந்திருக்கிறதென்றால் அது குறித்து எனக்குள் நானே சிந்தித்தேன்.

தனது பாட்டன், பாட்டிமாரை அல்லது தன் குடும்பத்தினரை முதல்தடவையாகப் பார்ப்பதற்கு வரும் ஒருவர், தனது குடும்பத்தவரின் வீடு முற்றுமுழுதாக அழிக்கப்படவில்லை என்றாலும், குண்டு வீச்சுகளால் சேதமுற்ற சகல ஞாபகச் சின்னங்களை அல்லது குண்டுகள் துளைத்த வீட்டுச் சுவர்களைப் பார்க்கும்போது அவரது உணர்வு எப்படியிருக்கும்?

முப்பது வருட கால யுத்தத்தால் சேதமாக்கப்பட்ட ஒரு நகரத்தைப் பார்த்த பின்னர், கொழும்புக்கு அல்லது ஏனைய பகுதிகளுக்குத் திரும்பிச் சென்று இலங்கையின் அழிவுகளைப் பார்க்கும் ஒருவரின் உணர்வு எப்படி இருக்கும்? அது நானாக இருந்தால் ஆத்திரம் அல்லது குரோத உணர்வு நிச்சயமாக என்னில் ஏற்படும். இந்த உணர்வுதான் புலம்பெயர்ந்தவர்களுக்கு வெளியூட்டும் இந்த வகையில்தான் உலகில் எப்பகுதியிலென்றாலும் வாழும் இலங்கையின் பல்வேறு இனத்தவர்களுக்கிடையிலான சமாதானமும் இருக்கிறது. ஆகவேதான் இதனை நினைத்து நான் வேதனைப்படுகிறேன்.

இந்த யுத்தத்தைப் பற்றி நான் கடந்த காலம் என்ற நிலையிலிருந்து பேசவிரும்புகிறேன். எதிர்காலத்தைப் பற்றி நிகழ்காலத்திலும் எதிர்காலத்திலும் பேச விரும்புகிறேன். நீங்கள் புலம்பெயர் இலங்கையராக இருப்பீர்களேயானால், இலங்கை பற்றிய உங்கள் நோக்கு வழமையாகத் திரிவுபடுத்தப்பட்டதாகவே இருக்கும். உங்களுக்கு உங்கள் நாட்டுடன், உங்கள் பெற்றோர்களுடன், உங்கள் குடும்பத்தினருடன், உங்களையொத்த சமகாலத்தவருடன் ஊடாக உங்கள் கலாசார அடையாளத்தை ஏற்புடைய தாக்குங்கள். நீங்கள் இலங்கைக்குப் போகின்றபோதும் கூட, உங்கள் பார்வைகளும், அபிப்பிராயங்களும் கலாசார மற்றும் மொழிவாரித் தடைகளால் பக்கச்சார்பானவை ஆகின்றன. இருந்தாலும் எனது அவதானிப்பு என்னவெனில், இலங்கையிலிருந்து புலம்பெயர்ந்து வாழும் இளைஞர்கள், இலங்கையில் வாழ்பவர்களை விடக் கூடுதலாகப் பாரம்பரிய அம்சங்களோடு தொடர்புபட்டுள்ளனர்.

இவ்வாறு திஷார தேவசுரேந்திர தெரிவித்தார்.



# இன்று பதினைந்தாவது ஆண்டில் கால் பதிக்கும் சக்தி எப்.எம்.

இலங்கையின் ஒலிபரப்புத் துறை வரலாற்றில் மூன்றாவது தமிழ் தனியார் வானொலியாக உதயமான சக்தி எப்.எம். இன்று (20.11.2012) பதினான்காவது பிறந்தநாளைக் கொண்டாடுகிறது.

1998ஆம் ஆண்டு நவம்பர் முதலாம் திகதியிலிருந்து 105.1 பண்பலையில் சக்தி எப்.எம். பரீட்சார்த்த ரீதியாக ஒலிபரப்பை ஆரம்பித்தது. இதனைத் தொடர்ந்து நவம்பர் 20ஆம் திகதியன்று காலை 7.00 மணிக்குப் பின்னரான சுப நேரத்தில் உத்தியோகபூர்வமாக இயங்கத் தொடங்கியது.

ஆரம்பத்தில் காலை 5.00 மணிமுதல் நள்ளிரவு 12.00 மணிவரையில் ஒலிபரப்பை மேற்கொண்டு வந்த சக்தி எப்.எம். வானொலி, பின்னர் 24 மணிநேர சேவையாக மாற்றம் பெற்று இன்று நாடளாவிய ரீதியில் மட்டுமல்ல, உலகளாவிய ரீதியிலும் நேயர்களது இதயங்களில் சிறப்பான இடத்தைப் பெற்ற நிலையில் ஒலித்துக் கொண்டிருக்கிறது.

சக்தி எப்.எம். ஆரம்பத்திலிருந்து காலத்திற்குக் காலம் பல்வேறுபட்ட நிகழ்ச்சிகளை அறிமுகம் செய்து வழங்கி வந்திருக்கிறது. தினந்தோறும் அதிகாலை 4.30 மணிக்கு ஆரம்பமாகும் மலரும் சக்தி 'வான்மறை' யுடன் இணைந்து இறைமணம் கமழும் வகையில் அமைந்திருக்கிறது. தொடர்ந்து காலை 6.00 மணிக்கு ஆரம்பமாகும் 'வணக்கம் தாயகம்' நாள்தோறும் நேயர்களை வரவேற்று உபசரித்து வருகிறது. சனிக்கிழமைகளில் காலை 8.00 மணிக்கு ஒலிக்கும் 'மக்கள் சக்தி' பலரையும் கவர்ந்துள்ளது.

தினமும் நள்ளிரவு 12.00 மணியிலிருந்து 'ராத்திரியின் சொந்தக்காரன்', 'நினைத்தாலே இனிக்கும்' ஆகியன அதிகாலைவரை நேயர்களுக்கு பெருவிருந்து படைத்து வருகிறது.

திங்கள் முதல் வெள்ளிவரை காலை 10.00 மணி தொடக்கம் கொண்டாட்டம், சிநேகிதி, மாலை எக்ஸ்பிரஸ், ஹலோ சக்தி, இதயம் பேசியதே, நிலாச்சோறு மற்றும் வெள்ளி இரவுகளில் இராஜராஜசோழன், ராஜாங்கம் போன்ற நிகழ்ச்சிகளுடன், சனிக்கிழமைகளில் சக்தி 20.`.20, பின்னஸ் குரு, ஒளித்துவைத்த ஒலிவாங்கி, தக்காளித் தியேட்டர், மை சக்தி, இதயம், துள்ளுவதோ இளமை ஆகிய நிகழ்ச்சிகளும், ஞாயிற்றுக்கிழமைகளில் வெள்ளித்திரை, சமையல் ராணி, ரெட்டை வால்ஸ், மஞ்சள் வெயில் மாலையிலே, ஸ்போட்ஸ் மாஸ்டர், கவிராத்திரி, சரியா தவறா ஆகிய நிகழ்ச்சிகளும் நேயர்களுக்கு பொழுது போக்காகவும், இரசனைக்கு உரியதாகவும் அமைந்திருப்பதை சிறப்பாகக் குறிப்பிடலாம்.

இன்று கால்பதிக்கும் பதினைந்தாவது ஆண்டிலும் புதிய மாற்றங்களுடன், பல புதிய நிகழ்ச்சிகளையும் சக்தி எப்.எம். அறிமுகம் செய்யவிருக்கிறது.

சக்தியின் செய்திச் சேவை நியூஸ் பெஸ்ட் (News First) ஊடாக நாளாந்தம் நான்கு தடவைகள் வழங்கும் செய்தி அறிக்கை நேயர்களுக்கு காத்திரமானதாக அமைந்திருக்கிறது.

ஒலிபரப்புக்கு மேலதிகமாக நாடளாவிய ரீதியில் சக்தி வானொலி குழுவினர் விஜயம் செய்து நேயர்களை சந்தித்து உரையாடுவதுடன், இசை நிகழ்ச்சிகளையும் நடத்தி வருவதும் சிறப்பு நிகழ்வாக அமைந்திருக்கிறது.

சக்தி வானொலியின் பதினான்காவது பிறந்த தினத்தையொட்டி இன்று மாலை யாழ். மானிப்பாய் அதிகார் செல்லமுத்து மைதானத்தில் பிரமாண்டமான இசை நிகழ்ச்சியொன்று நடைபெறுகிறது.

இம்மாதம் முதலாம் திகதியிலிருந்து இலங்கை தொலைத் தொடர்புகள் ஒழுங்கமைப்பு ஆணைக்குழுவின் அலைவரிசை புதுப்பிக்கும் தேசியக் கொள்கையின் அடிப்படையில் சக்தி எப்.எம். வானொலி 103.9, 104.1 ஆகிய பண்பலைகளில் ஒலிபரப்பை மேற்கொண்டு வருகிறது. யாழ்ப்பாணம் உட்பட வடபகுதி நேயர்கள் 104.1 பண்பலை வரிசையில் சக்தி வானொலி நிகழ்ச்சிகளை தெளிவாகக் கேட்க முடியும்.

சக்தி எப்.எம் வானொலி என்றென்றும் சக்திமிக்க நிகழ்ச்சிகளை வழங்கி தமிழ்பேசும் மக்களின் சக்தியாகத் திகழ வேண்டும் என்பதே நேயர்களது பெருவிருப்பமாக அமைந்திருக்கிறது.

- அ. கனகசூரியர்.

# யாழ் மாவட்டத்தில் முப்பது பெண்கள் முச்சக்கர வண்டி ஓட்டிப் பிழைக்கிறார்கள்




பெண்கள் கல்வி மற்றும் ஆய்வு மையம் என்ற அமைப்பொன்று ஆரம்பித்திருக்கும் திட்டத்தின்படி யாழ்ப்பாணத்தில் இருபது பெண்களுக்கு முச்சக்கரவண்டி கையளிக்கப்பட்டது. நல்லூரில் ஐந்து பெண்களுக்கும், உடுவிலில் மூன்று பெண்களுக்கும் முச்சக்கரவண்டிகள் கையளிக்கப்பட்டதாக யாழ் பிரதேச செயலக மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர் உதயாணி நவரத்தினம் தெரிவித்தார்.

இராமேஸ்வரம் இந்திரவதனி என்ற இரண்டு பிள்ளைகளின் தாய் கடந்த எட்டு மாதங்களாக முச்சக்கரவண்டி ஓட்டி வருமானம் தேடி குடும்பத்தை பாதுகாத்துவருகிறார். இவரது கணவர் ஷெல் தாக்குதலுக்கு இலக்காகி கால் ஒன்றினை இழந்து அங்கவீனர் ஆகிவிட்டார். பிள்ளைகளின் கல்வி மற்றும் தேவைகளுக்காக முச்சக்கரவண்டி ஓட்டி நாளாந்தம் 500 ரூபா பெறமுடிகிறது என்கிறார் இந்திரவதனி.

முச்சக்கரவண்டி ஓட்டுவதன் மூலம் பெண்கள் வருமானம் தேடும் திட்டம் கடந்த பெப்ரவரி மாதம் ஆரம்பிக்கப்பட்டது. பெண்கள் தமது முச்சக்கரவண்டிகளை நிறுத்துவதற்கான இடமொன்றினை யாழ் மாநகரசபை மேஜர் திருமதி. யோகேஸ்வரி பற்குணராசா ஒதுக்கிக் கொடுத்துள்ளார். குடும்பத் தலைவன் இறந்த அல்லது குடும்பத்தலைவன் அங்கவீனமான நிலையிலுள்ள குடும்பத்தைச் சேர்ந்த பெண்களுக்கே முச்சக்கரவண்டிகள் வழங்கப்பட்டிருக்கின்றன.

யுத்தத்தால் இந்தப் பெண்கள் பாதிக்கப்பட்ட போதிலும் கூடத் தமது கஷ்டங்களை நீக்குவதற்கு இந்த முச்சக்கரவண்டி ஓட்டும் தொழில் தமக்கு பெரிதும் உதவுகிறது என்று முச்சக்கர வண்டி ஓட்டும் பெண்கள் கூறுகிறார்கள்.

முச்சக்கரவண்டி கொள்வனவுக்குத் தேவையான முழுத் தொகையில் அரைவாசியை மகளிர் கல்வி மற்றும் ஆய்வு மையம் வழங்குகிறது. மாதாந்தத் தவணை முறையில் பத்தாயிரம் ரூபா செலுத்த வேண்டும். இவ்வாறு செலுத்த முடியாத பெண்களுக்கு முழுத் தொகையையும் செலுத்தி முச்சக்கர வண்டியைப் பெற்றுக் கொடுப்பதோடு தவணைக் கொடுப்பனவையும் மேற்படி மகளிர் அமைப்பே பெண்களிடம் இருந்து பெற்றுக் கொள்கிறது.

# சீனாவுக்கு மீண்டும் எச்சரிக்கை விடுத்துள்ள தலாய் லாமா

உலக நாடுகள் எல்லாம் வெளிப்படையான, ஜனநாயக பாதையை நோக்கி சென்று கொண்டிருக்கின்றன. அதிலிருந்து சீனா தப்பிக்க முடியாது என்று புத்தமதத் தலைவர் தலாய் லாமா எச்சரித்துள்ளார்.



திபெத் பகுதியை சீனா தன் கட்டுப்பாட்டில் வைத்துள்ளது. இதை எதிர்த்து தலாய் லாமா தலைமையில் புத்த மதத்தினர் பல ஆண்டுகளாக போராட்டம் நடத்தி வருகின்றனர்.

சீனாவை கண்டித்து புத்தமதத் துறவிகள் பலர் தீக்குளித்து தற்கொலை செய்து வருகின்றனர். இந்நிலையில், சீனாவில் புதிய ஜனாதிபதியாக ஜின்பிங் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

திபெத் ஆதரவு அமைப்பினரின் 3 நாள் சர்வதேச சிறப்பு மாநாடு தர்மசாலாவில் நடக்கிறது.


இதை முன்னிட்டு தலாய் லாமா கூறுகையில், உலக நாடுகள் வெளிப்படையான, ஜனநாயக பாதையை நோக்கி சென்று கொண்டிருக்கின்றன. அதில் இருந்து சீனா தப்பிக்க முடியாது. இதை சீனாவில் அடுத்து ஆட்சி அதிகாரத்தில் உள்ளவர்கள் புரிந்து கொள்ள வேண்டும் என்று தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து மூத்த புத்த துறவி டெங் ஜியோபிங் கூறுகையில், தற்போதைய சூழ்நிலையை ஆராய்ந்து அதற்கேற்ப உண்மையை புரிந்து கொள்ள வேண்டும்.

உண்மையின் அடிப்படையில் சீன தலைவர்கள் கொள்கை வகுக்க வேண்டும். நடப்பு நிலவரத்தை புரிந்து கொள்ளாமல் கொள்கை வகுப்பதால் பிரச்னைக்கு தீர்வு ஏற்படாது என்றார்.

# பாலஸ்தீனத்தின் மீதான தாக்குதலை விரிவுபடுத்த தயார்: இஸ்ரேல் பிரதமர்

பாலஸ்தீனத்தின் மீது தாக்குதல் நடத்துவதற்கு விரிவான ஏற்பாடுகளை செய்துள்ளதாக இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு தெரிவித்துள்ளார்.



பாலஸ்தீனத்தின் காஸா பகுதி மீது இஸ்ரேல் தொடர்ந்து நேற்று 5வது நாளாக வான்வழி தாக்குதலை நடத்தியது. இத்தாக்குதலுக்கு இதுவரையிலும் 52 பேர் பலியாகி உள்ளனர்.

இந்நிலையில் பாலஸ்தீனத்தின் மீது தாக்குதல் நடத்த விரிவான ஏற்பாடுகளை செய்துள்ளதாக இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு தெரிவித்துள்ளார்.

இஸ்ரேலின் இந்த நடவடிக்கையை ஜேர்மன் சான்சலர் ஏஞ்சலா மார்க்கெல் ஆதரித்துள்ளதுடன், எதிரிகளிடமிருந்து பாதுகாத்து கொள்ளவே இஸ்ரேல் இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளதாக தெரிவ-ித்துள்ளார்.

ஆனால் பாலஸ்தீனத்தின் மீது நடத்தப்பட்டு வரும் வான்வழி தாக்குதலை இஸ்ரேல் நிறுத்தி கொள்ள வேண்டும் என எகிப்து ஜனாதிபதி முகமது முர்சி கேட்டுக் கொண்டுள்ளார்.

இதற்கிடையே இஸ்ரேல் மீது ஹமாஸ் அமைப்பினர் தாக்குதல் நடத்தும் ஏவுகணைகள் ஈரானுக்கு சொந்தமானவை என கூறப்பட்டது. ஆனால் இந்த ஏவுகணைகளை நாங்கள் விநியோகிக்கவில்லை என ஈரான் மறுத்துள்ளது.

# பூமிக்கு திரும்பினார் சுனிதா வில்லியம்ஸ்

அமெரிக்க விண்வெளி வீராங்கனை சுனிதா வில்லியம்ஸ் வெற்றிகரமாக பூமிக்கு திரும்பினார்.



அமெரிக்கா, ரஷ்யா, ஜப்பான், அவுஸ்திரேலியா உட்பட பல நாடுகள் ஒன்றிணைந்து பூமிக்கு மேல், 410 கிலோ மீற்றர் உயரத்தில் சர்வதேச விண்வெளி நிலையத்தை அமைத்துள்ளன.

இந்த செயற்கை விண்வெளி நிலையத்தில் விண்வெளி வீரர்கள் தங்கி ஆய்வு மற்றும் பராமரிப்பு பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில் கடந்த ஜுலை மாதம் 15ஆம் திகதி ரஷ்யாவின் சோயூஸ் விண்கலம் விண்ணில் செலுத்தப்பட்டது.

அமெரிக்காவின் சார்பில் சுனிதா வில்லியம்ஸ் மற்றும் ரஷ்ய, ஜப்பானிய வீரர்கள் இதில் பயணித்தனர்.

விண்வெளியில் 127 நாட்கள் தங்கியிருந்து பல்வேறு பணி-களை மேற்கொண்ட சுனிதா வில்லியம்ஸ், சோயூஸ் விண்கலத்தின் மூலம் பூமிக்கு நேற்று திரும்பினார்.

இவருடன் ரஷ்ய மற்றும் ஜப்பானிய விண்வெளி வீரர்களும் கசகஸ்தானில் தரையிறங்கினர்.

# தலிபான்களுக்கு உதவும் சட்டசபை உறுப்பினர், பத்திரிகையாளர்கள்: பட்டியல் வெளியானது

தலிபான் பயங்கரவாத அமைப்பினர் தங்களுக்கு நெருக்கமானவர்களின், மின்னஞ்சல் விலாசங்களை தவறுதலாக வெளியிட்டு விட்டனர்.



ஆப்கானிஸ்தானில் ஆட்சியை இழந்த தலிபான்கள், பாகிஸ்தான்-ஆப்கான் எல்லை பகுதிகளில் ஓடி ஒளிந்தனர். இவர்கள் ஆப்கானில் பல்வேறு நாசவேலைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதற்கிடையே தலிபான்கள் தங்கள் ஆதரவாளர்களின் ரகசிய முகவரிகளை தவறுதலாக மின்னஞ்சலில் வெளியிட்டு விட்டனர்.

தலிபான் தகவல் தொடர்பாளர் யூசுப் அகமதி என்பவர் வழக்கமாக தலிபான்களின் செயல்பாடுகள் குறித்த தகவல்களை, தங்கள் ஆதரவு பத்திரிகையாளர்களுக்கு மின்னஞ்சல் மூலம் அனுப்புவார்.

இப்படி அவர் அனுப்பும் போது, தவறுதலாக தங்கள் ஆதரவாளர்களின் 400 பேர் விலாச பட்டியலையும் மின்னஞ்சல் மூலம் அனுப்பி விட்டார்.

இதனால் தலிபான் ஆதரவாளர்களின் விலாசங்கள் வெட்ட வெளிச்சமாகிவிட்டன. ஆப்கானில் பல்வேறு மாகாண கவர்னர்கள், சட்டசபை உறுப்பினர்கள், பத்திரிகையாளர்கள் உள்ளிட்டோர் தலிபான் ஆதரவாளர்கள் பட்டியலில் இருப்பது தற்போது தெரிய வந்துள்ளது.

## உலக பார்வை

# டுபாயில் 34 அடுக்கு மாடி கட்டிடத்தில் பயங்கர தீ விபத்து



டுபாயில் 34 அடுக்கு மாடி கட்டிடத்தில் பயங்கர தீ விபத்து ஏற்பட்டது.

டுபாயில் ஜுமிரா லேக் டவர்ஸ் என்ற 34 அடுக்குகள் கொண்ட கட்டிடத்தில் நேற்று பயங்கர தீ விபத்து ஏற்பட்டது.

உடனடியாக கட்டிடத்தில் தங்கியிருந்தவர்கள் மீட்கப்பட்டதால், யாருக்கும் காயம் ஏதுமில்லை.

ஆனால் கட்டிடத்தில் இருந்த பொருட்கள் தீயில் கருகி நாசமாயின. தீ விபத்து குறித்து விசாரணை நடைபெறுகிறது.



அமெரிக்க அதிபர் பாரக் ஒபாமா தாய்லாந்து நாட்டுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளார். பாங்ஹாங்கில் நடைபெற்ற கூட்டத்தில் பேசிய பின்னர் வெளியேறும் ஒபாமா, தாய்லாந்து பிரதமர் யிங்லக் சின்வத்ரா.

# மகளுக்காக பேரக்குழந்தை பெற்றுக் கொடுக்கும் தாய்!

இங்கிலாந்து தலைநகர் லண்டனில் உள்ள ஆன்டாரியோ பகுதியை சேர்ந்தவர் கேத்தி டொனெல்லி (58). இவரது மகள் ஷன்னான் பிஸ்சர். இவரது கர்ப்பபை புண்களால் பாதிக்கப்பட்டிருந்தது. இவரால் குழந்தை பெற முடியாது என மருத்துவர்கள் தெரிவித்தனர்.




எனவே, ஷனான் கவலை அடைந்தார். அதை அறிந்த கேத்தி டொனெல்லி வாடகை தாயாக மாறி தனது மகளுக்கு குழந்தை பெற்று தர முன் வந்தார். இதைத் தொடர்ந்து தற்போது தனது மகளின் 6 மாத கருவை தனது வயிற்றில் சுமக்கிறார்.

இன்னும் 4 மாதத்தில் பிறக்க போகும் தனது பேரக் குழந்தையின் வருகையை எதிர்பார்த்துகாத்து இருக்கிறார்.

# ஸ்பெக்ட்ரம் ஏலத்தில் முறைகேடு புது குண்டு போடுகிறார் ஜோஷி

2ஜி ஸ்பெக்ட்ரம் மறு ஏலம் விட்டதில் முறைகேடு நடந்துள்ளது. மத்திய கணக்கு தணிக்கை அதிகாரியின் மதிப்பீடு தவறானது என, பிரசாரம் செய்வதற்காக, இந்த முறைகேடு அரங்கேற்றப்பட்டு உள்ளது, என, பா.ஜ. மூத்த தலைவர், முரளி மனோகர் ஜோஷி கூறினார். பா.ஜ., மூத்த தலைவரும், பார்லிமென்ட் பொதுக் கணக்கு குழு தலைவருமான, முரளி மனோகர் ஜோஷி கூறியதாவது:



சுப்ரீம் கோர்ட் உத்தரவை அடுத்து, "2ஜி" ஸ்பெக்ட்ரம் ஒதுக்கீட்டுக்கு, சமீபத்தில் மறு ஏலம் விடப்பட்டது. மறு ஏலத்தின் மூலம், 40 ஆயிரம் கோடி ரூபாய், வருவாய் கிடைக்கும் என, எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், எதிர்பார்த்த அளவுக்கு வருவாய் கிடைக்கவில்லை. இந்த ஏலத்தில் முறைகேடு நடந்துள்ளது.

முக்கியமான தொலை தொடர்பு நிறுவனங்கள், இந்த ஏலத்தில் பங்கேற்கவில்லை. இதற்கு பின்னணி உள்ளது. ஏற்கனவே நடந்த, "2ஜி" ஸ்பெக்ட்ரம் ஏலத்தில், 1.76 இலட்சம் கோடி ரூபாய் இழப்பு ஏற்பட்டதாக, மத்திய கணக்கு தணிக்கை அதிகாரி தெரிவித்திருந்தார். அவரின் மதிப்பீடு தவறானது என, மக்களிடம் பிரசாரம் செய்வதற்காக, மறு ஏலத்தில் முறைகேடு அரங்கேற்றப்பட்டு உள்ளது. இதுகுறித்து, முறையான விசாரணை நடத்த வேண்டும்.

மத்திய கணக்கு தணிக்கை அதிகாரியின் மதிப்பீடு தவறானது என, காங்கிரஸ் கட்சியினர், தற்போது பிரசாரம் செய்து வருவதை, கவனிக்க வேண்டும். மத்திய கணக்கு தணிக்கை அதிகாரியை விமர்சிக்க, யாருக்கும் உரிமை இல்லை. அவரின் மதிப்பீடு, தவறு எனக் கருதினால், பார்லிமென்ட்டில் அவருக்கு எதிராக கண்டன தீர்மானம் கொண்டு வர வேண்டுமே தவிர, அவரை விமர்சிக்கக் கூடாது. இவ்வாறு, முரளி மனோகர் ஜோஷி கூறினார்.

# இந்திய செய்திகள்

## இந்தியர்களின் கறுப்பு பணம் பற்றிய தகவல்களை சுவிஸ் வெளியிடுமா?

இந்தியர்களின் கறுப்பு பணம் பற்றிய ரகசிய கணக்குகள் பற்றி தகவல்களை பெறுவதற்காக சுவிட்சர்லாந்து வருவாய் துறை அதிகாரிகளை, இந்தியா அணுகியுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

சுவிஸ் வங்கிகளில் கறுப்பு பணம் வைத்திருக்கும் தொழிலதிபர்கள் பட்டியலை ஊழலுக்கு எதிரான இந்தியா இயக்கத்தின் தலைவர் அர்விந்த் கேஜ்ரிவால் சமீபத்தில் வெளியிட்டார்.

இதையடுத்து 700 பேரின் இரகசிய கணக்கு விபரங்கள் குறித்து இந்திய வரித்துறையினர் ஆய்வு செய்ததுடன், இதில் 80 பேர் சட்டத்திற்கு புறம்பாக, ரூ. 435 கோடி வெளிநாட்டு வங்கிகளில் பதுக்கிவைத்திருப்பதை உறுதி செய்தனர்.

இதற்கிடையே சுவிட்சர்லாந்து வருவாய் துறை அதிகாரிகளை இந்திய வரித்துறையினர் நாடியிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்தியா- சுவிட்சர்லாந்து இடையிலான இரு வழி வரிவதிப்பு தவிர்ப்பு ஒப்பந்தத்தின் கீழ் உள்ள விதியொன்றின் படி, சுவிஸ் வங்கிகளில் பணம் போட்டு வைத்திருக்கும் இந்தியர் ஒருவரின் பெயர், விலாசம், இரகசிய கணக்கு எண்ணையோ அல்லது, குறிப்பிட கணக்கில் உள்ள தொகை குறித்த விபரத்தை இந்தியா கோரிக்கை விடுத்தால் சுவிஸ் வங்கிகள் அதற்கு பதில் அளிக்க வேண்டும் என்ற நடைமுறை உள்ளது குறிப்பிடத்தக்கது.

# நீரத்தேக்க தொட்டி இடிந்துவிழுந்து 14 பேர் பலி: மீட்புப் பணிகள் தீவிரம்

மத்தியப் பிரதேச மாநிலத் தலைநகர் போபாலில் நீர்த் தேக்கத் தொட்டி இடிந்து விழுந்ததில் 14 பேர் உயிரிழந்த சம்பவம் அம்மாநிலத்தில் துக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.


தலைநகர் போபாலில் நீர்த் தேக்கத் தொட்டி அமைந்திருந்த பகுதியில், திடீரென பலத்த சத்தம் கேட்டு மின் இணைப்பு துண்டிக்கப்பட்டுள்ளது.

இதனை தொடர்ந்து அப்பகுதி மக்கள் வெளியே வந்து பார்த்த போது நீர்த் தேக்கத் தொட்டி இடிந்து விழுந்துள்ளது.

இந்த சம்பவத்தில் 50 வீடுகள் சேதமடைந்துள்ளதாக கூறப்படுகிறது. இடிபாடுகளில் பலர் சிக்கியிருக்க கூடும் என்றும் அஞ்சப்படுகிறது.

மீட்கப்பட்ட அனைவரும் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இராணுவத்தினர் வரவழைக்கப்பட்டு மீட்புப் பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன.

கடந்த 18 வருடங்களுக்கு முன்பு கட்டப்பட்ட இந்த நீர்த் தேக்கத் தொட்டி வலுவிழந்து விட்டதாக பலமுறை அரசிடம் புகார் அளித்தும் எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை எனவும், இதுவே விபத்துக்கு காரணம் எனவும் பொது மக்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.



மும்பையில் நடைபெற்ற சிவ சேனா கட்சித் தலைவர் பால் தாக்கரேயின் இறுதி ஊர்வலத்தில் கலந்து கொண்ட பா.ஜ.க. மூத்தத் தலைவர் எல்.கே. அத்வானி, சுஷ்மா சுவராஜ், தேசிய வாத காங்கிரஸ் தலைவர் சரத் பவார் மற்றும் நடிகர் அமிதாப் பச்சன்.

# பிரதமர் மன்மோகன்சிங் உலக தலைவர்களுடன் சந்திப்பு

கிழக்காசியான் மாநாட்டில் கலந்து கொள்வதற்காக கம்போடியா தலைநகர் பொனம் பென்ச் (Phnom Penh) சென்றுள்ள பிரதமர் மன்மோகன்சிங், உலக தலைவர்கள் பலருடன் பேச்சு வார்த்தை நடத்துகிறார்.



அமைதி மற்றும் வளங்களை பகிர்ந்து கொள்வதற்கான ஆசியான்- இந்தியா மாநாடு அடுத்த மாதம் டெல்லியில் நடைபெற உள்ள நிலையில், அது குறித்து பிரதமர் விவாதிப்பார் என எதிர்பார்க்கப்படுகிறது. மேலும், நாளை நடைபெறும் கிழக்காசிய மாநாட்டிலும் பிரதமர் பங்கேற்க உள்ளார்.

அப்போது, கிழக்காசிய நாடுகளுடன் நட்புறவை வலுப்படுத்தும் கொள்கை ரீதியிலான பேச்சு வார்த்தையில் பிரதமர் மனமோகன்சிங் ஈடுபடுவார் என்று கருதப்படுகிறது.

இந்தியாவும் ஆசியான் அமைப்பு நாடுகளும், சேவை மற்றும் முதலீட்டுத்துறைகளில் தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் செய்து கொள்வதற்காக பேச்சு நடத்தி வருகின்றன.

இந்த ஒப்பந்தம் தனது பயணத்தின்போது கையெழுத்தாக நடவடிக்கை எடுக்க பிரதமர் திட்டமிட்டுள்ளார். பிரதமருடன் அவரது தேசியப் பாதுகாப்பு ஆலோசகர் சிவசங்கர் மேனன், முதன்மைச் செயலர் புலோக் சேட்டர்ஜி, அரசு உயர் அதிகாரிகள் உள்ளிட்டோர் சென்றுள்ளனர்.

# மகளிர் உற்பத்தி பொருட்களுக்கு கிராக்கியை ஏற்படுத்த

## ஜெயலலிதா ஏற்பாடு

மகளிர் குழு உற்பத்தி செய்யும் பொருட்களை விற்க, மாநில வழங்கல் மற்றும் விற்பனை சங்கம் உருவாக்கப்படும் என, முதல்வர் ஜெயலலிதா அறிவித்துள்ளார். தமிழக அரசின் செய்திக்குறிப்பு:



மகளிர் சுயஉதவிக் குழுத் திட்டத்தின் கீழ், 85.70 இலட்சம் மகளிரைக் கொண்ட, 5.56 லட்சம் சுய உதவிக்குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. இக்குழுக்கள் உற்பத்தி செய்யும் பொருட்கள், மாவட்ட வழங்கல் மற்றும் விற்பனை சங்கங்கள் மூலம் சந்தைப்படுத்தப்பட்டு வருகின்றன. மகளிர் சுய உதவிக்குழுக்கள் உற்பத்தி செய்யும் பொருட்களின் விற்பனையை அதிகரிக்கவும், மாநில, தேசிய மற்றும் சர்வதேச அளவில் சந்தைப்படுத்தவும்; மாநில வழங்கல் மற்றும் விற்பனை சங்கம் உருவாக்கப்படும். இதற்காக, 15 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து, முதல்வர் ஜெயலலிதா உத்தரவிட்டுள்ளார்.

மாவட்ட வழங்கல் மற்றம் விற்பனை சங்கங்களின் பணிகளை மேம்படுத்த, இந்த நிதியாண்டில் ஒரு மாவட்டத்திற்கு, 2.5 லட்சம் ரூபாய் வீதம், 31 மாவட்டங்களுக்கு, 77.50 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்தும், முதல்வர் உத்தரவிட்டுள்ளார். தற்போது செயல்பாட்டிலுள்ள மாவட்ட வழங்கல் மற்றும் விற்பனை சங்கங்களின் பணிகள், புதிதாக துவக்கப்படும் மாநில வழங்கல் மற்றும் விற்பனை சங்கத்துடன் ஒருங்கிணைக்கப்படும். இதன் மூலம் மகளிர் சுய உதவிக் குழு உற்பத்தி செய்யும் பொருட்கள், சர்வதேச அளவில் சந்தைப்படுத்தப்பட்டு, விற்பனை அதிகரிக்க வழிவகுக்கும். இவ்வாறு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

# நித்தியானந்தா சீடர்களால் அச்சுறுத்தல் உள்ளது

## மதுரை ஆதீனம்

சுவாமி நித்தியானந்தாவால் இப்போது மடத்துக்கு எந்த தொல்லையும் இல்லை, ஆனால் அவரது சீடர்களால் எனக்கு தொடர்ந்து அச்சுறுத்தல் உள்ளது என்று மதுரை ஆதீனம் கூறியுள்ளார்.

நித்தியானந்தாவை இளைய மடாதிபதியாக நியமித்து பின்பு நீக்கி அவரால் ஏற்படும் பிரச்சினைகளை சமாளிக்க வேண்டுமென்பதே இறைவனின் கட்டளை.

அது நிறைவேறியிருக்கும் நிலையில் அவரது சீடர்களால் எனக்கு அச்சுறுத்தல் உள்ளதென மதுரை ஆதீனம் அருணாகிரி நாதர் கூறியுள்ளார்.

மேலும் சுவாமி நித்தியானந்தாவின் பொருட்கள் அனைத்தும் மதுரை ஆதீன மடத்திலிருந்து எடுத்து செல்லப்பட்டு விட்டது.

மேலும் தற்போது மதுரை மடத்தின் இளைய மடாதிபதியாக யாரையும் நியமிக்கும் எண்ணம் இல்லை.

காலம் வரும்போது நியமிக்கப்படுவர். மதுரை ஆதீன மடத்தை அரசு கையகப்படுத்தாது என்று நினைக்கின்றேன் என்றார்.

# பாஸிலோனா அணி சம்பியன்



தீபாவளி பண்டிகையை முன்னிட்டு கண்டி மஹய்யாவ கிரீன் பாத் விளையாட்டுக் கழகம் ஒழுங்கு செய்த அணிக்கு ஏழு பேர் கொண்ட கால்பந்தாட்ட விளையாட்டுப் போட்டியில் பாஸிலோனா அணி வெற்றிபெற்றது.

இப்போட்டித் தொடர் மூன்று தினங்களாக இடம்பெற்றது. 16 அணிகள் பங்கு கொண்ட இத் தொடரில் இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்ற "பாஸிலோனா" அணியும் "பிளக் தண்டர்" அணியும் போட்டியிட்டன. 3 - 2 என்ற கோல் வித்தியாசத்தில் பாஸி லோனா அணி வெற்றி பெற்று, வேலு சவால் கேடயத்தையும் பணப் பரிசையும் பெற்றுக்கொண்டது.

கண்டி மாநகர சபை அங்கத்தவர் வீ.சிவஞானம், கண்டி கிரீன் பார்க் விளையாட்டுக் கழகத்தின் தவிசாளரும் கண்டி மாவட்ட தமிழ் பிரதிநிதித்துவத்திற்கான அமைப்பின் ஏற்பாட்டாளருமான வேலு குமார் ஆகியோர் பிரதம அதிதிகளாகக் கலந்து கொண்டனர்.

# மேற்கிந்தியத் தீவுகளின் ஒருநாள் அணி அறிவிப்பு

பங்களாதேஷிற்கு கிரிக்கெட் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள மேற்கிந்திய தீவுகள் அணிக்கும், பங்களாதேஷ் அணிக்குமிடையிலான 5 போட்டிகள் கொண்ட ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடருக்கான மேற்கிந்தியத் தீவுகள் அணி அறிவிக்கப்படடுள்ளது.

முதலாவது டெஸ்ற் போட்டியில் மேற்கிந்தியத் தீவுகள் அணி வெற்றிபெற்றுள்ள நிலையில் இரண்டாவதும் இறுதியுமான போட்டி எதிர்வரும் 21ஆம் திகதி ஆரம்பிக்கவுள்ளது.

இந்நிலையிலேயே ஒருநாள் சர்வதேசப் போட்டிக்கான அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

அறிவிக்கப்பட்டுள்ள அணியில், முதலாவது டெஸ்ற் போட்டியில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய வீரசம்மி பேர்மாள், கெரன் பவல் ஆகியோர் சேர்க்கப்பட்டுள்ளனர்.

முதலாவது டெஸ்ற் போட்டியில் சுனில் நரைனை விட வீரசம்பி பேர்மாள் பலமடங்கு சிறப்பாகப் பந்துவீசியதுடன், கெரன் பவல் இரு இனிங்ஸ்களிலும் சதம் பெற்று ஆட்டநாயகன் விருதையும் வென்றிருந்தார்.

அறிவிக்கப்பட்டுள்ள குழாம்:

டெரன் சமி, கெரன் பொலார்ட், ரீனோ பெஸ்ட், டெரன் பிராவோ, கிறிஸ் கெயில், சுனில் நரைன், வீரசம்பி பேர்மாள், கெரன் பவல், ரவி ராம்போல், கேமர் ரோச், அன்ட்ரே ரசல், மார்லன் சாமுவேல்ஸ், லெண்டில் சிமன்ஸ், டுவைன் ஸ்மித், டெவோன் தோமஸ்.

# இலங்கை – நியூசிலாந்து முதல் டெஸ்ற் 10 விக்கட்டுக்களால் இலங்கை வெற்றி

இலங்கை மற்றும் நியூசிலாந்து அணிகளுக்கு இடையிலான இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரின் முதலாவது போட்டியில் இலங்கை அணி 10 விக்கெட்களால் அபார வெற்றியீட்டியுள்ளது.

காலியில் இடம்பெற்ற முதலாவது டெஸ்டில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற நியூசிலாந்து அணி முதலில் துடுப்பாட்டத்தை தெரிவு செய்து 221 ஓட்டங்களைப் பெற்றது. இதில் பிரன்டன் மெக்கலம் 68 ஓட்டங்களையும் பிளைன் 53 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சல் இலங்கை அணி சார்பில் ரங்கண ஹேரத் 5 விக்கெட்களையும் எரங்க 3 விக்கெட்களையும் குலசேகர 2 விககெட்களையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு தமது முதல் இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி சகல விக்கெட்களையும் இழந்து 247 ஓட்டங்களைப் பெற்றது. இதில் இலங்கை அணி சார்பில் மஹேல ஜயவர்த்தன 91 ஓட்டங்களையும் மெத்திவ்ஸ் 79 ஓட்டங்களையும் பெற்றனர்.



பந்துவீச்சில் நியூசிலாந்து சார் பில் ரிம் சவுத்தி 4 விக்கெட் கன்ளயும் சமித் பட்டேல் 3 விக்கெட்களையும் போல்ட் 2 விக்கெட்களையும் வீழ்த்தினர்.

அதன் பின்னர் தமது இரண்டாவது இன்னிங்ஸை தொடர்ந்த நியூசிலாந்து அணி படுமோசமான துடுப்பாடடத்தை வெளிப்படுத்தி 118 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்களையும் இழந்தது. இதில் நியூசிலாந்து சார்பில் துடுப்பாட்டத்தில் எவரும் சோபிக்கவில்லை.

பந்துவீச்சில் மீண்டும் அசத்திய இலங்கை அணியின் 'ரங்கண ஹேரத் 6 விக்கெட்களை வீழ்த்தினார். சுராஜ் ரந்திவ் மற்றும் குலசேகர ஆகியோல் தலா இரண்டு விக்கெட்களை வீழ்த் தினர்.

இதன்படி 93 என்ற இலகுவான வெற்றியிலக்கை நோக்கித் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி விக்கெட் இழப்பின்றி அவ்விலக்கை அடைந்து 10 விக்கெட்களால் அபார வெற்றியீட்டியது. புதுமுக வீரர் குலரத்ன 60 ஓட்டங்களையும் பரணவித்தாரன 31 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காமல் பெற்றனர்.

# இந்திய கிரிக்கட் சபையின் ஊடகத்தடை: சர்வதேச ஒலிம்பிக் சபை கண்டனம் தெரிவிப்பு

INTERNATIONAL
OLYMPIC
COMMITTEE

இந்தியா - இங்கிலாந்து இடையிலான முதலாவது டெஸ்டில், மைதானத்தில் இருந்து புகைப் படங்களை எடுக்க கெட்டி இமேஜஸ், ஆக்சன் இமேஜஸ் போன்ற புகைப்பட நிறுவனங்களுக்கு இந்திய கிரிக்கெட் வாரியம் அனுமதி மறுத்து விட்டது.

இதைக் கண்டித்து ஏ.எப்.பி., ராய்ட்டர்ஸ், ஏ.பி., போன்ற சர்வதேச செய்தி மற்றும் புகைப்பட நிறுவனங்கள் இந்த போட்டியை புறக்கணித்துள்ளன. கிரிக்கெட் இணையதளமான ஈ.எஸ்.பி.என்-கிரிக் இன்போவும் இந்த டெஸ்ட் தொடர்பான நேரடி படங்களை வெளியிடவில்லை.

இந்நிலையில் இந்திய கிரிக்கெட் வாரியத்திற்கு சர்வதேச ஒலிம்பிக் வாரியம் (ஐ.ஓ.சி.) கண்டனம் தெரிவித்துள்ளது. இது தொடர்பாக ஐ.ஏ.சியின் பத்திரிக்கை பிரிவு சேர்மன் கெவான் கோஸ்பர் கூறுகையில், இந்திய கிரிக்கெட் வாரியத்தின் முடிவு ஐ.ஏ.சி.க்கு கடும் அதிருப்தி அளிக்கிறது. விளையாட்டு தொடர்பான நிகழ்ச்சிகளை வெளியிடும் ஊடக சுதந்திரத்தின் மீதான நேரடி தாக்குதலாக இதனை கருதுகிறோம்.

உலகம் முழுவதும் உள்ள விளையாட்டு ரசிகர்களை[illegible] இது அவமதிப்பதாகும்.

இந்த பிரச் சினையில் சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் தலையிடும் என்று நம்புகிறோம் என்றார்.

# ஃபுல்ஹாமை வென்றது சன்டர்லான்ட்

இங்கிலாந்து பிறீமியர் லீக் தொடரின் ஞாயிற்றுக்கிழமைப் போட்டியில் சன்டர்லான்ட் அணி வெற்றி பெற்றுள்ளது. ஃபுல்ஹாம் அணிக்கெதிரான போட்டியில் சன்டர்லான்ட் அணி 3-1 என்ற கணக்கில் வெற்றிபெற்றுக் கொண்டது.

போட்டி ஆரம்பித்தது முதல் சிறிது நேரத்திற்கு இரு அணிகளாலும் கோல்களைப் பெற்றுக்கொள்ள முடியாத நிலையில் போட்டியின் 31ஆவது நிமிடத்தில் ஃபுல்ஹாம் அணியின் ஹன்கெலான்ட் சிவப்பு அட்டை காண்பிக்கப்பட்டு வெளியேற்றப்பட ஃபுல்ஹாம் அணி 10 வீரர்களுடன் விளையாட வேண்டிய நிலை ஏற்பட்டது.

முதற்பாதியில் இரு அணியும் கோல்களைப் பெற்றுக்கொள்ளாத நிலையில் முதற்பாதி 0-0 என்ற கணக்கில் சமநிலையில் காணப்பட்டது.

இரண்டாவது பாதியில், போட்டியின் 51ஆவது நிமிடத்தில் சன்டர்லான்ட் அணியின் பிளெற்சர் முதலாவது கோலைப் பெற்றுக்கொடுத்து சன்டர்லான்ட் அணிக்கு முன்னிலையை வழங்கினார். ஆனால் 62ஆவது நிமிடத்தில் ஃபுல்ஹாம் அணி பதில-டியை வழங்க இரு அணிகளும் தலா ஒரு கோலோ சமநிலையில் காணப்பட்டன.

ஆனால் தொடர்ந்து சிறப்பாக விளையாடிய சன்டர்லான்ட் அணி போட்டியின் 65ஆவது, 70ஆவது நிமிடங்களில் மேலும் கோல்களைப் பெற்று 3-1 என்ற கணக்கில் வெற்றிபெற்றுக் கொண்டது. இப்போட்டியில் ஃபுல்ஹாம் அணிக்கு ஒரு மஞ்சள் அட்டை காண்பிக்கப்பட்ட அதேவேளை, சன்டர்லான்ட் அணிக்கு 3 மஞ்சள் அட்டைகள் காண்பிக்கப்பட்டிருந்தன.

# இங்கிலாந்து அணியை 9 விக்கெட் வித்தியாசத்தில் வீழ்த்தியது இந்தியா

இங்கிலாந்து அணிக்கெதிரான முதல் டெஸ்ட் போட்டியில் இந்திய அணி 9 விக்கெட் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றுள்ளது. இந்தியா- இங்கிலாந்து அணிகள் மோதும் முதல் டெஸ்ட் கிரிக்கெட் போட்டி அகமதாபாத்தில் நடைபெற்றது.

இந்திய அணி முதல் இன்னிங்சில் 521 ஓட்டங்கள் குவித்தது. இங்கிலாந்து அணி முதல் இன்னிங்சில் 191 ஓட்டங்களில் சுருண்டு பாலோ ஆன் பெற்றது.

2ஆவது இன்னிங்சை தொடர்ந்து ஆடிய இங்கிலாந்து அணி நேற்றைய 4ஆவது நாள் ஆட்ட நேர முடிவில் 5 விக்கெட் இழப்புக்கு 340 ஓட்டங்கள் எடுத்திருந்தது.

அணித்தலைவரும், தொடக்க வீரருமான அலிஸ்டயர் குக் சிறப்பாக விளையாடி சதம் கடந்து




168 ஓட்டங்களுடனும், பிரையர் 84 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

இதனைத் தொடர்ந்து நேற்றைய ஆட்டத்தில், இன்னிங்ஸ் தோல்வியை தவிர்க்க இந்த ஜோடியை ஒருவழியாக ஓஜா பிரித்தார். பிரையர் சதத்தை தவறவிட்டார். அவர் 11 பவுண்டரியுடன் 91 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தார்.

அப்போது இங்கிலாந்து அணியின் ஸ்கோர் 356 ஆக இருந்தது. 6வது விக்கெட் ஜோடி 157 ஓட்டங்கள் எடுத்தது. அவர் ஆட்டம் இழந்த சிறிது நேரத்தில் குக்கும் 176 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார்.

இப்பத்திரிகை இன்ஃபோமீடியா பிரைவேட் லிமிட்டட் நிறுவனத்தினால் இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியிலுள்ள தமது அச்சகத்தில் 20.11.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது